REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஏப்ரல் 18 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN

තිනකරන්

1932 - 2022

வரு. 90 இல. 89 | Monday 18, April, 2022 | 16 பக்கங்கள் | 30/-




**சட்டம், ஒழுங்கு, பொதுமக்களைப் பாதுகாக்க**

## முப்படை, பொலிஸார் பொறுப்புடன் பக்கச்சார்பின்றி செயற்படுகின்றனர்

**பொன்சேக்காவின் குற்றச்சாட்டுக்கு கமல் பதில்**

**ஸாதிக் ஷிஹான்**



பாதுகாப்புச் செயலாளர் மற்றும் முப்படைத் தளபதிகளுடன் இணைந்து நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம் சட்டம், ஒழுங்கு மற்றும் பொது மக்களைப் பாதுகாக்க முப்படைகளும் பொலிஸாரும் பொறுப்புடன் நேர்மையுடனும், மரியாதையுடனும் நியாயமான மற்றும் பக்கச்சார்பற்ற முறையில் செயற்படுவதற்கான தங்கள்

06

**நிதியமைச்சர் அலிசப்ரி தலைமையில்**

## IMF உடன் பேச்சு நடத்த இலங்கை குழு நேற்று பயணம்!

**வாஷிங்டனில் நாளை முதல் 24வரை பேச்சு**



சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெறவுள்ள கலந்துரையாடலுக்காக நிதியமைச்சர் அலிசப்ரி தலைமையிலான இலங்கை குழுவினர் நேற்று (17) அதிகாலை வாஷிங்டன் நோக்கி பயணமாகினர்.

அமெரிக்காவின் வாஷிங்டனில் சர்வதேச நாணய நிதியத்துடனான ஆரம்ப கட்ட பேச்சு வார்த்தைகள் நாளை 19ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவில் மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால்

06

**அரசிலிருந்து கொண்டே அரசை பலவீனப்படுத்தியோர்**

## சுயாதீனமாக இடைக்கால அரசை அமைக்கவும் முயற்சி

**SLPP தலைமையிலான அமைச்சரவையே ஸ்தாபிக்கப்படும் - சாகர காரியவசம்**



அரசாங்கத்தில் இருந்துகொண்டு அரசாங்கத்தை பலவீனப்படுத்தியவர்களை மீண்டும் ஒன்றிணைத்து அமைக்கும் இடைக்கால அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மை மீது நம்பிக்கை கொள்ள முடியாது.

அதனால் பொதுஜன பெரமுன தலைமையிலான அமைச்சரவையே ஸ்தாபிக்கப்படும் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு எதிராக திட்டமிட்ட வகையில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

06

**அரச செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல**

# புதிய அமைச்சரவை இன்று நியமனம்?

**15 அமைச்சர்கள் நியமிக்கப்படலாம் என தகவல் கசிவு**

**சமல், பசில், ஷசீந்திர உட்பட பல முக்கிய முன்னாள் அமைச்சர்கள் புதிய அமைச்சரவையில் இல்லை எனவும் தகவல்**

அரசாங்கத்தின் நடவடிக்கைகளை கொண்டு செல்வதற்காக புதிய அமைச்சரவை நியமிப்பதற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் புதிய அமைச்சரவை இன்றைய தினம் நியமிக்கப்படும் என தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன.

மட்டுப்படுத்தப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையுடன் இவ்வாறு அமைச்சரவை உருவாக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் புதிய சிலரும் அமைச்சர்களாக நியமிக்கப்படவுள்ளதாக அரசாங்கத்தின் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

புதிய அமைச்சரவை இன்று (18) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னிலையில் பதவியேற்கவுள்ளதாக அறிய வருகிறது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை கருத்திற் கொண்டு பிரதமர் தவிர்ந்த அமைச்சர்கள் அனைவரும் கடந்த 3 ஆம் திகதி பதவி விலகினார்கள். அனைத்து கட்சி பிரதிநிதிகளையும் உள்ளடக்கி புதிய அமைச்சரவையை நியமிக்க யோசனை முன்வைக்கப்பட்டது. இதற்காக எதிரணிக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதும் எதிரணி அதனை நிராகரித்தது. இந்த நிலையில் பாராளுமன்ற செயற்பாடுகளை முன்னெடுப்பதாகவும் அத்தியாவசிய சேவைகளுக்காகவும் 4 அமைச்சர்கள் மாத்திரம் நியமிக்கப்பட்டார்கள்.

இந்த நிலையில் புதிய அமைச்சரவை தொடர்பாக ஜனாதிபதி பல்வேறு தரப்பினருடன் பேச்சு நடத்தினார். பதவி விலகிய முன்னாள் அமைச்சர்களுடனும் அவர் இது தொடர்பில்

06

## அரசுக்கு ஆதரவாகவும் எதிராகவும் போராட்டங்கள்




## பிறர் நலன்களுக்காக எமது இலக்கை இழக்கலாகாது

**வடக்கு இளைஞருக்கு ஸ்ரீதரன் எம்.பி அறிவுரை**



காலிமுகத்திடலில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் போராட்டத்தில் பங்கேற்பதற்கு தயாராகிவரும் வட மாகாண இளையோரிடத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் விசேட வேண்டுகோளொன்றை முன்வைத்துள்ளார். பிற நலன்களுக்காக எமது இலக்கை இழந்து விடக்கூடாது என்று தெரிவித்துள்ள அவர், காலிமுகத்திடல் போராட்டத்தில் பங்கேற்பதற்கு முன்னதாக வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்காக, சரணடைந்து

06

**அந்நிய செலாவணி பயன்பாடு குறித்து**

## புலம்பெயர் இலங்கையருக்கு மத்திய வங்கியின் உறுதி மொழி



வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் அனுப்பும் அந்நிய செலாவணி தேவையற்ற விடயங்களுக்கு செலவு செய்யப்படாதென இலங்கை மத்திய வங்கி உறுதியளித்துள்ளது.

குறித்த பணம் உணவு, எரிபொருள் மற்றும் மருந்து போன்ற அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் என இலங்கை மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க குறிப்பிட்டுள்ளார். அத்தியாவசிய இறக்குமதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பை

06

## எரிபொருள் நெருக்கடி இன்று முதல் வழமைக்கு

**பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவிப்பு**

தற்போது நிலவிவரும் எரிபொருள் நெருக்கடியானது, இன்றைய தினம் வழமைக்கு திரும்புமென இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு ஊழியர்கள் விடுமுறையில் சென்றிருப்பதால் சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

ஆனால் இன்று முதல் எரிபொருள் நிரப்பு நிலைய செயற்பாடுகள் வழமைக்குத் திரும்புமென, எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு

06

**விக்கல் வீராச்சாமி**



என்ன முதலாளி லொறிக்கு பக்கத்திலேயே பாய் போட்டு படுத்து இருக்கிறீங்க, ஏன் யாரும் வாகனத்தை கடத்தி விடுவாங்களோ....

நீங்க வேற, நேத்துத்தான் ஃபுல் பேங்க் டீசலை 10 நாள் கியூவுல நிண்டு அடிச்சுக் கொண்டு வந்தன், அதுக்குத்தான் இந்த பாதுகாப்பு...!!!

## நேரத்தைக் கழிப்பதற்காகவே காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டம்

**தகுதியான காரணம் எதுவுமில்லை - கெஹலிய**



நேரத்தைக் கழிப்பதற்காகவே காலி முகத்திடலில் இளைஞர்கள் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் எனவும், தகுதியான காரணத்திற்காக அல்லவெனவும் பாராளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், "போராட்டங்களுக்கு

06

**நம்பிக்கையில்லா பிரேரணை;**

## TNA யின் நிலைப்பாடு செவ்வாயன்று தெரியும்

**பேச்சாளர் சுமந்திரன் அதிரடி**



ஐக்கிய மக்கள் சக்தியினால் கொண்டுவரப்படும் ஜனாதிபதிக்கு எதிரான குற்றவியல் பிரேரணை மற்றும் அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஆகியவை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்மானம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை

06

**கண்டியிலிருந்து கொழும்பிற்கு பேரணி;**

## நம்பிக்கையில்லா பிரேரணை விரைவில் சபாநாயகரிடம்

**ஐக்கிய மக்கள் சக்தி MPக்கள் குழு முடிவு**

அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை சபாநாயகரிடம் விரைவில் சமர்ப்பிக்க ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு தீர்மானித்துள்ளது.

பல பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் எதிர்வரும் பாராளுமன்ற அமர்வில் அதனை கையளிக்க நேற்று முன்தினம் (16) இரவு நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

06

## முதலாம் தரத்திற்கான ஆட்சேர்ப்பு 19 முதல்

**கல்வி அமைச்சினால் அறிவிப்பு**



2022ஆம் ஆண்டுக்கான முதலாம் தர மாணவர்களை அரச பாடசாலைகளில் சேர்த்துக்கொள்வதற்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

06




## முதலாம் தவணை கற்றல்கள்; பாடசாலைகள் இன்று ஆரம்பம்

**ஒரு மணிநேர நீடிக்கும் முடிவு இடைநிறுத்தம்**



அனைத்து அரச பாடசாலைகளின் முதலாம் தவணை கற்றல் நடவடிக்கைகள் இன்று (திங்கட்கிழமை) ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.


அத்தோடு பாடசாலை கல்வி நடவடிக்கைகளை மேலும் ஒரு மணிநேரம் நீடிக்கும் முடிவு இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. 2022ஆம் ஆண்டுக்கான புதிய தவணையின் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில், பாடசாலை நேரத்தை ஒருமணித்தியாலமாக

06

**நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி;**

## 10 தமிழ் அரசியல் கட்சிகள் யாழில் ஒன்றுகூடி ஆராய்வு

**குழு ஒன்றை அமைக்க தீர்மானம்**



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பாக அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து பொதுவான குழு ஒன்றினை அமைத்து அதனூடாக செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாக தமிழ் தேசிய கட்சியின் தலைவரும் சட்டத்தரணியுமான சிறீகாந்தா தெரிவித்தார்.

நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற தமிழ்க் கட்சிகள், சிவில் அமைப்புக்கள்,

06

## முன்னாள் அமைச்சர் பெசில் வெளிநாடு செல்லவில்லை

**தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதாக சாகர எம்.பி விளக்கம்**



இரத்மலானை விமான நிலையத்தின் ஊடாக முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறியதாக வெளியான செய்திகள் முற்றிலும் பொய்யானவை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி

06




**90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்**

## தற்போது நிலவுகின்ற விடயங்கள் குறித்து கலந்துரையாடல்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் தற்போது நிலவுகின்ற விடயங்கள் குறித்துபல கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.அதன் முதற் கட்ட கலந்துரையாடலில் நிதி அமைச்சர் அலி சப்ரி, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் கே.எம்.எம். சிறிவர்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.நிதி, வலுசக்தி மற்றும் சுகாதார அமைச்சுக்களின் அதிகாரிகளுடன் மற்றுமொரு கலந்துரையாடல் இடம்பெற்றது.





உயிர்த்த ஞாயிறு தினத்தையொட்டி கொச்சிக்கடை ஆலயத்தில் விசேட பிராத்தனை நடைபெற்ற போது...





உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு மட்டக்குளி மோதரை மிஸ்பா ஜெப மிஷனரி ஆலயத்தினால் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் சமாதானம், இறைஆசிர்வாதம் வேண்டி நடைபெற்ற பாதயாத்திரையின் போது.
(கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்)



உயிர்த்த ஞாயிறு தினத்தையொட்டி கம்பஹா ஆலயத்தில் விசேட பாதுகாப்பு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.






ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைமை மௌலவி முபாரக் அப்துல் மஜீதின் அனுசரணையின் கீழ் குருநாகல் மடிகே, மிடியால கிராமத்தில் கடந்த வருடம் நிர்மாணிக்கப்பட்ட குடிநீர் கிணறை கட்சியின் தேசிய அமைப்பாளர் சித்தீக் முஹம்மது சதீக் திறந்து வைத்தார். பயனாளி ஒருவருக்கு குடிநீர் வழங்குவதை படங்களில் காணலாம்.

## நன்கொடையளிக்கும் நாடுகளுக்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ் விளக்கமளிப்பு





நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், நிதியமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.யூ.எம். அலி சப்ரி மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஆகியோர் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் நடைபெற்ற மாநாட்டில் வைத்து நன்கொடையளிக்கும் நாடுகளுக்கு அறிவித்தனர். இந்த வாரம் இடம்பெறவுள்ள சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடலுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைப்படுத்தப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்து இராஜதந்திர சமூகத்திற்கு இதன்போது விளக்கமளிக்கப்பட்டது. இடைப்பட்ட காலத்தில் இணைப்பு நிதியுதவியை வழங்குமாறு நன்கொடையளிக்கும் நாடுகளுக்கு அமைச்சர்கள் அழைப்பு விடுத்தனர். பல்வேறு கேள்விகளுக்கு பதிலளித்த அவர்கள், பரந்தளவிலான கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டனர்.வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகேவும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்.

# மலைநாட்டு தமிழர் தலைவனாக திகழ்ந்த குஞ்சுப்பொரி சண்முகம் (குயின்ஸ்பெரி)

மிகுந்த விவாதத்துக்குள்ளான தலைமைக் கங்காணிமார்களைப் பற்றி இறுதியான விளக்கம் அளித்தார் காலஞ் சென்ற கல்கி. 'இந்தக் கனவான்கள் எங்கள் சமஸ்தானங்களிலுள்ள திவான்களின் இரத்தத் தொடர்புடைய சகோதரர்கள். மனிதர்களை மதிப்பிடுவதில் புத்திக்கூர்மையுள்ளவர்கள், இராசதந்திரத்திலும் நிர்வாகத்திலும் விற்பன்னர்கள்' என்று கல்கி கூறினார்.

காலஞ்சென்ற சண்முகம் இவ்வகுப்பின் ஒரு சிறந்த பிரதிநிதியாகவும் அம்முறையின் பாதுகாவலராகவுமிருந்தார். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் தலைமைக் கங்காணி முறையைப் போல வேறெந்த முறையும் அவ்வளவு வலுவான தாக்கப்பட்டதேயில்லை. இன்றும் அந்தத் தாக்குதல் நடந்து வருகிறது. ஆனால் அவர்களோ இன்றும் அதை ஆதரித்துப் போராடுவதைக் கைவிட்டு விடல்லை.

**தலைமைக் கங்காணிமுறை**:

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் பொதுவாகத் தலைமைக் கங்காணிமார் மிகவும் சக்தி வாய்ந்தவர்களாக இருந்தார்கள். ஆனால் அவர்கள் அதனை உணரவில்லை. எவ்வாறிருப்பினும், தோட்டப் பகுதிகளில் அவர்கள் இட்டதே சட்டமாயிருந்தது. அவர்கள் குலபதிகளாக, ஜாதித் தலைவர்களாக இருந்தனர். உண்மையிலே அவர்கள் தொழிலாளர்கள் என்னும் நூற்றுக்கணக்கான மனித இயந்திரங்களின் உடைமையாளர்களாயிருந்தனர். அவர்கள் எப்பொழுதுமே ஒரு கிராமத்திலிருந்து ஓரிரு பிரிவினரைச் சேர்ந்த குடும்பங்களைக் கூட்டங் கூட்டமாகக் கொண்டு வந்து தமக்குக் கீழ் வைத்திருந்தார்கள்.

அவர்களைக் காய்கறிகளைப் போல் எண்ணி நடத்தினார்கள். தலைமைக் கங்காணியே அவர்களின் செலவுக்குப் பணம் கொடுத்தார், வகிப்பதற்கு இடவசதி ஏற்படுத்தினார், அவர்களின் தகராறுகளைத் தீர்த்தார், அவர்களின் திருமண வைபவங்களிலும் மரண வீட்டுச் சடங்குகளிலும் முன்னின்று எல்லாவற்றையும் நடத்தினார். அவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் துணிகளையும் விற்றார். இதற்குப் பதிலாக தலைமைக் கங்காணிமார் 'பென்சுக் காசு' எனப்படும் சம்பளத்தைப் பெற்றனர்.

**கிளர்ந்தெழுந்த சண்முகம்**:

இம்முறையிலிருந்த அநீதிகள் குறித்து சேர் பொன். அருணாசலம், ஜோர்ஜ் ஈ.டீ.சில்வா, ஏ.எஸ். ஜோன், லாரிமுத்து கிருஷ்ணா போன்றவர்களிடமிருந்து கண்டனங்களை எழுந்தன. இம்முறை முழுவதையும் ஒழித்து விடுவதென இந்திய அரசாங்கமும் இலங்கை அரசாங்கமும் முடிவு செய்தன. தலைமைக் கங்காணிமார் தோட்டங்களிலிருந்து வெளியேற்றப்படும் ஆபத்திற்கு உள்ளானார்கள். அப்பொழுதுதான் தோட்டப்பகுதிகளின் 'திவான்கள்' சண்முகம் அவர்களின் தலைமையில் கிளர்ந்தெழுந்தனர்.

'தலைமைக் கங்காணிமார் பெரும் குடும்பங்களின் உண்மையான தலைவர்களாயிருக்கின்றனர். ஒரு பெரிய கூட்டுக் குடும்பத்தின் தந்தைமாராயிருக்கின்றனர். ஆதலால் அவர்களை விலக்க முடியாது' என்று அமரர் சண்முகம் வாதாடினார். 'எம்மை விலக்கினாலும் எமது மக்களின் குடும்பத் தகராறுகளிலும் சமூக சமயவிவகாரங்களிலும் தலையிட வெளியார்களை அனுமதிக் கமாட்டோம். சிலதலைமைக்கங்காணிமார் கெட்டவர்களாயிருக்கிறார்களென்பது உண்மைதான். ஆனால் எமது உறவினர்களை எடுத்து நீங்கள் வேறெருவரின் கையில் கொடுத்து விட முடியுமென்று அதற்கு அர்த்தமல்ல.' என்று சண்முகம் கடைப்பிடித்த நிலைப்பாடானது ஏ.எஸ். ஜோன், லாரி முத்துகிருஷ்ணா, பெரிசுந்தரம்,ந டேசஐயர் ஆகியோரின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற்றது.

அச்சமயத்தில் பெரிசுந்தரமும், நடேசஐயரும் ஒப்பந்தக் கூலி முறை ஒழிய வேண்டும் என்று விரும்பிய போதிலும் தலைமைக் கங்காணி முறையை ஆதரித்தார்கள்.

தெமோதறையைச் சேர்ந்த வெற்றிவேலும், நாகலையைச் சேர்ந்த ரெட்டியாரும், ஹாட்டிவில்லையைச் சேர்ந்த வேலாயுதம்பிள்ளையும், மஸ்கேலியாவைச் சேர்ந்த செட்டியப்பனும், றம்பொடையைச் சேர்ந்த செட்டியப்பனும், றம்பொடையைச் சேர்ந்த கறுப்பையாவும் மெடகும்புறவைச் சேர்ந்த குமாரனும், தெல்தோட்டையைச் சேர்ந்த சங்கரனும் அப்புத்தளையைச் சேர்ந்த அருணாசலமும், பிளாக் வாட்டர்ஸைச் சேர்ந்த வீரப்பன்தேவரும் போர்க்கோஷங்கள் எழுப்பினர்.

இந்த அதிபதிகள் எல்லோரிலும் வீரப்பன்தேவர் போர் உடை உடுத்தி யானை மீதேறிப் பெண்கள் பட்டாளம் பின்தொடர முன்னணிக்கு வந்து பிரச்சினையை முடிவு செய்யத் தனியாகத் தன்னுடன் போருக்கு நிற்குமாறு தோட்ட முதலாளிகள் சங்கத்தையும் நடேச ஐயரையும் அறை கூவியழைத்தார்.

சட்ட சபையையும் தோட்ட சபையையும் தோட்ட முதலாளிகள் சங்கத்தையும் எதிர்த்து வீமன் போல நின்றவர் குஞ்சுப்பொரி சண்முகமாவார். அவர் பென்சுக் காசையும் தலைமைக் கங்காணிமாரையும் காப்பாற்றினார்.

1930 ஆம் ஆண்டின் முற்பகுதியில் அவரும் தோட்ட முதலாளிகளைப் போலவே, கண்டியிலுள்ள குயீன்ஸ் ஹோட்டலில் யூனியன் கூட்டங்களை நடத்தினார். அவர் அமைச்சர்களையும், தொழிற்சங்கத் தலைவர்களையும், தோட்ட முதலாளிகள் சங்கப் பிரதிநிதிகளையும் ஒரே மேடைக்கு அழைத்தார். சுப்பிறின்டன்மார் நூரளையில் மீன் பிடித்தும் பந்து விளையாடியும் உல்லாசமாகப் பொழுது போக்கிக் கொண்டிருக்கையில், தலைமைக் கங்காணிமாரே தோட்டங்களில் பயிர் நட்டார்கள் என்று அவர்களிடம் தெரிவித்தார்.

'பெரியோர்களே! எமது மக்களை எடுத்து வெளியார்களின் கையில் கொடுக்கவேண்டாம் என்று உங்களைக் கேட்கிறேன்' என்றார் அவர்.

**வேலை நேரமும் ஓய்வு நேரமும்**:

சண்முகம் தமது அன்றாட வாழ்க்கையிலும் குறிப்பிடத்தக்கவராகவே விளங்கினார். தமது வேலை நேரங்களையும் ஓய்வு நேரங்களையும் நிர்ணயித்துக் கொண்டார். தலவாக்கலையிலுள்ள தமது தோட்டங்களிலே, தொழிலாளர் தகராறுகளைக் கவனிக்கவும் சமூக, சமய விவகாரங்களைப் பற்றி ஆலோசிக்கவும் ஒருநாளை ஒதுக்கி விடுவார். ஒரு சமயம் அவருடைய ஓய்வுநேரத்தில் குரூப் மனேஜர் அவருடைய அமைதியைக் குலைத்த போது அவர் தமது எஜமானரிடம் 'சேர், இது கெட்ட பழக்கம்'என்று தெரிவித்தார்.

தலைமைக் கங்காணிமார் சங்கக் கூட்டங்களுக்கு வருமாறு தொழிலாளர்களை அழைத்த தலைமைக் கங்காணிமார் சங்கம் தொழிலாளர்களுக்கும் சொந்தமான தாகுமெனப் பகிரங்கமாகக் கூறிய ஒரேயொரு தலைமைக் கங்காணி சண்முகம் அவர்கள்தான். அவர் பின்பற்றிய இந்த விவேகமான முறையிலேதான் குஞ்சுப் பொரித் தோட்டத் தொழிலாளர்கள் அவருடைய ஆயுட்காலத்தில் வேலைநிறுத்தம் செய்யாதிருந்தனர் போலும்.

சண்முகம் அவர்கள் தமது மாத வருவாயாகச் சிறுதொகையையே அதாவது 2000 ரூபா பெற்றாரெனினும், சகல நல்லகாரியங்களுக்கும் தாராளமாகப் பண உதவி செய்தார். காங்கிரசுக்கும் ஆண்டுதோறும் நன்கொடை வழங்கினார்.

சண்முகம் குஞ்சுப்பொரித் தோட்டத்தில் பல ஆண்டுகளாக வாழ்ந்தார். பாடுபட்டார். அதே தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் அவர் இன்றும் தமது சொந்தத் தொழிலாளர்களின் மரியாதையைப் பெறுகிறார். தொழிற்சங்கத்துறையிலும் அரசியல் துறையிலுமுள்ள அவருடைய நண்பர்கள் இன்றும் அவருடைய நினைவைப் போற்றுகின்றனர்.

மலைநாட்டு தமிழ் மக்கள் தலைவர்கள், மலைநாட்டு தமிழ் மக்கள் உரிமைப் போர்த்தளபதிகள் என்ற தலைப்புகளில் தமிழ் அறிந்த ஸி.வி. வேலுப்பிள்ளை 50களின் இறுதியில் எழுதிய தொடர் கட்டுரைகள் எழுத்தாளரும் ஊடகவியலாளருமான எச்.எச். விக்கிரமசிங்கவின் முயற்சியினால் மு.நித்தியானந்தன் (லண்டன்) அவர்களின் காத்திரமான அணிந்துரையுடன் விரைவில் நூல் வடிவம் பெறவுள்ளன.

நடேச ஐயர், ஏ. அஸீஸ், எஸ். தொண்டமான், ஜோர்ஜ் ஆர். மோத்தா, பெரிசுந்தரம், கே.ராசலிங்கம், ஐ.எக்ஸ்.பெரேரா, எஸ். பி.வைத்திலிங்கம், குஞ்சுப் பொரி சண்முகம், ஏஸ்.எக்ஸ். ஜோன், டி.சாரநாதன், எஸ்.பி.சிவனடியான்



ஆகிய கட்டுரை வரிசையில் குஞ்சுப் பொரி சண்முகம் என்ற கட்டுரையும் மீள்பிரசுரம் பெறுகிறது.

இக்கட்டுரைகளுடன் 'மலைநாட்டுத் தமிழ் மக்கள் உரிமைப் போர்த்தளபதிகள்' என்ற தலைப்பில் அவர் எழுதிய எஸ். செல்லையா, கே.குமாரவேல், வி.இராமானுஜம், திருமதி சிவபாக்கியம் குமாரவேல், பி.தேவராஜ், திருமதி கோகிலம் சுப்பையா, போஸ் ஆர்.எம்.செல்லையா, எஸ். நடேசன், கே.சுப்பையா, கே.ஜி. எஸ். நாயர், எஸ்.மாரியப்பா, எஸ். சோமசுந்தரம், எஸ்.எம்.சுப்பையா, வி.கே. வெள்ளையன் ஆகியோரின் கட்டுரைகளும் இந்நூலில் இடம் பெறுகின்றன.

மேற்குறிப்பிட்டவர்கள் புகைப் படங்கள், தகவல்கள் இருப்பின் தயவு செய்து இம்மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் அல்லது Whatsapp பண்ணவும்.

***hendry220649@gmail.com***
***0777 318 030***



தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஏப்ரல் 18 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN

**தொழுகை நேரம்**
19முதல் 24 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.44 |
| லுஹர் | 12.11 |
| அஸர் | 03.21 |
| மஃரிப் | 06.19 |
| இஷா | 07.30 |

**இன்றைய சுபதினம்**
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : பகல் : 07.30 - 09.00வரை
சுபநேரம் : காலை : 06.00 - 07.30வரை
யோகம்: அமிர்தமரணசித்த யோகம்
திதி: துவிதியை






## நோன்பும் உடல், உள் ஆரோக்கியமும்

மனிதனை ஆன்மீக ரீதியாகவும் லௌஹீக ரீதியாகவும் புடம்போட்டு நெறிப்படுத்துவதற்குரிய மிகச் சிறந்த ஏற்பாடாக நோன்பு விளங்குகிறது. நோன்பை அதற்கேயுரிய ஒழுங்கில் நிறைவேற்றும் ஒவ்வொருவரும் இந்த உண்மையை அறிந்தும் புரிந்தும் கொள்வர்.

அந்த வகையில் ரமழான் மாத நோன்பை நிறைவேற்றுவதன் ஊடாக இறைவிசுவாசிகளான முஸ்லிம்கள் பல விதமான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியவர்களாக உள்ளனர். குறிப்பாக ஆன்மீக மேம்பாட்டுக்கு மாத்திரமல்லாமல் ஆரோக்கிய முன்னேற்றத்திற்கும் பாதுகாப்புக்கும் பெரிதும் பங்களிக்கக்கூடியதாக இருக்கின்றது இந்நோன்பு.

அதனால் தான் நபி (ஸல்) அவர்கள், 'நோன்பு நோற்று வாருங்கள். ஆரோக்கியமடைவீர்கள்' (ஆதாரம்: தபரானி) என்று குறிப்பிட்டார்கள்.

இன்றைய நவீன விஞ்ஞானமும் ஏற்றுக்கொண்டுள்ள உண்மையே இது வாகும். அதாவது நோன்பின் மூலம் சுமார் பல மணித்தியாலயங்கள் உணவு, பானம் என்பன தவிர்த்துக் கொள்ளப்படுகின்றன. இந்த நோன்பு நேர காலத்தில் நாடுகள் மத்தியில் வேறுபாடுகள் காணப்பட்டாலும் குறைந்தது 10, 12 மணித்தியாலயங்களாவது ஒவ்வொரு நாளும் நோன்பு நேர காலமாக இருக்கும். இது இலங்கையில் 13, 14 மணித்தியாலங்களாகக் காணப்படுகின்றது. இவ்வாறு இஸ்லாத்தின் வழிகாட்டல்களின் படி உணவையும் பானத்தையும் தவிர்ப்பு தம்மைப் படைத்து பரிபாலிக்கும் அல்லாஹ்வுக்காக நோன்பு நோற்பதன் பயனாக உணவுத் தேவைக்கான தூண்டுதல்களும் உடலினுள் ஏற்படுவதும் அரிதாகவே இருக்கும்.

இவ்வாறு நோன்பு நோற்பதன் பயனாக உடலின் சமிபாட்டு உள்ளுறுப்புகள் தினமும் பல மணித்தியாலயங்கள் ஓய்வைப் பெற்றுக்கொள்ளுகின்றன. அத்தோடு நோன்பு அதற்கேயுரிய ஒழுங்கில் நிறைவேற்றப்படுவதன் ஊடாக உள்ளமும் அமைதி பெறுகின்றது.

இவற்றின் பயனாக மனிதனின் உடல், உள ஆரோக்கியத்திற்கு பாரிய பங்களிப்பு செய்யக்கூடியதாக விளங்குகிறது நோன்பு. ஆகவே ரமழான் நோன்பு கடமையை அல்லாஹ்வின் கட்டளைக்கும் முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களுக்கும் ஏற்ப நிறைவேற்றி உடல், உள ஆரோக்கியத்தையும் அடைந்து கொள்வோம்.

மர்லின் மரிக்கார் ...

# அமைச்சுப் பொறுப்பு ஏற்கத் தயாரில்லை

### முன்னாள் அமைச்சர் பந்துல, வீரசேகர அறிவிப்பு



புதிய அமைச்சரவையில் அமைச்சுப் பொறுப்பு எதனையும் ஏற்கப் போவதில்லை என முன்னாள் வர்த்தக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன மற்றும் சரத் வீரசேகர ஆகியோர் தெரிவித்துள்ளனர்.இது தொடர்பில் பந்துல குணவர்தன , ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ள அதேவேளை, தான் அமைச்சு பொறுப்பு ஏற்க தயாரில்லை என சரத் வீரசேகரவும் தனது டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நெருக்கடிக்கு தீர்வு காண இளைஞர்கள் அடங்கிய அமைச்சரவையொன்று நியமிக்கப்பட வேண்டுமெனவும், அவர்களுக்கு இடமளிக்கும் அமைச்சரவையின் பொறுப்பை ஏற்கப் போவதில்லை எனவும் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் அமைச்சர் பந்துல குறிப்பிட்டுள்ளார்.

குறுகிய காலத்திற்கு சுமார் 15 பேர் கொண்ட அமைச்சரவையை நியமிக்குமாறும் நெருக்கடிக்கு தீர்வு கிடைத்தவுடன் அமைச்சரவைக்கு மேலும் அமைச்சர்களை நியமிக்கலாம் எனவும் அவர் யோசனை தெரிவித்துள்ளார்.

மேலும், குறுகிய காலத்தில் மேற்கொள்ளவேண்டிய பல மாற்றங்களை அவர் தனது கடிதத்தில் பரிந்துரைத்துள்ளார்.

இதே வேளை இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலை காரணமாக புதிய அமைச்சரவையில் எந்த அமைச்சுப் பதவியையும் ஏற்கப் போவதில்லை என முன்னாள் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். தனது டுவிட்டர் பக்கத்தில் இது தொடர்பில் தெரிவித்துள்ள அவர் தான் என்றும் நாட்டின் இறைமை, பௌத்த சாசனம் மற்றும் மக்கள் நலனுக்காகவே செயற்பட்டதாகவும் எதிர்காலத்திலும் தனது கடமையை நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறைந்த எண்ணிக்கையிலான புதிய அமைச்சரவை நியமிக்கப்பட உள்ளதோடு இதில் இளைஞர்களுக்கு அதிக வாய்ப்பு வழங்கப்பட இருப்பதாக அறிய வருகிறது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை தொடர்ந்து கடந்த 3 ஆம் திகதி அமைச்சரவை பதவி விலகியது. பாராளுமன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அத்தியாவசிய தேவைகளுக்காகவும் 4 அமைச்சர்கள் மாத்திரம் நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (பா)

## காலி ஆர்ப்பாட்ட கூடாரம் பொலிஸாரினால் அகற்றப்பட்டு மீண்டும் நிர்மாணிப்பு

கொழும்பு காலிமுகத்திடலில் இடம்பெற்றுவரும் அரசுக்கு எதிரான போராட்டத்திற்கு ஆதரவாக காலி நகரில் ஆர்ப்பாட்டக்காரர்களால் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கூடாரங்களை பொலிஸார் நேற்று அதிகாலை அகற்றியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

கொழும்பில் இடம்பெற்று வரும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து காலியில் இரண்டு நாட்களாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் தற்காலிக கூடாரம் அகற்றப்பட்டதற்கு கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்ட நிலையில் மீண்டும் அவை நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக அறிய வருகிறது.

## கால்வாயில் வீழ்ந்தது மோட்டார் சைக்கிள்

### இரு மாணவர்கள் உயிரிழப்பு



தம்புள்ளை வேமடில்ல நீர்த்தேக்க கால்வாயில் வீழ்ந்து கலேவல பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயதுடைய பாடசாலை மாணவர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர். மேலும் இருவர் காயமடைந்து தம்புள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி நால்வரும் ஒரே மோட்டார் சைக்கிளில் பயணித்ததாகவும் வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் நீர்த்தேக்கத்தில் வீழ்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 70 அடி பள்ளத்தில் மோட்டார் சைக்கிள் வீழ்ந்து இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. தம்புள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

விரைவில் உரிய வசதி செய்து தரவும்;

# இலங்கைத் தமிழருக்கு அத்தியாவசிய பொருட்கள்

### ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் மீண்டும் கடிதம்



இலங்கை தமிழர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை அனுப்ப விரைவில் உரிய வசதி செய்துதர வேண்டும் என மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு எழுதிய கடிதத்தில் முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து மத்திய அமைச்சர் ஜெய்சங்கருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள தீவிர பொருளாதார நெருக்கடியினால், அத்தியாவசியப் பொருட்களின் கடும் விலை உயர்வு மற்றும் தட்டுப்பாடு காரணமாக இலங்கைத் தமிழர்கள் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு தமிழ்நாட்டை நோக்கி வரத் தொடங்கி உள்ளனர். குறிப்பாக கடந்த 22.03.2022 அன்று 16 நபர்கள் (கைக்குழந்தை உட்பட) கடல் மார்க்கமாக தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்தனர். இந்நிலையில் தமிழ்நாடு முதல்வரின் வழிகாட்டுதலின் பேரில் அவ்வாறு வரும் இலங்கை தமிழர்கள் இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் முகாமில்

06

## ஜெனரேட்டர் வெடித்ததில் தாயும் மகளும் உயிரிழப்பு



வெலிமடை – கெப்பட்டிப்பொல பகுதியில் ஜெனரேட்டர் வெடித்ததில் தாயும் மகளும் உயிரிழந்துள்ளனர்.

மின்வெட்டு காரணமாக கடந்த 29 ஆம் திகதி பாவனைக்குட்படுத்தப்பட்ட ஜெனரேட்டர் வெடித்தமையினால் 38 வயதான தாயும் அவரின் 9 வயதான மகளும் 4 வயதான மகனும் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிறார்கள் இருவரும் மேலதிக சிகிச்சைகளுக்காக சீமாட்டி ரிட்ஜ்வே வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதுடன், சிறுமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த (15) அதிகாலை தாய் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.



இந்தியாவிலுள்ள இலங்கை உதவி உயர் ஸ்தானிகர் டாக்டர் டி. வெங்கடேஸ்வரன் கடந்த மார்ச் 29 ஆம் திகதி புதுடில்லிக்கு விஜயம் செய்தார். அவர் அன்று முதல் ஏப்ரல் 1 ஆம் திகதி வரை புதுடில்லியில் தங்கி இருந்து அரச அதிகாரிகளையும் வணிகப் பிரதிநிதிகளையும் சந்தித்தார். இந்த விஜயத்தில், பிரதி உயர்ஸ்தானிகர் அரிந்தம் பாக்ச்சி, வெளிவிவகார அமைச்சின் உத்தியோகபூர்வ செய்தித் தொடர்பாளர் மற்றும் இணைச் செயலர் ஆகியோரையும் செய்தித் தொடர்பாளர் அலுவலகத்தில் சந்தித்தார்.

# காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் தமிழ் தரப்புகளுக்கு எதிர்ப்பு தெரிவிப்பு

தமிழ் தரப்புக்களால் நடத்தப்படும் இரண்டு கூட்டங்களுக்கு எமக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் அதில் பங்கேற்க மாட்டோம் என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

இரண்டு தமிழ் தரப்புகளால் இரண்டு கூட்டங்களில் பங்கேற்க எங்களுக்கு அழைப்பு வந்தது. இந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்க மாட்டோம் என முடிவு செய்துள்ளோம்.

இந்த இரண்டு தரப்பும் தமிழர்களின் அரசியல் ஆசையை தீர்க்க அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளை அழைத்து உதவி கோர முடிவு செய்தால் நாங்கள் எதிர்கால கூட்டத்தில் பங்கேற்போம்.

கடந்த 74 வருடங்களாக சிங்களவர்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடுவது வீண் வேலை என வரலாறு கூறுகிறது. இதன் அடிப்படையிலேயே வட்டுக்கோட்டைத் தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆட்சி மாற்றத்திற்காக சிங்களவர்களுடன் ஒப்பந்தம் செய்வது நாம் செய்யும் துரோகமாகும்.

சிங்களவர்களுடன் ஒப்பந்தம் போடுவது சர்வதேச அரங்கில் தமிழர்களை பலவீனப்படுத்தும். தமிழர்களும் சிங்களவர்களும் ஒன்றிணைந்து செயற்பட முடியும் என்பதை இது உணர்த்தும். இந்த வகையான பார்வை அமெரிக்காவையும் ஐரோப்பிய ஒன்றியத்தையும் அவர்களின் எதிர்கால மத்தியஸ்த நிலையை புறக்கணிக்க வைக்கும்.

மேலும் தமிழ் இளைஞர்கள் சிங்கள இளைஞர்களுடன் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவது தமிழர்களை மேலும் பலவீனப்படுத்தும். தமிழ் இளைஞர்களை பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது செய்ய இது வழி வகுக்கும்.மேலும் அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் தற்போது ஜெனிவாவில் உள்ள ஐ.நா தீர்மானத்தை வாபஸ் பெறுவது பற்றி சிந்திக்கலாம்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலை தொடரட்டும். இலங்கை நிதி ரீதியாக உடைந்தால் அது அவர்களை நில அபகரிப்பு வடக்கு கிழக்கில் இலங்கை பௌத்த சின்னங்கள் கட்டுதல் மற்றும் சிங்கள இராணுவத்தை வைத்திருப்பதை நிறுத்தச் செய்யும். இவை நமது தாயகத்தை பொருளாதார மந்தநிலையிலிருந்தும் நமது இளைஞர்களை குற்றச் செயல்கள் மற்றும்


புத்திஜீவிகள் அமைப்பொன்றும் அரசியல் கட்சி ஒன்றும் எம்மை அழைத்துள்ளனர். இவ் இரு அமைப்புகளும் சிங்கள தரப்போடு ஒப்பந்தம் செய்வது தமிழினத்துக்கு செய்கின்ற துரோகம் என்று நாங்கள் கூறுகின்றோம்.

அதாவது இந்திய அரசிற்கு கடிதம் அனுப்பிய சிவாஜிலிங்கம் தரப்பும் மற்றும் செல்வராசா கஜேந்திரன் தரப்புமே

06

# இராணுவம் குறித்து தவறான, தீங்கிழைக்கும் ஊடக அறிக்கைகள்

### ஏமாறவோ நம்பவோ வேண்டாம்: இராணுவம்



இராணுவம் குறித்து தவறான மற்றும் தீங்கிழைக்கும் ஊடக அறிக்கைகளால் பொதுமக்கள் ஏமாற வேண்டாம் என கேட்டுக்கொள்வதாக இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

சில தரப்பினரின் தவறான வழிநடத்தல் மற்றும் தவறான விளக்கங்களினால், படையினர் தொடர்பாக மேற்கொள்ளப்படும் அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் மற்றும் முயற்சிகளை பொதுமக்கள் மத்தியில் பிரசாரம் செய்து நாடு முழுவதும் அர்ப்பணிப்புடன் பணியாற்றும் இராணுவத்தை களங்கப்படுத்தும் முயற்சிகள், இராணுவத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக, பல்வேறு குழுக்களும், தங்களது சொந்த நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப, இராணுவம் வன்முறையைத் தூண்டுவதற்குத் தயாராகி வருவதாகவும்,

06

# எங்கள் கருத்தை ஏற்காவிடின் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு ஆதரவு

### சுயாதீன எம்.பிகள் குழு அரசுக்கு எச்சரிக்கை

தங்களின் நிலைப்பாட்டை ஏற்காவிட்டால் நாடு முழுவதும் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களுக்கு ஆதரவு வழங்க முடிவு செய்துள்ளதாக சுயாதீனமாக செயற்படுவதாக அறிவித்துள்ள எம்.பிகள் குழு அறிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்காக அவை முன்வைத்த யோசனையை அரசாங்கம் நிராகரித்ததன் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தமது குழுக்களுடன் கலந்துரையாடும் நிலையில் தங்களின் எம்.பிகளை தமது பக்கம் இழுக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகளை தமது குழு வன்மையாகக் கண்டிப்பதாகவும் அரசுடனான பேச்சுக்களை மீள ஆரம்பிக்க வேண்டுமாயின் அவர்களை உடனடியாக பதவியிலிருந்து நீக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

தமது குழுவின் கருத்துக்களுக்கு அரசாங்கம்

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 231.59 | 242.38 |
| கனடியன் டொலர் | 246.80 | 257.29 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5138 | 2.6172 |
| சிங்கப்பூர் டொலர் | 228.89 | 237.32 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 407.08 | 421.89 |
| சுவிஸ் பிராங்க் | 332.87 | 346.20 |
| அமெரிக்க டொலர் | 310.88 | 321.49 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 793.02 | கட்டார் ரியால் | 81.82 |
| குவைத் டினார் | 981.29 | சவூதி ரியால் | 79.71 |
| ஓமான் ரியால் | 776.61 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 81.40 |

தினகரன்
THINAKARAN தினகரன்
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சுபகிருது வருடம் சித்திரை மாதம் 05ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரமழான் பிறை 16

### குறள் தரும் சிந்தனை



சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றுங் களிறு

உடல் முழுதும் அம்புகளால் துளைக்கப்பட்டாலும் யானையானது உறுதி தளராமல் இருப்பது போல, ஊக்கமுடையவர்கள், அழிவே வந்தாலும் அதற்காகக் கவலைப்படமாட்டார்கள்.

# எரிபொருள், எரிவாயு பற்றாக்குறையை உருவாக்கும் தவறான செயற்பாடுகள்!

கொவிட் 19 தொற்று தோற்றுவித்துள்ள பொருளாதார சவாலின் விளைவாக நாடு முகம் கொடுத்துள்ள பிரதான நெருக்கடியாக அந்நிய செலாவணிப் பற்றாக்குறை விளங்குகின்றது. இத்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கையும் உலகின் பல நாடுகளும் முன்னெடுத்த கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் விளைவாக டொலர் பற்றாக்குறை இன்றைய பிரச்சினைக்கு வித்திட்டிருக்கின்றது.

இந்த அந்நிய செலவணிப் பற்றாக்குறையின் காரணமாகப் பொருளாதார ரீதியில் பல பிரச்சினைகள் நாட்டில் ஏற்பட்டுள்ளன. அவற்றில் எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. இவை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுபவையாகும். அவற்றை இறக்குமதி செய்ய அந்நியச் செலவணி மிக அவசியம்.

அதனால் தற்போதைய பொருளாதார சவாலின் விளைவாக ஏற்பட்டுள்ள அந்நிய செலாவணி பற்றாக்குறையினால் அவற்றை முன்பு போன்று இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதாவது முன்னர் போன்று அவற்றை இறக்குமதி செய்ய முடியாதுள்ளது. என்றாலும் இப்பொருளாதார சவாலுக்கு மத்தியிலும் இந்தியா உள்ளிட்ட நட்பு நாடுகளின் கடனுதவிகளைக் கொண்டு, இந்நெருக்கடி மக்களுக்கு சுமையாக அமைவதைக் குறைத்து தவிர்க்கும் நடவடிக்கைகள் அரசினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன் பயனாக இப்பொருளாதார நெருக்கடி தோற்றம் பெறுவதற்கு முன்பிருந்த இயல்பு நிலை இன்னும் ஏற்படாதுள்ள போதிலும், கடந்த இரண்டொரு தினங்களாக எரிபொருள் மற்றும் எரிவாயுவைப் பெற்றுக் கொள்வதற்காக நீண்ட வரிசையில் காத்திருப்போரின் எண்ணிக்கை குறைவடைந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதனால் இந்த எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாட்டு பிரச்சினை எதிர்வரும் நாட்களில் முடிவுக்கு வந்து விடும் என அதிகாரிகளும் குறிப்பிட்டிருக்கின்றனர்.

நாட்டில் நிலவிக் கொண்டிருக்கும் எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாட்டைத் தீர்த்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை பாரிய சவால்களுக்கு மத்தியில் அரசாங்கம் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது. இது மறைக்க முடியாத உண்மையாகும்.

இவ்வாறான சூழலில் எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் தொடர்பில் மூன்று விதமான செயற்பாடுகளை அற்ப இலாபம் பெற்றுக் கொள்ளும் வகையில் சிலர் மேற்கொண்டுள்ளனர். அதாவது சிலர் இவற்றை எதிர்காலத் தேவையின் நிமித்தம் பதுக்கி வைக்கும் நடவடிககைகளை முன்னெடுத்திருக்கின்றனர். இன்னும் சிலர் எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் இருந்து கொள்கலன்களில் எரிபொருளைப் பெற்று அதிக விலைக்கு வேறு பிரதேசங்களில் விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். மேலும் சிலர் கொள்கலன்களில் எரிபொருளைப் பெற்று எதிர்காலத்தில் அதிக விலைக்கு விற்பனை செய்ய முடியும் என்ற எதிர்பார்ப்பிலும் பதுக்கி வைக்கின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளின் விளைவாக, முன்னரைப் போன்றல்லாது எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் பெற்றுக் கொள்ளும் எரிபொருட்கள் சில மணித்தியாலங்களுக்குள்ளேயே விற்றுத் தீர்ந்து விடக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இவ்விதமான செயற்பாடுகள் காரணமாக நாடு முகம் கொடுத்துள்ள எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு தீர்வை எட்ட முடியாத நிலையைத் தோற்றுவித்திருப்பதாக கூறப்படுகின்றது.

அந்த வகையில் ஜாஎல, பமுனுவ எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் 04 பௌஸர்கள் பெற்றோல் மற்றும் டீசல் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டன. அதேபோன்று கினிக்கத்தேன பிரதேசத்தில் 230 சமையல் எரிவாயு சிலிண்டர்களை தனிநபர் ஒருவர் மறைத்து வைத்திருந்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு சிலிண்டர்களும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

நாட்டில் எரிபொருளுக்கும் எரிவாயுக்கும் தட்டுப்பாடு நிலவிக் கொண்டிருப்பதோடு, அவற்றைப் பெற்றுக் கொள்ளவென நீண்ட வரிசைகளில் மணித்தியாலக்கணக்கில் மக்கள் காத்திருக்கின்ற போதிலும், இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. ஆனால் நாடு பொருளாதார ரீதியில் நெருக்கடிக்கு முகம் கொடுத்திருக்கும் சூழலில் தம் அற்ப இலாபத்திற்காக இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பது முற்றிலும் தவறானதும் பிழையானதுமான நடவடிக்கையாகும்.

இவ்விதமான சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்று வருவது குறித்து பொலிஸாருக்கு கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் தேடுதல் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆகவே தற்போதைய சூழலில் அற்ப இலாபத்தை விடவும் நாட்டினதும் மக்களினதும் நலன்களைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். இது ஒவ்வொரு பிரஜைக்கும் முன்பாக உள்ள பாரிய பொறுப்பாகும். அதனை உணர்ந்து செயற்படுவது இன்றியமையாததாகும்.

editor.tkn@lakehouse.lk

# பொருளாதார நெருக்கடிக்கான பின்னணி காரணிகள் ஏராளம்!




இலங்கையில் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணுமாறு மக்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தி வருகின்றனர். ஆனால் இந்த நிமைக்கான காரணம் பற்றியோ, இதற்கான தீர்வு பற்றியோ ஊடகங்கள் பெரிதாக அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை. சமூகவலைத்தளங்களும் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை.

ஆட்சியில் இருப்போர் வீட்டுக்குச் சென்றால் நெருக்

## அரசு மீது மாத்திரம் குற்றம் காண்பது அநீதி!

கடிகள் அத்தனையும் தீர்ந்து விடுமா என்றால் அதற்கும் எவரிடமும் இருந்து ஆக்க பூர்வமான பதில் இல்லை என்பதே இன்றைய இந்த போராட்டங்களின் அவலமாக உள்ளது. இன்றைய பொருளாதார நெருக்கடி நிலைக்கான அடிப்படைக் காரணம், முப்பது ஆண்டு காலத்திற்கும் மேலான போரும் அதற்காகச் செலவிடப்பட்ட பெருமளவு நிதியும் என பலரால் குறிப்பாக தமிழர் தரப்பால் சொல்லப்பட்டாலும் அது மட்டும்தான் காரணமில்லை.



1977 ஆம் ஆண்டு ஜயவர்த்தன அரசு பதவி ஏற்றவுடன் முன்னெடுக்கப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை, அவரால் நடைமுறைப்படுத்தப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறைமை, இந்து சமுத்திர பிராந்தியத்தின் கேந்திர முக்கியம் வாய்ந்த இடத்தில் இருக்கும் இலங்கைத் தீவு தொடர்பில் இந்தியா உட்பட்ட மேற்குலக நாடுகளின் புவிசார் நலன், அதனுடன் சேர்ந்து கொண்ட உள்நாட்டுப் போர், இறுதியாக Covid19 பெருந்தொற்று போன்ற பல காரணிகளின் தொடர் அணிவகுப்பே இன்றைய நெருக்கடிக்கு அடிப்படை காரணிகள் என்பதை வரலாற்று ஆய்வாளர்கள் மறுக்கப் போவதில்லை.

ஜயவர்த்தன அரசினால் நடப்பட்ட திறந்த பொருளாதாரம் என்கின்ற விதை முளை விட்டு, தொடர்ந்து வந்த அரசாங்கங்களால் சிறுக சிறுக நீரூற்றி வளர்க்கப்பட்டு, இறுதியாக கடந்த நல்லாட்சி ஆட்சிக் காலத்தில் விருட்சம் விட்டு வளரும் அளவுக்கு உரம் இடப்பட்டதனால் உண்டான அதன் கனிகளை அறுவடை செய்து கொண்டிருக்கிறது இன்றைய அரசு.

**இலங்கை கடந்து வந்துள்ள பாதையில், பொருளாதாரத்தை சீர்குலைத்தமைக்கான காரணிகள் ஆழமாக ஆராயப்படுவது அவசியம்**



இன்றைய ஆளும் அரசு பதவி விலக வேண்டும், காபந்து அரசு அமைக்கப் படவேண்டும் அல்லது தேர்தலுக்கு செல்ல வேண்டும் என குரல் கொடுப்பவர்களில் முக்கியமானவர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச. இவர் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி நாட்டிற்கு புதிய கட்சியாக இருந்தாலும் இன்றைய நாட்டின் அவலங்களுக்கு காரணியாக இருந்த சக்திகளில் முதன்மை பெறுவது கடந்த நல்லாட்சி அரசு ஆகும். அன்றைய நல்லாட்சி அரசில் சஜித் உட்பட அவரது கட்சியில் அங்கம் வகிக்கும் 54 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அங்கம் வகித்தவர்கள் ஆவர். இவ்வாறான நிலையில்அவர் இன்றைய அரசை பதவி விலகக் கோருவது பொருத்தமானதா? இக்கேள்வி நியாயமானதாகும்.

கோட்டாபய தலைமையிலான அரசை பதவி விலகக் கோரும் மற்றொரு கட்சியான ஜே.வி.பி 2005 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற போது அவரது அரசுக்கு ஆதரவு கொடுத்து அந்த அரசில் அமைச்சுப் பதவிகளை வகித்த கட்சியாகும்.

போர் வலுப்பெற்று அந்த யுத்தத்திற்காக பெரும்தொகைப் பணம் செலவாவதற்கு அந்த அமைப்பினரும் ஒரு காரணமாக இருந்தவர்களாவர். இறுதிப் போரை நடத்தத் தூண்டியது ஜே.வி.பிதான் என்று அப்போது பிரதமராக இருந்த அமரர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவே பகிரங்கப்படுத்தியிருந்தார்.

முப்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொடர் போரின் நீட்சியாகவே 2009 இல் நடத்தப்பட்ட வன்னியின் இறுதிப்போர் அமைந்திருந்தது. இந்த காலப் பகுதியில் போரைத் தவிர்த்து அமைதிச் சூழலுக்கான பல வாய்ப்புகள், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டும் தொடர்ச்சியாகப் போர் நடக்க காரணமாக இருந்த புலிகள் அமைப்பு, ஜே.வி.பி உட்பட சிங்கள இனவாதக் கட்சிகள், நாட்டை ஆண்ட அரசாங்கங்கள் அனைவரும் இன்றைய பொருளாதார நெருக்கடி மற்றும் விலைவாசி உயர்வுக்கான முழுப் பொறுப்பையும் ஏற்றே ஆக வேண்டும். புலிகள் அமைப்பின் ஆதரவாளர்கள் உட்பட இன்றைய அரச எதிர்பாளர்கள் அனைவருமே இந்த நெருக்கடிக்கு பொறுப்பு கூற வேண்டியவர்கள் என்கிற யதார்த்தத்தை யாரும் மறுக்க முடியாது.

போரினால் முற்றாகச் சிதிலமடைந்த வடக்கு, கிழக்கு உள்ளிட்ட இலங்கைத்தீவின் உள்ளூர் சுயபொருளாதார கட்டமைப்புகளை ஊக்குவிக்கும் செயல் திட்டங்கள் எதுவும் எவராலும் வகுக்கப்படவில்லை. முன்மொழியப்பட்ட சில அபிவிருத்தித் திட்டங்களும் அதிகாரிகளினதும், உள்ளூர் அரசியல்வாதிகளினதும் அலட்சியத்தினால் கிடப்பில் போடப்பட்டன.

உட்கட்டுமான அபிவிருத்தியில் காட்டப்பட்ட ஆர்வமும் கவனமும் தொழில் துறையை அபிவிருத்தி செய்து உள்ளூர் உற்பத்திகளை பெருக்குவதில் காட்டப்படவில்லை. போர் இல்லாதொழிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் பின்னரான பன்னிரண்டு ஆண்டு காலப் பகுதியிலும் கூட பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு அதிகரித்தே காணப்பட்டது.

முன்னைய அரசாங்கத்தைக் குறை கூறி 2015 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஆட்சி மாற்றமான மைத்திரி_ ரணில் அரசாங்கத்தில் மாபெரும் மோசடியாக மத்திய வங்கி பிணை முறி ஊழல் அமைந்திருந்தது. நல்லாட்சி அரசானது சொற்ப அளவிலேனும் சுயபொருளாதார ஸ்திரத்தை பேணத் தவறி விட்டது.

மைத்திரிக்கும், ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான முரண்பாடுகளால் ஏற்பட்ட அரசியல் குழப்பம் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் போன்ற காரணிகளே நாட்டின் பொருளாதார நிலைமையை மேலும் மோசமடைய வைத்தன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஏற்கனவே தெரியப்படுத்தப்பட்டிருந்தும் அதனை தடுக்க தவறியமை சர்வதேச அளவில் விமர்சிக்கப்பட்டது.

அன்றைய நல்லாட்சிக் காலத்திலேயே வடக்கு, கிழக்கில் காணி அபகரிப்பு மற்றும் சிங்களமயமாக்கல் திட்டங்கள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன. தொல்பொருள் திணைக்களம், காணி அபிவிருத்தித் திணைக்களம், வனபரிபாலனத் திணைக்களம் உள்ளிட்ட பல அரச நிறுவனங்களைப் பயன்படுத்தி தமிழர் பிரதேசங்களில் காணிகள் அபகரிக்கப்பட்டன. இதற்காக பல மில்லியன் டொலர் அரச பணம் வீணடிக்கப்பட்டது.

வல்லரசுகள் தமது புவிசார் அரசியலை முன்னிறுத்தி நாட்டின் நெருக்கடி நிலையைத் தமக்குச் சாதகமாக்கும் உத்திகளை மாத்திரமே கையாண்டு கொண்டிருக்கின்றன. அரசுக்கு எதிராகக் கோசமிட்டு வீதியில் இறங்கிப் போராடும் சிங்கள மக்கள், மேற்குலக நாடுகளின் இலங்கையை மையப்படுத்திய புவிசார் நோக்கங்களையும், கபடத்தனமான உத்திகளையும் அறிந்து கொள்ள வேண்டும்.

2019 இல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவிக்கு வந்தவுடன் மேற்கொண்ட சில முக்கிய முடிவுகளே இன்றைய நிலைக்குக் காரணம் என்றும் சில வல்லுநர்கள் கூறுகின்றனர். நாட்டின் வரிவிதிப்பு முறையில் மேற்கொள்ளப்பட்ட வரிக்குறைப்பு மாற்றம், அரசுத் துறையில் ஒரு இலட்சம் புதிய வேலைவாய்ப்புகளை வழங்கியமை,போதிய ஆய்வின்றி இயற்கை விவசாயத்தை நடைமுறைப்படுத்தியமை போன்ற காரணிகள் இதற்கு ஆதாரமாக முன்வைக்கப்படுகின்றன.

15 சதவீதமாக இருந்த உள்நாட்டுவரி 8 வீதமாக குறைக்கப்பட்டதால் அரசின் வரி வருவாய் குறையத் தொடங்கிய அதேசமயம், அரசுத் துறையில் ஒரு இலட்சம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கியதனால் அரசின் செலவினம் அதிகரித்தது. நாட்டின் அந்நிய செலாவணி வருமானத்தில் 10 வீதத்தை ஈட்டும் சுற்றுலாத் துறையும் கொரோனா நோய்த்தொற்றால் கடும் வீழ்ச்சி அடைந்தது.

2019 இல் 7.5 பில்லியன் டொலராக இருந்த சுற்றுலாத்துறை வருமானம், 2021 இல் 2.8 பில்லியன் டொலராகக் குறைந்தது. கொரோனா தொற்றுப் பரவலால் விவசாய விளைபொருள், தைத்த ஆடைகள் ஏற்றுமதி என்பன சரிவு கண்ட நிலையில், நாட்டின் வர்த்தகப் பற்றாக்குறை 2021இல் 6 பில்லியன் டொலராக அதிகரித்தது. இந்த பொருளாதாரச் சரிவுகளால் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மதிப்பு இரட்டிப்புக்கு மேல் வீழ்சியடைந்து நாட்டின் பொருளாதார நிலையை மேலும் பாதித்துக் கொண்டிருக்கிறது.

மேலும் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக இடம் பெற்று வருகின்ற உக்ரைன்_ ரஷ்ய போரால் கோதுமை, சமையல் எரிவாயு, எண்ணெய் போன்றனவற்றுக்கு அந்நாடுகளைப் பெருமளவில் சார்ந்திருக்கும் இலங்கையும் கடும் பாதிப்பைச் சந்தித்துள்ளது.

ஆழமான பொருளாதார, சமூக பின்புலத்திலேதான் இலங்கைத்தீவு தற்போது எதிர்நோக்கியுள்ள நெருக்கடி மற்றும் விலைவாசி உயர்வுகள் குறித்து விவாதிக்க வேண்டும். வெறுமனே ராஜபக்ஷக்களின் ஆட்சியை மாற்றுவதால் நாட்டின் பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வு, மின்சார நெருக்கடி, அந்நிய செலாவணி பற்றாக்குறை போன்ற அனைத்துக்கும் தீர்வு காண முடியுமென நம்புவது தவறாகும்.



கோவை நந்தன்

# இலங்கையை வந்தடைந்த இந்திய எரிபொருள் கப்பல்

## பெற்றோல் தட்டுப்பாடு நீங்கி விடுமென தகவல்

பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையில் திங்கட்கிழமை (இன்று) பெட்ரோல் விநியோகம் மீண்டும் சீரான நிலைக்கு திரும்புமென பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்ததாக இந்திய இணையத்தளமான ONEINDIA TAMIL நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

37,500 மெட்ரிக் தொன் பெட்ரோலை ஏற்றிக் கொண்டு கப்பல் ஒன்று இலங்கையை வந்தடைந்து இருப்பதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 41,000 மெட்ரிக் தொன் டீசலை ஏற்றிச் செல்லும் ஒரு கப்பலும் இலங்கையை வந்தடைந்துள்ளதால் டீசலை இறக்கும் நடவடிக்கை தொடங்கியுள்ளதாக இந்திய இணையத்தளம் தனது செய்தியில் தெரிவித்துள்ளது.

அண்டை நாடான இலங்கை பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்பட்டுள்ளதால் இந்தியா இலங்கைக்கு தொடர்ந்து உதவிகளை வழங்கி வருகிறது. கடந்த மாதம் இந்தியா ரூபா 3,750 கோடிக்கு கடன் உதவி வழங்கியது. இத்தொகை எரிபொருள் இறக்குமதிக்கு பயன்படுத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து இலங்கைக்கு ரூபா 7,500 கோடி கடனுதவி வழங்கும் ஒப்பந்தம் கடந்த மாதம் டெல்லியில் கையெழுத்தாகியிருந்தது. இத்தொகை அத்தியாவசிய பொருட்கள் கொள்முதலுக்கு பயன்படுத்தப்படுமென தெரிவிக்கப்படுகின்றது.



இலங்கையில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக இந்தியா ஒரு தொகை அரிசியை அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அதேசமயம் இலங்கையில் மருந்துப் பொருட்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காகவும் இந்தியா உதவி புரியவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# ஓந்தாச்சிமடம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த சர்க்கரைப் பொங்கல் சக்தி விழா



மட்டக்களப்பு, ஓந்தாச்சிமடம் ஸ்ரீ முத்துமாரியம்மன் வருடாந்த சர்க்கரைப் பொங்கல் சக்தி விழா நாளை 19.04.2022 மாலை ஸ்ரீ வடபத்திரகாளியம்மன் ஆலயத்திலிருந்து அம்மன் எழுந்தருளி வந்து கதவு திறத்தலுடன் ஆரம்பமாகும்.

மட்டக்களப்பு_ கல்முனை பிரதான வீதியில் 18 ஆவது மைல்கல்லில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஓந்தாச்சிமடம் பாலத்தினூடாகப் பயணிக்கும் போது வாவிக்கரையை அண்டியதும் எதிரே கடல் அமைந்துள்ளதுமான இயற்கைச் சூழலில் இந்த ஆலயம் அமைந்துள்ளது. அருகினிலே மரவிருட்சங்களுடன் கூடிய இரு மணித்தூண்களுக்கிடையில் இராஜகோபுரம் கொண்டதாக ஸ்ரீ கற்பக விக்னேஸ்வரர் ஆலயத்துடன் கூடிய ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

மானிட வாழ்வில் வளமும் நலமும் காண அருள் புரிபவளே மாரியம்மன். ஏழு நாட்கள் கொண்ட தமிழர் பாரம்பரிய முறையான ஆகமமுறை சாராத வழிபாட்டிற்குரிய பூஜை விதிமுறைகளையும் அதற்கான மந்திரங்களையும் பாவனை முறைகளையும் தொகுத்துக் கூறும் ஆவணமான பத்தாசி முறைச் சடங்காக இதன் விழா நடைபெறும். மாரியம்மன் பத்தாசியானது சர்க்கரைப் பொங்கலிடும் சடங்காகக் காணப்படுகின்றது.

ஓந்தாச்சிமடத்தில் அமையப்பெற்ற ஸ்ரீ கற்பக விக்னேஸ்வரர் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் ஆதிபராசக்தியான ஸ்ரீ சிவமுத்துமாரியம்மன் ஆலயத்தின் சக்தியானவள் ஆதிமூலமாக அமைந்து கற்பக்கிரகத்தினிலே மூலமூர்த்தியாக கோலம் கொண்டு அருளாட்சி செய்கின்றாள்.

கி.பி 17 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் எமது அண்டை நாடான பாரத நாட்டிலிருந்து கதிர்காமத்திற்கு கப்பல் மூலம் யாத்திரை செல்ல வந்தவர்களால் துணையாக கொண்டுவரப்பட்ட சக்தியே சிவமுத்துமாரியம்மன் என்பது வரலாறு ஆகும். ஆலய மூலஸ்தானத்தின் எதிரே அமைந்துள்ள தீர்த்தக் கிணற்றுக்கும் கதிர்காமம் மாணிக்க கங்கைக்கும் இடையே தொடர்பு உள்ளதாக ஐதீகம் நிலவுகின்றது. பிணி தீர்க்கும் தீர்த்தமாகவும் இக்கிணற்று நீர் பாவிக்கப்படுகின்றது. குறித்த கிணற்றினுள் பாரம்பரிய கல்வெட்டு காணப்படுவது இதற்குச் சான்றாக உள்ளது.

ஓந்தாச்சிமடம் கிராமத்தில் முதன் முதலில் ஆரம்பமான இப்புனித பதியானது சிவனால் அம்மையே என அழைக்கப்பட்ட காரைக்கால் அம்மையாரின் புனித பதியாகிய காரைக்காலிலிருந்து கொண்டு வரப்பட்டு ஓந்தாச்சி என்னும் நாமத்தைக் கொண்ட சக்தியின் தொண்டனால் உருவாக்கப்பட்ட மடத்தினிலே நிலைநிறுத்தி வைக்கப்பட்டதாகச் சொல்வர். அங்கு வழிபடப்பட்டு வந்த தெய்வமே சிவமுத்துமாரியம்மன்.

ஓந்தாச்சி என்பவர் கொடை வள்ளலாகவும் அனைத்து சமூகங்களையும் அரவணைத்தும் ஏனைய மதங்களை மதித்தும் வாழ்ந்த சிற்றரசனாக மதிக்கப்படுகின்றார். மடம் என்று அழைக்கப்படும் ஆலயத்தின் முன்னே நீர்ச்சுனை அமைத்து கதிர்காமம் செல்லும் யாத்திரிகர்களை தங்க வைத்து உபசரித்தும் வந்தார். இந்த ஆலயத்திலே பண்டைய காலம் முதல் சிவனின் அம்சமாக மாரியம்மனைக் கருதுவதனால் சிவ வழிபாட்டை முன்னிலைப் படுத்தி சிவராத்திரி விரதமும் சக்தி வழிபாட்டை முன்னிலைப்படுத்தி சர்க்கரையமுதும் மாரியம்மன் பத்தாசி முறையில் செய்து வருகின்றனர்.

1957 இல் ஏற்பட்ட வெள்ளத்தின் போது ஆலயத்தின் அருகாமையில் குடியிருந்த மக்கள் வேறு இடங்களுக்கு குடிபெயர்ந்த போது ஊரில் உள்ள மக்களின் நலன் மற்றும் மாணவர்களின் கல்வி உயர்வு கருதி சமூகப் பணியாக கிராமத்தின் கல்வி மேம்பாட்டிற்காக அந்த நிலத்தை ஓந்தாச்சிமடம் ஸ்ரீ விநாயகர் ஆலயம் அமைப்பதற்கு ஆலய அறங்காவலர்கள் நன்கொடையாக வழங்கினர்.

அஞ்ஞான இருள் அகற்றி மெய்ஞானம் எனும் அருள் ஒளி தரும் அன்னையின் சடங்கினிலே 20.04.2022 புதன் மற்றும் வியாழக்கிழமை (21) காலை, மதியம் விசேட பூஜையைத் தொடர்ந்து மாலை ஊரின் பிரதான வீதிகளைக் காவல் பண்ணல் இடம்பெறும். இவ்வேளையில் வீதிகள் தோறும் மங்கலப் பொருட்களைக் கொண்டு பூரண கும்பம் வைத்து அம்மனை வரவேற்று தரிசிப்பர். வெள்ளிக்கிழமை(22) காலை மற்றும் மதியம் விசேட பூஜையைத் தொடர்ந்து சர்க்கரைப் பொங்கலுக்காக ஸ்ரீ அரசடிப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து ஊர்மக்கள் புடைசூழ வாழைக்குலைகள் எடுத்து வந்து பழுக்கப் போடுதல் இடம்பெறும்.

## கதவு திறத்தலுடன் நாளை ஆரம்பம்





23.04.2022 சனிக்கிழமை அதிகாலை கும்பம் சொரிதல் நடைபெறும். மாலையில் அம்பாள் முத்துச் சப்பரத்தில் ஆரோகணித்து வீதிகளில் வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிக்கும் நிகழ்வு நடைபெறும். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை (24) பிற்பகலில் விநாயகப் பானைக்கு நெல் குற்றுதலும் இரவு விசேட பூஜையும் இடம்பெறும்.

24.04.2022 திங்கட்கிழமை அதிகாலை சக்தி யாகம், அபிஷேகம், பூரண கும்பம் நிறுத்துதல், விநாயகப் பானை எழுந்தருளப் பண்ணுதல், காத்தான் கன்னிமார் வைத்தல் நடைபெற்று, மாலையில் காத்தான் கன்னிமார் சகிதம் ஆலயத்திற்கு முன் நிறுத்தப்பட்டு உடுக்கொலி முழங்க கர்ப்பூரச் சட்டி, அங்கப்பிரதட்சணை ஆகியவற்றுடன் ஆலயம் வலம் வருதல் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அம்மனின் மூலஸ்தானத்தின் எதிரே விநாயகப் பானை ஏற்றுவதைத் தொடர்ந்து அடியார்கள் சர்க்கரைப் பொங்கலிடுவர். அத்துடன் வருடாந்த சக்தி விழா நிறைவு பெறும். 26.04.2022 செவ்வாய்க்கிழமை இரவு வைரவர் பூஜையும், 29.04.2022 வெள்ளிக்கிழமை நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழாவும் நடைபெற்று அன்னை ஆதிபராசத்தியின் வருடாந்த சடங்குக் கிரியைகள் நிறைவுபெறும்.

கிரியைகள் யாவும் ஆலய பிரதம குரு விஸ்வப்பிரம்ம ஸ்ரீ ஏ.குமாரலிங்கம் குரு தலைமையில் ஸ்ரீ கற்பக விக்னேஸ்வரர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பி.கஜேந்திரக் குருக்கள் தலைமையில் நடைபெறும். உதவிக்குருவாக விஸ்வப்பிரம்மஸ்ரீ வி.விஸ்வரூபன் கடமையாற்றுவார்.



**சிவம் பாக்கியநாதன் ...**
*தலைவர்,*
*மட்டக்களப்பு மாவட்ட*
*விஸ்வகர்ம சம்மேளனம்*

# பிரதியுபகாரம் எதனையுமே எதிர்பார்க்காமல் இலங்கைக்கு தோள்கொடுக்கும் பாரத தேசம்



இலங்கையை வந்தடைந்த இந்திய எரிபொருள் கப்பல்

இலங்கை தற்போது கடுமையான பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வருகின்றது. கொரோனா தாக்கத்தினால் ஏற்பட்ட இரு வருட முடக்க நிலைமை காரணமாக இலங்கை இவ்வாறான பொருளாதார நெருக்கடியைச் சந்திக்க நேரிட்டுள்ளது. உல்லாசப் பயணத்துறை உட்பட நாட்டின் பொருளாதார வருமானம் அத்தனையும் வீழ்ச்சி நிலைமைக்குச் சென்று விட்டதனாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், இந்தியா வழங்கிய பல்வேறு வகையான நிதியுதவிகளும் இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு உதவி வருகின்றன. பெருமளவு நிதியுதவிகள், எரிபொருள் என்றெல்லாம் சமீப காலமாக அதிக உதவிகளை இலங்கைக்கு இந்தியா வழங்கியுள்ளது. அயல்நாட்டுக்கு அனைத்து உதவிகளிலும் முன்னுரிமை வழங்குவதென்ற இந்தியாவின் கொள்கைக்கிணங்க இந்த உதவிகள் இலங்கைக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

அதுமாத்திரமன்றி, இலங்கையை இந்தியா எக்காலமும் சகோதர நாடாகவே கருதி வருகின்றது. இலங்கைக்கு இடர் ஏற்படுகின்ற வேளைகளில் எல்லாம் உதவிகளை வழங்குவதற்கு இந்தியா என்றுமே பின்வாங்கியதில்லை. அவ்வாறுதான் தற்போதும் அதிக உதவிகளை இலங்கைக்கு இந்தியா வழங்கியுள்ளது எனலாம்.

இலங்கையில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் இந்தியா உணவுப் பொருட்கள் மற்றும் எரிபொருளை வழங்கி வருவதாக இந்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் டொக்டர் ராஜ்குமார் ரஞ்சன் தெரிவித்திருக்கின்றார்.

‘அயல்நாட்டுக்கு உதவ வேண்டுமென்ற தனது கொள்கையில் இந்தியா ஒருபோதுமே பின்வாங்கியதில்லை என்பது உறுதியாகத் தெரிகின்றது. இலங்கையின் பொருளாதார நிலைமை தற்போது சீரானதாக இல்லை. அதற்கான காரணங்கள் பல இருக்கலாம். ஆனால் மனிதாபிமான அடிப்படையில் இலங்கையை இந்தியா நோக்குகின்றது. இலங்கை மக்கள் எதிர்கொள்ளும் இன்றைய நெருக்கடிகளைச் சமாளிக்க உணவு மற்றும் எரிபொருளை நாங்கள் வழங்குகிறோம்’ என்றும் இணை அமைச்சர் டொக்டர் ராஜ்குமார் ரஞ்சன் கூறியுள்ளார்.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி நிலவுவதால், அவற்றுக்குத் தீர்வு காணுமாறு கோரி மக்கள் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள் நடத்தி வருகின்றனர். மக்கள் அரசாங்கத்துக்கு எதிராக மாத்திரம் போராட்டம் நடத்தவில்லை. பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அத்தனை அரசியல்வாதிகள் மீதும் மக்களுக்கு வெறுப்பு உள்ளது. மக்களின் துன்பங்களுக்கு முடிவு காண வேண்டுமென்பதே அவர்களது வலியுறுத்தலாகும். நாட்டில் எரிபொருள் பற்றாக்குறை, மின்வெட்டு, விலைவாசி அதிகரிப்பு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு போன்றவற்றுக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்பது மக்களின் எதிர்பார்ப்பாகும்.

சுற்றுலாத்துறை உட்பட பொருளாதார வருமானங்கள் பாதிக்கப்பட்டதால் அந்நிய செலாவணி பற்றாக்குறையால் இலங்கையின் பொருளாதாரம் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளது. டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வேகமாக வீழ்ச்சியடைந்து வருவதுடன் வெளிநாட்டுக் கடன்கள் செலுத்த வேண்டிய காலமும் நெருங்கி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இலங்கையை பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீட்டெடுக்கும் வகையில் புதுடில்லி இரண்டு கட்டங்களாக அத்தியாவசியப் பொருட்களுக்காக இலங்கைக்கு நிதியுதவியளித்துள்ளது. இந்த உதவிகளை இந்தியா விரைவாகவே இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இந்தியா வழங்கிய உதவிகளுக்காக கடந்த மாதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியிடம் நன்றி தெரிவித்திருந்தார். இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பை அதிகரிக்க இரு நாடுகளும் எடுத்து வரும் முயற்சிகள் குறித்து எடுத்துக் கூறிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கையின் பொருளாதார ஸ்திரத்துக்காக இந்தியா அளித்து வரும் ஆதரவுக்கு நன்றி தெரிவித்திருந்தார்.

அண்மைக் காலத்தில் இரண்டு தடவைகள் இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்த முன்னாள் நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷவிடம் இந்தியப் பிரதமர் மோடி குறிப்பிடுகையில் ‘அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை’ என்ற கொள்கையில் இலங்கை விடயத்தில் இந்தியா முக்கிய பங்கை வகிக்கும்’ எனக் கூறியிருந்தார். இந்தியா சமீப காலமாக

## 'அயல்நாட்டுக்கே முன்னுரிமை' என்பதுதான் இந்தியா கடைப்பிடிக்கும் என்றும் மாறாத கொள்கை

குறித்து இலங்கையில் பலதரப்பினரும் பாராட்டுகளைத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான உதவிகளின் மத்தியில் மற்றொரு உதவியை இந்தியா தற்போது இலங்கைக்கு வழங்கியிருக்கின்றது. இந்திய நிதிக் கடன் வசதியின் கீழ் இந்தியாவில் இருந்து அரிசி இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. இந்தியாவிலிருந்து இவ்வாறு அரிசி அனுப்பி வைக்கப்படுவதால் இலங்கையில் அரசி விலையைக் கட்டுப்படுத்துவதற்கு வழிபிறக்குமென்று வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இலங்கையில் அரசியின் விலை சமீப காலமாக அதிகரித்துள்ளதால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே இந்தியாவிலிருந்து அரிசி அனுப்பப்படுவதால் இலங்கையில் விரைவில் அரிசி விலை குறையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ‘இலங்கைக்கு அரிசியை அனுப்பி வைப்பதற்காக இந்தியாவின் தென்பகுதி துறைமுகங்களில் அரிசி ஏற்றும் பணி தொடங்கியுள்ளது’ என்று இந்திய கடன் வசதி ஒப்பந்தத்தின் கீழ் ஏற்றுமதியை முன்னெடுக்கும் பட்டாபி அக்ரோ ஃபுட்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் பி.வி.கிருஷ்ணா ராவ் குறிப்பிட்டுள்ளார்.



## இலகு முறையில் மீளச்செலுத்தும் கடனுதவி, எரிபொருள், உணவு உட்பட இந்தியா சமீப காலமாக வழங்கி வரும் உதவிகள் அநேகம்; இலங்கைக்கு என்றுமே உற்றதோழன் இந்தியா



இந்தியா வழங்கிய 40 ஆயிரம் தொன் டீசலை இலங்கை கையேற்கும் நிகழ்வு

இலங்கைக்கு வழங்கியிருக்கும் உதவிகள் அநேகமாகும். இலங்கை எரிசக்திக்கான பெற்றோலியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக புதுடில்லி 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை அரசாங்கத்துக்கு குறுகிய காலக்கடனாக வழங்கியுள்ளது. இக்கடனுக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர், அதாவது 2021 நவம்பரில், இரசாயன உரங்களின் இறக்குமதியை இலங்கை அரசாங்கம் நிறுத்தியதால் இந்தியா 100 தொன் நனோ நைற்றிஜன் திரவ உரத்தை இலங்கைக்கு வழங்கியிருந்தது.

50 நாட்களில் இலங்கை மக்களுக்கென மொத்தமாக 200,000 மெற்றிக் தொன் எரிபொருளை இந்தியா வழங்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் இந்திய பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால், 40,000 மெற்றிக் தொன் எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான அவசர உதவிகளை எந்தவொரு நாடுமே இலங்கைக்கு சமீப காலத்தில் வழங்கியதில்லை. இலங்கைக்கு நெருக்கடியான வேளையில் இந்தியா வழங்கிய இந்த உதவிகள்

இலங்கை 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றதன் பின்னர் தனது வரலாற்றில் கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை தனது வெளிநாட்டுக் கடன்களை மீளச்செலுத்துவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றது. எனவே இந்தியா, சீனா போன்ற நாடுகளிடம் கடனையும் எரிபொருள், உணவு போன்றவற்றையும் இலங்கை கோரி வருகின்றது.

ஆனால் சீனாவிடம் கடன் பெறுவதென்பதில் அதிக சிரமங்கள் உள்ளதாக பொருளாதார வல்லுநர்கள் கூறுகின்றனர். சீனாவின் அதிக வட்டியுடனான கடன் காரணமாக பாகிஸ்தான் உட்பட பல நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. சீனா மற்றைய நாடுகளை கடன்பொறிக்குள் வீழ்த்துவதாக சர்வதேச பொருளாதார நோக்கர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். ஆனால் இலங்கைக்கு உதவி வழங்குவதில் இந்தியா பிரதிபலனை எதிர்பார்க்கவில்லை. இலங்கை மீது இந்தியாவுக்கு எப்போதுமே அக்கறையும் அபிமானமும் உண்டென்பதால், இந்திய உதவியானது இலங்கையின் நெருக்கடியைத் தீர்ப்பதை மட்டுமே இலக்காகக் கொண்டதாகும். ஆசியாவின் பலம் வாய்ந்த நாடுகள் ஏற்கனவே இலங்கைக்கு பில்லியன்கணக்கிலான டொலர்களை நிதியுதவியாக வழங்கியுள்ளன.

“நாங்கள் இலங்கைக்கு உதவத் தயாராகவுள்ளோம்.மேலதிக கடன்களை வழங்க தயாராகவுள்ளோம்’ என இருநாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை நன்கு அறிந்த இந்திய தரப்பொன்று தெரிவித்தது.

தெற்காசியாவை மையமாகக் கொண்ட ஆசிய கிளியரிங் யூனியனுக்கு செலுத்த வேண்டிய 2 பில்லியன் டொலர் நிதியைப் பெறுவதற்காக இலங்கை இந்தியாவின் உதவியை நாடியுள்ளதாகவும், இந்தியா அதற்கு சாதகமான பதிலை வழங்கியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இத்தகவல் இன்னுமே உரிய தரப்புகளால் உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்தியா மற்றும் இந்திய ரிசேர்வ் வங்கி, இலங்கையின் வெளிவிவகார அமைச்சு, நிதியமைச்சு போன்றவை இது குறித்து இன்னுமே தகவல் வெளியிடவில்லை. அதேசமயம் சீனா இலங்கைக்கு 1.3 டொலர் சின்டிகேட் கடனை நீடித்துள்ளது.அதேவேளை மேலும் கடன்களுக்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தனது அயல் நாடான இலங்கை பொருளாதார மீட்சிக்காக சீனா மீது தங்கியிருக்கும் நிலையை முற்றாக குறைப்பது குறித்து புதுடில்லி ஆர்வமாகஉள்ளதாக இந்திய அரசாங்க தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கை சீனாவிற்கு 3.5 பில்லியன் டொலர் கடனை மீளச்செலுத்த வேண்டிய நிலையில் உள்ளது. சீனா இலங்கையில் துறைமுகங்கள், வீதிகள் போன்ற கட்டுமானத் திட்டங்களில் உதவிகள் வழங்கியுள்ளது.

ஆனால் சீனாவிடமிருந்து கடன் பெறுவதை குறைக்கவே இலங்கை விரும்புகின்றது. இந்தியா சித்திரைப் புத்தாண்டு காலத்தில் சீனி, அரிசி, கோதுமைமா போன்றவை கொண்ட கப்பல்களை இலங்கைக்கு அனுப்பியுள்ளது. சீனாவை விட இலங்கைக்கு உதவி வழங்குவதில் இந்தியா சிறந்த நிலையில் உள்ளது என்பதை புதுடில்லியின் சமீப கால உதவிகள் உணர்த்துகின்றன. ஆனால் இந்த உதவிகளுக்காக இலங்கை மீது இந்தியா நிபந்தனை எதனையுமே விதிக்கவில்லையென்பதுதான் இங்கு பிரதானமாக விடயம். இலங்கையின் நெருங்கிய நட்பு நாடு என்ற கொள்கையில் இந்தியா மிக உறுதியாகவே உள்ளது.



விம்பம்" கலை, இலக்கிய அமைப்பின் ஆதரவில், நேற்று முன் தினம் (16.04.2022 ) London, Eastham. Trinity மண்டபத்தில் இரண்டு நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன. இங்கு செ.வே.காசிநாதனின் 'விற்கன்ஸ்ரைன்: மொழி, அர்த்தம், மனம் ' என்ற நூலும் சாரல்நாடனின் 'வானம் சிவந்த நாட்கள்'ஆகிய நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டன.

# மினிப்பே நீர்ப்பாசன திட்டத்தை டிஜிடல் மயப்படுத்த திட்டம்

*அக்குறணை குறூப் நிருபர்*

கல்ஓயா அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு பகுதியாக ஆரம்பிக்கப்பட்ட மினிப்பே நீர்பாசனத்திட்டத்தை, மத்திய மாகாண நீர்ப்பாசன அமைச்சு டிஜிடல் மயப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

கல்ஓயா அபிவிருத்தித் திட்டம் 1949 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போது மினிப்பே நீர்ப்பாசனத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது, பௌதீக ரீதியாக இது, அளவிடப்பட்ட போதிலும், துல்லியமான தகவல்களுடன் விரிவான வரைபடத்தை இதுவரை உருவாக்க முடியவில்லை. எனவே துல்லியமானதகவல்களுடன் விரிவான வரைபடத்தை உருவாக்கும் நோக்கத்துடன் இந்த டிஜிட்டல் வரைபடம் வடிவமைக்கப்பட்டுள்ளது. மத்திய மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி. கே.ஏ.டி. குமுதுனி தீரா இதுபற்றித் தெரிவித்தார்.மினிப் அணைக்கட்டு, மதகுகள், 74 கி.மீ நீளமுள்ள கால்வாய் அமைப்பு அமைப்பாகும், வயற்காணி, கால்வாய்கள், நீர்ப்பாசன எல்லைகள் மற்றும் சட்ட விரோத ஆக்கிரமிப்புகள் ஆகியவற்றையும் இவ்வரைபடம் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த புதிய வரைபடம் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் அறிமுகப்படுத்தப்படுமென, நீர்ப்பாசன திணைக்களத்தின் மத்திய மாகாண பணிப்பாளர் கே.ஏ.டி.குமுதுனி தீர மேலும் தெரிவித்தார்.

# பந்து சமரசிங்க கொன்சுல் ஜெனரலா?

## வெளிநாட்டு அமைச்சு மறுப்பு



இத்தாலியின் மிலான் நகரிற்கான இலங்கையின் கொன்சுல் ஜெனரலாக பந்து சமரசிங்க நியமிக்கப்பட மாட்டார் என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

நகைச்சுவை நடிகர் பந்து சமரசிங்க மிலான் நகரில் இலங்கையின் கொன்சுல் ஜெனரலாக நியமிக்கப்படவுள்ளார் என செய்திகள் வெளியாகியிருந்தன. இது குறித்து சமூகவலைத்தளங்களில் பரவலாக விமர்சனங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

இந்நிலையில், பந்து சமரசிங்க மிலான் நகரில் இலங்கையின் கொன்சுல் ஜெனரலாக நியமிக்கப்பட மாட்டார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

## புலம்பெயர் இலங்கையருக்கு...

அதிகரிக்க அவசர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார். வெளிநாடு வாழ் இலங்கையர்கள் நாட்டிற்கு உதவுமாறும் அந்த பணம் தேவையற்ற முறையில் பயன்படுத்தப்படாதென அவர் வாக்குறுதியளித்துள்ளார்.

## 10 தமிழ் அரசியல் கட்சிகள்...

அரசியல் ஆய்வாளர்கள் பங்கேற்ற கலந்துரையாடலுக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

நாட்டில் உள்ள பொருளாதாரப் பிரச்சினை தொடர்பில் ஒவ்வொரு கட்சிகளும் தனித்தனியாக கருத்துக்கள் தெரிவிப்பதை விட கூட்டாக தீர்மானங்கள் எடுப்பதே சிறந்தது. இந்த விடயத்தில் இணக்கமான முடிவொன்று எட்டப்பட்டது. இன்றையதினம் பங்கேற்ற அரசியல் கட்சிகள் சிவில் அமைப்புக்களில் இருந்து ஒவ்வொரு பிரதிநிதிகளை தெரிவுசெய்து செயற்பாட்டுக் குழு ஒன்று அமைத்து அதன் மூலம் எதிர் வரும் செவ்வாய் அல்லது புதன் கிழமைகளில் ஒன்று கூடி மீண்டும் இது தொடர்பாக கலந்துரையாடுவோம் என்றார்.

## நம்பிக்கையில்லா பிரேரணை...

இதேவேளை, அரசாங்கத்தின் மக்கள் விரோத செயற்பாடுகளுக்கு எதிராக கண்டியில் இருந்து கொழும்பு வரை நடை பயணப் போராட்டத்தை ஏற்பாடு செய்வது குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

24ஆம் திகதி கண்டியில் ஆரம்பமாகும் குறித்த நடை பயணப் போராட்டம் மே 1ஆம் திகதி கொழும்பை சென்றடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பலம் கொடுப்பதே நடை பயணப் போராட்டத்தின் நோக்கம் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

## நேரத்தைக் கழிப்பதற்காகவே...

இளைஞர்கள் திரண்டதன் நோக்கம் கேள்விக்குறியாக உள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் முக்கியத்துவம் இல்லாத கூட்டங்களை ஏற்பாடு செய்கின்றனர். எந்தவொரு அரசியல் வாதியும் வேண்டுமென்றே நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு செல்ல முயற்சிக்க மாட்டார்கள்.

அரசாங்கத்தின் தரப்பில் தவறுகள் நடந்துள்ளன, அதை அவர்கள் சரி செய்ய முயற்சிக்கின்றனர். ஆட்சி அமைப்பதற்கான கட்டமைப்பு இல்லாத நிலையில் நாட்டை பின்னோக்கி செல்ல அனுமதிக்க முடியாது.

இந்நிலையில், காலி முகத்திடலில் நடத்தப்படுவதைப் போலன்றி, ஒரு போராட்டம் அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும் என்று அவர் கூறினார். அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் பதவியை விட்டு வெளியேறினால் நாட்டை ஆள்வது யார் என கெஹலிய ரம்புக்வெல்ல கேள்வி எழுப்பியுள்ளார்.

## IMF உடன் பேச்சு நடத்த...

வீரசிங்க மற்றும் நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன உள்ளிட்டோரும் அடங்குகின்றனர்.

கட்டார் விமான சேவைக்கு சொந்தமான Q.R.659 ரக விமானத்தில் நேற்று அதிகாலை 5.07 அளவில் அவர்கள் நாட்டிலிருந்து வெளியேறியதாக கட்டுநாயக்க விமான நிலையத்திலுள்ள எமது செய்தியாளர் தெரிவித்தார். இதற்கமைய குழுவினர் எதிர்வரும் 24ஆம் திகதி வரை அங்கு தங்கியிருப்பார்கள்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெறவுள்ள சந்திப்பில் இந்திய தரப்பினர் சிலரும் கலந்து கொள்ளவுள்ளதாக டைம்ஸ் ஒஃப் இந்தியா செய்தி வெளியிட்டுள்ளது.

## பிறர் நலன்களுக்காக எமது ...

காணாமலாகியோருக்காக, அரசியல் கைதிகளுக்காக இளையவர்கள் வடக்கில் அணிதிரள வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் கண்டாவளை பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், காலிமுகத்திடலில் தென்னிலங்கை இளையோர் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஜனாதிபதி கோட்டாபய உள்ளிட்ட ஆட்சியாளர்களை வீட்டுக்குச் செல்லுமாறு வலியுறுத்துகின்றார்கள். அவர்களின் போராட்டத்தினை மதிக்கின்றேன்.

ஆனால் இந்தப் போராட்டத்தில் வடக்கு, கிழக்கு இளையவர்களும் அணி திரள வேண்டும் என்று யார் யாரோ அறிக்கை விடுகிறார்கள். குறிப்பாக வடக்கு இளையோரை பங்கேற்கச் செய்வதற்கு முஸ்தீபுகள் செய்யப்படுகின்றன.

நாம் உரிமைகளுக்காக போராடி இலட்சக்கணக்கான சொத்துக்களை பலிகொடுத்துவிட்டு இருக்கின்றோம். அதற்கான நீதி தற்போது வரையில் கிடைக்கவில்லை.

தென்னிலங்கையில் இன்று போராடுகின்ற எவரும், எமது மக்களின் உயிர்களுக்காக குரல் கொடுக்கவில்லை. அவர்கள் போர் வெற்றியை கொண்டாடினார்கள். பாற்சோறு வழங்கி நடனமாடினார்கள். அதேநேரம் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் 1882 நாட்களாக போராடிக்கொண்டிருக்கிறார்கள். காலி முகத்திடலுக்கு புறப்படும் இளையோர் அங்கு செல்வதற்கு முன்னதாக இவர்களுக்காக குறைந்தது ஆயிரம் பேராவது நாளொன்றில் திரள வேண்டும் என்று கோருகிறேன்.

சிறைகளில் வாடும் எமது சொந்தங்களுக்காக ஒன்றிணைய வேண்டும் என்று கோருகிறேன். நாம் எமது உரிமைகளுக்காகவே போராடி வந்திருக்கின்றோம். ஆகவே பிற நலன்களுக்காக எமது இலக்கை இழந்து விடக்கூடாது என்றார்.

## முன்னாள் அமைச்சர் பெசில்...

சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள பசில் ராஜபக்ஷ நாரஹேன்பிட்டியில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ரத்மலானை விமான நிலையத்திலிருந்து முன்னாள் நிதியமைச்சர் வெளியேறியதாக சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியாகியிருந்த போதிலும் அது உண்மைக்குப் புறம்பானது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## TNA யின் நிலைப்பாடு...

எடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கையில்,

ஜனாதிபதிக்கு எதிரான குற்றவியல் பிரேரணை மற்றும் அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழு கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இதன்போது கூட்டமைப்பு இந்தப் பிரேரணைகள் தொடர்பில் எடுக்கவுள்ள தீர்மானம் தொடர்பில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு இறுதி முடிவு செய்யப்படவுள்ளது என்றார்.

இதேவேளை, இலங்கை தமிழரசுக்கட்சியின் அரசியல் பீடக் கூட்டம் வவுனியாவில் இடம்பெற்றபோதும் இந்த விடயம் சம்பந்தமாக இறுதி தீர்மானமொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## முதலாம் தரத்திற்கான ஆட்சேர்ப்பு...

அதற்கமைய நாளை 19அம் திகதி முதல் முதலாந்தர மாணவர்களுக்கான ஆட்சேர்ப்பு இடம்பெறுமென கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, 2022ஆம் ஆண்டுக்கான முதலாம் தர மாணவர்களை முஸ்லிம் பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ளும் செயற்பாடுகள் மே மாதம் 5ஆம் திகதி முதல் இடம்பெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுயாதீனமாக இடைக்கால ....

அரசாங்கத்தில் இருந்து கொண்டு அரசாங்கத்தை பலவீனப்படுத்தியவர்கள் தற்போது பாராளுமன்றில் சுயாதீனமாக செயற்படுவதாக குறிப்பிட்டுக்கொண்டு இடைக்கால அரசாங்கத்தை அமைக்க முயற்சிக்கிறார்கள். அரசியல் மற்றும் சமூக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள நெருக்கடி நிலைமைக்கு எதிர்வரும் வாரம் சிறந்த தீர்வை பெற்றுக்கொள்ள முடியும். எக்காரணிகளுக்காகவும் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ பதவி விலகமாட்டார்.பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் மறுசீரமைக்கப்பட்ட அமைச்சரவையை ஸ்தாபிக்க வேண்டும் என பெரும்பாலான தரப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அமைச்சரவையே தொடர்ந்தும் ஸ்தாபிக்கப்படும். பாராளுமன்ற மட்டத்தில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை இனிவரும் நாட்களில் முன்னெடுப்போம்.

இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும் யோசனைக்கு பிரதான எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்காத நிலையில் அரசாங்கத்துடன் இணக்கமாக செயற்பட்டுக் கொண்டு அரசாங்கத்தை பலவீனப் படுத்தியவர்களை ஒன்றிணைத்து இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிப்பது எந்தளவிற்கு நம்பகத்தன்மையாக அமையும் என்பது கேள்விக்குறியான நிலையில் உள்ளது.

இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபித்தல் யோசனைக்கு பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

அரசாங்கத்திற்கு துரோகமிழைத்த தரப்பினருடன் மீண்டும் ஒன்றிணைவதற்கு அதிருப்தியையும் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

## புதிய அமைச்சரவை...

கலந்துரையாடினார். அரசாங்கத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்து செல்தல் மற்றும் புதிய அமைச்சரவை நியமனம் என்பன தொடர்பில் இதன்போது நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டுள்ளது. சுயாதீனமாக செயற்படுவதாக அறிவித்த குழுவினருக்கும் அழைப்பு விடுக்கப்பட்ட போதும் அவர்கள் அதனை நிராகரித்துள்ளதாக அறிய வருகிறது. சுயாதீனமாக செயற்படுவதாக அறிவித்துள்ள இ.தோ.கவிற்கும் முக்கிய அமைச்சு பதவி கிடைக்கலாம் எனவும் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் மு.க மற்றும் மக்கள் காங்கிரஸ் எம்.பிகளுக்கும் அமைச்சு பதவி கிடைக்க உள்ளதாகவும் அறிய வருகிறது.

புதிய அமைச்சரவைக்கான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. புதிய அமைச்சரவை கூட்டத்தை இன்றை தினம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. புதிய அமைச்சரவையில் 15 அமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், புதிய அமைச்சரவையில் சமல் ராஜபக்ஸ, பஷில் ராஜபக்ஸ, நாமல் ராஜபக்ஸ மற்றும் ஷஷிந்திர ராஜபக்ஸ ஆகியோர் இடம்பிடிக்கமாட்டார்கள் என அறிய முடிகின்றது.

கடந்த அமைச்சரவையில் அங்கம் வகித்த முக்கிய அமைச்சர்கள், புதிய அமைச்சரவையில் இடம்பிடிக்க மாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. தாம் அமைச்சு பொறுப்புக்களை ஏற்கப் போவதில்லை என முன்னாள் அமைச்சர்களான பந்துல குணவர்தன,சரத் வீரசேகர ஆகியோர் அறிவித்துள்ளனர்.

## எரிபொருள் நெருக்கடி ...

அறிவித்துள்ளனர்.

அத்துடன், எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

## முதலாம் தவணை கற்றல்கள்;...

நீடிப்பதற்கு கல்வி அமைச்சு முன்னர் தீர்மானம் எடுத்திருந்தது.

இந்த ஆண்டுடன் தொடர்புடைய பாடத்திட்டங்களை உள்ளடக்குவதற்கு 139 நாட்கள் வரையறுக்கப்பட்ட கால அவகாசம் காணப்படுவதால், இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

அத்துடன் பாடசாலை நேரத்தை ஒரு மணித்தியாலம் வரை நீடிப்பதன் மூலம் கற்பித்தலுக்கான காலத்தை கூடுதலாக வழங்க முடியும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. மேலும், கால அவகாசம் நீடிக்கப்பட்ட பின்னரும் பாடத்திட்டத்தை உள்ளடக்க முடியாத பட்சத்தில், மூன்றாம் தவணையின் போது, சனிக்கிழமைகளில் பாடசாலைகளை நடத்துவது குறித்தும் கல்வி அமைச்சு கவனம் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும், குறித்த தீர்மானத்தை தற்காலிகமாக கைவிடுவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## இலங்கைத் தமிழருக்கு... 03ஆம் பக்க தொடர்...

தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சொந்த நாட்டில் வாழ முடியாமல் தங்களுடைய வாழ்வை இழந்து, இந்தியாவிற்குள் அடைக்கலம் தேடி வரும் இலங்கைத் தமிழர்களை சக மனிதர்களாகக் கருதி, அவர்களை அரவணைக்க வேண்டியது நம்முடைய கடமை என்றும், தற்போது இலங்கையிலுள்ள அசாதாரண சூழ்நிலையில், இந்தியாவிற்கு வரும் இலங்கைத் தமிழர்களுக்கும், ஏற்கெனவே தமிழக முகாம்களில் வசிப்பவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளைப் போன்று, தற்காலிகப் புகலிடம் வழங்குவதற்கான சிறப்பு ஏற்பாடுகளை (Special Provisions to give temporary asylum) வழங்கிட அனுமதி அளிக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி கடந்த 01.04.2022 அன்று தமிழ்நாடு முதல்வர் இந்தியப் பிரதமரிடம் கேட்டுக் கொண்டார்.

அக்கடிதத்தில், கடந்த 3132022 அன்று இந்தியப் பிரதமரை தான் சந்தித்தபோது, இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு இலங்கைத் தமிழர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் உயிர்காக்கும் மருந்துகளை தமிழ்நாடு அரசு வழங்கத் தயாராக உள்ளது எனத் தெரிவித்ததை சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் கடந்த 742022 அன்று ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருடனான தமது தொலைபேசி உரையாடலின்போது, பொருளாதார நெருக்கடியின் காரணமாக இலங்கைத் தமிழர்கள் தங்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்தில் தமிழ்நாட்டிற்கு வந்து கொண்டிருப்பதை தான் தெரிவித்த போது, இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகத்துடன் உரிய ஆலோசனை செய்து, அதற்குப் பிறகு இது தொடர்பான நடவடிக்கைகள் குறித்துப் பரிசீலிக்கலாம் என்று மத்திய அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டிருந்ததையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து உணவு தானியங்கள், காய்கறிகள், மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை, கடுமையான உணவுத் தட்டுப்பாட்டால் சிக்கித் தவிக்கும் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளிலும், தலைநகர் கொழும்பில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கும், தோட்டங்களில் பணிபுரிந்து வருவோருக்கும் பொருட்களை அனுப்புவதற்கு தமிழ்நாடு அரசு உறுதியோடு உள்ளது என்று குறிப்பிட்டுள்ளதோடு, இலங்கையில் நிலவும் இத்தகைய மோசமான நிலைமையைக் கருத்தில் கொண்டு விரைவில் பொருட்களை அனுப்புவதற்கான வசதியை உடனடியாக செய்து தருமாறு முதல்வர், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சரை கேட்டுக் கொண்டுள்ளார்.

## இராணுவம் குறித்து தவறான,... 03ஆம் பக்க தொடர்...

தாக்குதலுக்கு முன் பயிற்சி பெறுவதாகவும் முற்றிலும் பொய்யான அடிப்படையற்ற பிரசாரங்களை மேற்கொண்டு வருவது அவதானிக்கப்படுகிறது.

ஆயுதப்படையைச் சேர்ந்த எவரும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடவில்லை எனவும், இவ்வாறான அறிக்கைகள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகவும் என்பதுடன் இந்த செயற்பாடுகளில் இன்றுவரை ஒரு சிப்பாய் கூட ஈடுபடவில்லை என்பது அறியத்தக்க விடயமாகும்.

சமூக வலையதளங்களில் பரவிவரும் இத்தகைய தீங்கிழைக்கும் பிரசாரங்களில், 'இராணுவ வைத்தியசாலையில் ஊழல் குற்றச்சாட்டு' மற்றும் இராணுவத்தின் கட்டமைக்கப்பட்ட மற்றும் நன்கு நிறுவப்பட்ட இராணுவ ஆலோசனை குழுக்கள் அல்லது நிறுவப்பட்ட ஒப்பந்த நடைமுறைகள் பற்றிய அடிப்படை அறிவு இல்லாதவர்களின் தவறான அறிக்கைகள் ஆகியவை அடங்கும். இத்தகைய தவறான மற்றும் தீங்கிழைக்கும் அறிக்கைகளை இராணுவம் கடுமையாக மறுக்கிறது.

அனைவருக்கும் அறிந்தவகையில் ஆயுதப்படையினர் கடந்த சில நாட்களில், அந்த அமைதியான போராட்டக்காரர்கள் அல்லது அமைப்புக்களில் எதிலும் தலையீடு இல்லாமல் மகத்தான மற்றும் விலைமதிப்பற்ற சேவைகள் மூலம் இந்த நாட்டிற்கு அமைதியை ஏற்படுத்திய ஒரு அமைப்பின் ஒழுக்கமான உறுப்பினர்களாக அவர்கள் நாட்டின் நலன்களுக்கு எதிராகவும் செயல்படவில்லை.

இராணுவத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட இந்த மோசமான நடவடிக்கைகளை இராணுவம் மிகவும் வலுவாகவும் திட்டவட்டமாகவும் நிராகரிப்பதோடு, அதே சமயம் இந்த நாட்டின் பிரஜையாக உணர்வும், சரியான எண்ணமும் கொண்ட குடிமக்களை, சிப்பாய்கள் மீது முழு நம்பிக்கை வைக்குமாறு வலியுறுத்துகிறது.

தற்போது பணியாற்றும் சிப்பாய்கள் அதிக பயிற்சி பெற்றவர்களாகவும், தொழில் ரீதியில் தகுதியுடையவர்களாகவும், எந்தவொரு பாதுகாப்புச் சவாலையும் எதிர்கொள்ள முடியுமானவர்களாக இருக்கிறார்கள் என்பதோடு தற்போதைய சூழ்நிலையில் பொலிஸாரால் அழைக்கப்பட்டால் மட்டுமே பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்குவர் என்றும் இராணுவம் தெரிவித்துள்ளது.

இதேபோல், இராணுவப் பயிற்சியின் ஒரு பகுதியாக அனைத்து முகாம்களிலும் நன்கு வடிவமைக்கப்பட்ட மற்றும் கட்டமைக்கப்பட்ட பயிற்சி திட்டங்கள் தடையின்றி முன்னெடுக்கப்படுவதுடன் இது ஊடகங்களில் சில பிரிவினர்களால் குறிப்பிடுவது போல் வன்முறைக்கான புதிய எந்தவொரு முன்னெடுப்பும் அல்ல.

அரசியலமைப்பின் விதிகளுக்கு இணங்க, நாட்டையும் அதன் மக்களையும் முழு நேரமும் பாதுகாப்பதில் இராணுவம் உறுதியாக இருப்பதால், குறித்த திட்டமிட்ட சூழ்ச்சிகள் மற்றும் துரோக செயல்களால் பொதுமக்கள் தூண்டப்படவோ அல்லது தவறாக வழிநடத்தப்படவோ வேண்டாம் என்று பொதுமக்களை இராணுவம் கேட்டுக்கொள்கிறது.

## காணாமல் ஆக்கப்பட்டோரது... 03ஆம் பக்க தொடர்...

எம்மை அழைத்துள்ளனர்.

மே 18 தொடர்பாகவும் கலந்துரையாடுவதற்கு அழைத்தனர். நாங்கள் கடந்த முறை முக்கிய நிபந்தனைகளை முன்வைத்திருந்தோம். அதன் அடிப்படையில் இத்தரப்பினர் எங்களை அழைப்பதுஇ அரசியல் ரீதியாகவும் செயற்பாட்டு ரீதியாகவும் அதிர்ப்தி அடைந்திருக்கும் மக்கள் மத்தியில் தங்களை பாதுகாப்பதே அவர்களது நோக்கமாகும்.

அவர்கள் தமிழ் மக்களிற்கு ஒரு கொள்கை ரீதியாக உண்மையான நிலைப்பாட்டை அறிவித்த பின் எம்மை சந்திப்பது பொறுத்தமாக இருக்கும். ஒற்றை ஆட்சியை எதிர்க்கும் முகமாகவே சிலதரப்புகளுடன் இணைந்து செயற்பட்டோம். அவர்கள் எமது கோரிக்கையை ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்பியிருந்தோம். ஆனால் தற்போது அவர்கள்ளது கொள்கையை. தமிழ் மக்களுக்கு பகிரங்கமாக அறிவிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. சர்வதேச இராஜதந்திர சூழலுக்கும் அவர்களது கொள்கையை அறிவிக்க வேண்டியுள்ளது. அதனாலேயே இந்த கோரிக்கையை அவர்கள் மத்தியில் முன்வைக்கிறோம்.

## எங்கள் கருத்தை ஏற்காவிடின்... 03ஆம் பக்க தொடர்...

ஏற்காவிட்டாவிட்டால் அரசாங்கத்திற்கு எதிராக வீதியில் இறங்கிய மக்களுக்கு ஆதரவளிப்பதைத் தவிர வேறு வழியில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த வாரம் கூடி இது தொடர்பில் முடிவு எடுக்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## முப்படை, பொலிஸார் பொறுப்புடன்...

முடியுமானதை செய்வார்கள் என பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன மற்றும் இராணுவ தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா ஆகியோர்களின் கவனத்திற் கொள்ளும் வகையில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவினால் அவரது முகநூலில் இடப்பட்ட பதிவுக்கு பாதுகாப்பு அமைச்சு பதிலளித்துள்ளது.

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில் :

அமைதியான முறையில் போராட்டம் மேற்கொள்பவர்கள் மீது இராணுவம் அதிகாரத்தை தேவையற்ற முறையில் பயன்படுத்த எவ்வித ஏற்பாடுகளும் இல்லை என பாதுகாப்பு செயலாளர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், ஜனநாயக ரீதியில் நடத்தப்படும் அமைதியான போராட்டங்களை ஒடுக்க இராணுவப் படைகள் அனுப்பப்பட மாட்டாது என்று குறிப்பிட்டுள்ள பாதுகாப்பு அமைச்சு எவ்வாறாயினும், வன்முறை ஏற்படும் சந்தர்ப்பத்தில் தேசத்தைப் பாதுகாப்பதற்கும், அரசியலமைப்பை நிலைநிறுத்துவதற்கும், அனைத்து இலங்கையர்களிடையே அமைதி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பொலிஸாரினால் உதவி கோரப்படும் சந்தர்ப்பத்தில் இராணுவம் பொலிஸாருக்கு ஒத்துழைப்பை வழங்கும்.

நாட்டையும் மக்களையும் நேசிக்கும் இலங்கையின் பாதுகாப்பு படையினர் தார்மீக ரீதியில் நேர்மையானவர்கள் என சுட்டிக்காட்டிய பாதுகாப்புச் செயலாளர் ,அமைதியான முறையில் இடம்பெறும் போராட்டக்காரர்களுக்கு மத்தியில் புலனாய்வு பிரிவினர் அனுப்பப்பட்டு அவர்களில் ஊடாக வன்முறையை ஏற்படுத்தவோ அல்லது குண்டு தாக்குதல்களை மேற்கொண்டு போராட்டக்காரர்களை கலைப்பதற்கு முப்படையினர் ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என சமூக ஊடகங்கள் ஊடாக வெளியிடப்பட்டுள்ள தகவல்கள் வெறுமனே வதந்திகள் மாத்திரமே தவிர அதில் எவ்வித உண்மையும் கிடையாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அமைதியான போராட்டத்தின் போது அவர்களின் உள்நோக்கங்களை அடையச் செயல்படும் பல்வேறு தரப்பினரின் செயட்பாடுகள் தொடர்பில் சுட்டிக்காட்டும் பாதுகாப்பு அமைச்சு, அமைதியான போராட்டங்கள் என்ற பெயரில் பொதுச் சொத்துக்களுக்கோ அல்லது தனியார் சொத்துக்களுக்கோ சேதங்களை ஏற்படுத்துபவர்கள் மற்றும் அதற்கு தலைமை வகிப்பவர்களுக்கு எதிராக பொலிஸாரினால் உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் மற்றும் முப்படைத் தளபதிகளுடன் இணைந்து நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம் சட்டம், ஒழுங்கு மற்றும் பொதுமக்களைப் பாதுகாக்க முப்படைகளும் பொலிஸாரும் பொறுப்புடன் நேர்மையுடனும், மரியாதையுடனும் நியாயமான மற்றும் பக்கச்சார்பற்ற முறையில் செயற்படுவதற்கான தங்களால் முடியுமானதை செய்வார்கள் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




பொருளாதாரத்தால் நலிந்து போயுள்ள நாட்டையும் மக்களையும் காக்க ஆசி வேண்டியும், நாட்டில் சாந்தி சமாதானம் நிலவ வேண்டியும் பால்குட பவனி ஒன்று இடம்பெற்றது. பருத்தித்துறை தம்பசிட்டியில் உள்ள மாயக்கைப்பிள்ளையார் ஆலயத்தில் நேற்று சனிக்கிழமை(16) காலை இப் பால்குட பவனி இடம்பெற்றது. 108 பெண்கள் பாற்குடத்தை தாங்கி தமது ஊரினைச் சுற்றி அப்பாலுள்ள அம்மன் கோவிலுக்கு சென்று அங்கு அம்மனுக்கு பாலாபிஷேகம் இடம்பெற்றது. படம்: நாகர்கோவில் விஷேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்

## கிளிநொச்சியில் உயிர்ப்பின் ஞாயிறு வழிபாடு



பரந்தன் குறுாப் நிருபர்

உயிர்ப்பின் ஞாயிறு வழிபாடுகள் கிளிநொச்சியில் சிறப்பாக இடம்பெற்றன. அனைத்து திருச்சபைகளிலும் விசேட திருப்பலி வழிபாடுகள் இடம்பெற்றன.

நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் பிரச்சினைகள் நீங்கி உயிர்த்த இயேசுபிரான் நாட்டை ஆசீர்வதிக்க வேண்டும் என வழிபாடுகள் ன முன்னெடுக்கப்பட்டன. முறிகண்டி தென்னிந்திய திருச்சபையின் வழிபாடு நேற்று காலை இடம் பெற்றது. திருப்பலியை வண பிதா ஜோன் தேவசகாயம் ஒப்புக் கொடுத்தார்.

## லிற்றில் எய்ட் அமைப்பு மக்களை கல்வியறிவூட்டி வளர்த்துவிடுகிறது

### முத்துகுமார குருக்கள் சிவஶ்ரீ மகேஷ்வரநாத சர்மா



லிற்றில் எய்ட் போன்ற அமைப்பு மக்களை கல்வியறிவூட்டி வளர்த்துவிடுவதாக ஜெயந்திநகர் மீனாட்சி அம்மன் கோயில் பிரதம குரு முத்துகுமார குருக்கள் சிவஶ்ரீ மகேஷ்வரநாத சர்மா தெரிவித்தார்.

கடந்த 12 ஆண்டுகளாக கருணா நிலைய குரு எஸ். கே. டானியல் தனது ஆசியுரையில் லிற்றில் எய்ட் இவ்வளவு தொகையான மாணவர்களது வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கின்றது என்றும் இவ்வளவு தொகையான மாணவர்களுக்கு கல்வியும்



கிளிநொச்சியில் இயங்கி வரும் லிற்றில் எய்ட் அமைப்பின் 2022ம் ஆண்டின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி திருநகரில் உள்ள லிற்றில் எய்ட் மண்டபத்தில் மிகச் சிறப்பாக இடம்பெற்றது. 200 பேர் மட்டுமே கொள்ளக் கூடிய மண்டபத்தில் 350 பேர்வரை கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர். 250 மாணவர்கள் கணணி வன்பொருள் கற்கை, கணணி மென்பொருள் கற்கை, வடிவமைப்பு, தையல் மற்றும் வடிவமைப்பு ஆகிய துறைகளில் டிப்ளோமா கற்கைகளைப் பூர்த்தி செய்து அதற்கான சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வுக்கு ஆசியுரை வழங்கிய ஜெயந்திநகர் மீனாட்சி அம்மன் கோயில் பிரதம குரு முத்துகுமார குருக்கள் சிவஶ்ரீ மகேஷ்வரநாத சர்மா, லிற்றில் எய்ட் போன்ற அமைப்பு கீழேயுள்ள மக்களை கல்வியறிவூட்டி வளர்த்துவிடுவதாக தெரிவித்தார்.

சமூகப் பண்புமூட்டி அவர்களை நல் வழியில் பயணிக்கச் செய்திருப்பதாகவும் தெரிவித்தார். மாற்றங்களை யாரும் இலகுவில் ஏற்றுக்கொள்வதில்லை ஆனால் லிற்றில் எய்ட் தங்களிடம் வரும் மாணவர்களில் மாற்றத்தை ஏற்படுத்தி அவர்களை ஆளுமைகளாக விருத்தி செய்து அனுப்புவதாகத் தெரிவித்தார்.

இந்நிகழ்வு லிற்றில் எய்ட் ஸ்தாபகர் த ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது. அவர் தனதுரையில் இச்சான்றிதழ்கள் கற்கையின் முற்றுப்புள்ளி அல்ல என்றும் சேர் ஐசாக் நீயூட்டன் குறிப்பிட்டது போல் நாம் கற்ற ஒரு துளிக்கல்விக்கான அத்தாட்சி மட்டுமே என்றும் கல்லாதது சமுத்திரத்தின் அளவானது என்பதைச் சுட்டிக்காட்டினார். பெறுபேறுகள், சான்றிதழ்கள், பட்டங்கள் அல்ல கல்வி எனக் குறிப்பிட்ட அவர், கல்வி என்பது அவற்றையும் கடந்தது எனத் தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் பலத்த மழை பல பகுதிகளில் வெள்ளம்




கடந்த வெள்ளி மற்றும் சனி ஆகிய நாட்களில் பிற்பகல் வேளைகளில் இடியுடன் பலத்த மழை பதிவாகியுள்ளது. மிக குறுகிய மணித்தியாளங்களில் அதிகளவான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

36 அடி கொள்ளவு கொண்ட இரணைமடு குளத்தின் நீர்மட்டம் 35 அடி 7அங்குலமாக அதிகரித்துள்ளது. அத்துடன் கனகாம்பிகைக்குளம் மீண்டும் வான்பாய ஆரம்பித்துள்ளது. இதேவேளை பாரதிபுரம், பொன்னகர், திருநகர் உள்ளிட்ட பகுதிகளில் அதிக மழை காரணமாக வெள்ள நீர் மக்கள் குடியிருப்புக்களிற்குள் புகுந்துள்ளது.

## வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் இடமாற்றம்

யாழ். விசேட நிருபர்



வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெகத் பளிகக்காரவுக்கு உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அந்த வெற்றிடத்துக்கு மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெயந்த வீரசூரிய இடமாற்றப்பட்டுள்ளார்.

அதனடிப்படையில் வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெகத் பளிகக்கார சமூக பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பாக செல்லவுள்ளதுடன், மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெயந்த வீரசூரிய, வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## வடமராட்சியில் உடல்நல பாதிப்பால் உயிரிழந்த மாணவி கர்ப்பம்

கரவெட்டி தினகரன் நிருபர்

வடமராட்சியில் திடீர் உடல்நல பாதிப்பால் உயிரிழந்த மாணவி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனையில் அவர் கர்ப்பம் தரித்திருந்தமை கண்டறியப்பட்டுள்ளதாக வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

திடீர் உடல்நல பாதிப்பு அடைந்த நிலையில் 18 வயதுடைய குறித்த மாணவி நேற்று முன்தினம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தார். அவரை பரிசோதித்த வைத்தியர்கள் அவர் உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர். அவருடைய சடலம் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு நேற்று மருத்துவ அறிக்கை வெளியாகியுள்ளது. அதில் அவர் இரு மாதக் கர்ப்பமாக இருந்துள்ளமை தெரியவந்துள்ளது. இதனை அடுத்து பொலிஸார் மரணம் தொடர்பில் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## மாணவர்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வு



கரவெட்டி தினகரன் நிருபர்

மிருசுவில் வடக்கு மிருசுவில் பாரதி முன்பள்ளியின் வருடப்பிறப்பு விழாவும் மாணவர்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வும் சித்திரை புத்தாண்டு தினத்தன்று மிருசுவில் வடக்கு பாரதி முன்பள்ளியில் ஆசிரியர் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கை முதல் உதவிச்சங்கத்தின் இந்து சமயத் தொண்டர் சபையின் தேசிய ஆணையாளர் சிவத்திரு வை.மோகனதாஸ், அதன் தேசிய கண்காணிப்பாளர் சிவத்திரு வை.ஜெகதாஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

இதில் புலம் பெயர் தேசத்தில் வசிக்கும் சமூகசேவையாளர் கருணாகரன் விதுஷனின் நிதி அனுசரணையில் முன்பள்ளி மாணவர்கள் 48 பேருக்கு 65000/ ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களும் இலங்கை முதலுதவி சங்க இந்து சமயத் தொண்டர் சபையினரால் வழங்கப்பட்டது

இந்நிகழ்வில் பாரதி முன்பள்ளி மாணவர்கள், பெற்றோர்கள் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## பொருளாதார மத்திய நிலையம் சந்தை செயற்பாடுகளை பாதிக்கக்கூடாது

### நகரசபை உறுப்பினர்கள்

சாவகச்சேரி விசேட நிருபர்

அண்மையில் தென்மராட்சி மட்டுவில் பகுதியில் திறந்து வைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையம் சாவகச்சேரி பொதுச்சந்தை செயற்பாடுகளை எந்தவிதத்திலும் பாதிக்கக்கூடாதென சாவகச்சேரி நகர சபை உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர். அண்மையில் நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர்கள் இதனை தெரிவித்திருந்தனர். இது தொடர்பாக மேலும் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்; சாவகச்சேரி பொதுச்சந்தை மரக்கறி வியாபாரிகள் தமது வர்த்தக நிலையங்களை மட்டுவில் பொருளாதார மத்திய நிலையத்திற்கு மாற்றி வருகின்றனர். இதனால் எதிர்காலத்தில் சாவகச்சேரி பொதுச் சந்தைக்கு பாதிப்பு ஏற்படும். பொருளாதார மத்திய நிலையம் பொதுச்சந்தை செயற்பாடுகளை எந்த விதத்திலும் பாதிக்கக்கூடாது. அதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரி நகரசபை முன்னெடுத்து சந்தை செயற்பாடுகளை வலுப்படுத்த வேண்டும் என மேலும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

## ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் கைது

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியாவில் ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா பேருந்து நிலையத்திற்கு முன்பாக கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசார் அங்கு சந்தேகத்திற்கிடமான முறையில் நின்றிருந்த இளைஞர்களை சோதனையிட்டனர்.

இதன்போது அவர்களது உடமையில் இருந்து 50 கிராம் ஐஸ் போதைப்பொருளினை மீட்டனர்.

குறித்த இளைஞர்களை கைது செய்த பொலிசார் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக தெரிவித்தனர்.

# நகர்வலம்



## நகர அலங்கார திட்டத்தின் கீழ் மாத்தறை - பிடபெத்தர நகரம்

### அபிவிருத்தி; ரூ. 16.5 பில். ஒதுக்கீடு

( மாத்தறை தினகரன் நிருபர் )

நகர அலங்கார திட்டத்தின் கீழ் மாத்தறை – பிடபெத்தர நகரம் அபிவிருத்தி செய்யப்படவிருக்கிறது. இந்நகரத்தில் புதுக்கட்டடங்கள் நிர்மாணித்தல், வீதிகள் அமைத்தல், கழிவு நீர் முகாமைத்துவம், விளையாட்டுத் திடல் சனசமூக நிலையம் என்பன அமைத்தல் போன்ற அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. இதற்காக 16.5 பில்லியன் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

நகரில் அனுமதியின்றி சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள கட்டடங்கள் யாவும் அகற்றப்பட்டு, அதற்குப் பதிலாக புதுக்கட்டடங்கள் நிர்மாணிக்கப்படவிருக்கின்றன. பிரதான வீதி அகலமாக்கப்பட்டு காபட் வீதியாக அமைக்கப்படுவதோடு நகரிலுள்ள ஏனைய வீதிகள் யாவும் காபட் வீதிகளாக அமைக்கப்படவுள்ளது. மேலும் பல புது வீதிகளும் அமைக்கப்படவுள்ளன.

நகர அலங்காரத்திற்காக பூச்சாடிகள் மற்றும் சிறிய மரங்கள் நடவும் நடவடிக்கை எடுக்கப்படும். நகர அலங்காரத்துக்கு இடைஞ்சலாகக் காணப்படும் குப்பைகளை அகற்றி குப்பை போடுவதற்காக சில இடங்களை ஒதுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பிடபெத்தர பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார்.



இந்தியாவின் தமிழகத்திலுள்ள ஸ்ரீ காயத்ரி பீட மாதா ஆலயத்தின் ஸ்ரீ தயானந்தபுரி மஹா ஸ்வாமிகள் அண்மையில் தமிழகத்தில் உள்ள இலங்கை துணைத் தூதுவர் டாக்டர் டி. வெங்கடேஷ்வரனை சான்ஸரி வளாகத்தில் சந்தித்து, மே மாதம் கோயம்புத்தூர் சௌடேஸ்வரி அம்மன் கோவிலின் 'கும்பாபிஷேக' (திறப்பு விழா) நிகழ்ச்சியில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்தபோது...

காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டம்;

## நடுநிலைமையாக காணப்பட்டால் நாட்டின் எதிர்காலம் சிறப்பாகும்

- ஸ்ரீ.ல.சு.க தேசிய அமைப்பாளர் துமிந்த திசாநாயக்க எம்.பி

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

காலி முகத்திடலில் இடம்பெறும் மக்கள் ஆர்ப்பாட்டங்கள் நடுநிலைமையானவையாக காணப்பட்டால் நாட்டின் எதிர்காலம் சிறப்பானதாக அமையும் என அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தேசிய அமைப்பாளருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

சித்திரை புத்தாண்டு தினத்தை முன்னிட்டு மகா சங்கத்தினரிடம் ஆசி பெறுவதற்காக சென்றிருந்த போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில் :

அரசாங்கத்திற்கு எதிராக கடந்த 09 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட மக்கள் எழுச்சிப் போராட்டம் (16), 8 ஆவது நாளாகவும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

காலி முகத்திடல் ஆர்ப்பாட்டத்தில் பெரும்பாலான இளைஞர் யுவதிகள் ,முதியோர், தொழில் வல்லுனர்கள் மற்றும் கலைஞர்கள் இருக்கின்றனர். இவர்கள் அனைவரினதும் எதிர்பார்ப்பு இந்த நாட்டுக்கு நீதி நியாயம் கிடைக்க வேண்டும் என்பதாகும் . அவ்விடத்தில் உள்ள கோஷங்களை பார்க்கும் போது அவைகள் சரியா பிழையா என்பது தொடர்பில் கருத்து முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால் அவைகள் அனைத்தும் பொதுவான கருத்தாக உள்ளது. எதிர்கால சந்ததியினருக்கு சிறந்த வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும்.

அரசியல் கட்சிகள் என்ற ரீதியில் அரசியல் அதிகாரகரத்தை பெற்றுக்கொள்வதற்கு பல பொய் கூறி மக்களை ஏமாற்றிய பல சந்தர்ப்பங்கள் உண்டு. பெரும்பாலான பொதுமக்கள் அதிகூடிய அதிகாரத்தை ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்திற்கும் வழங்கினர். ஆனால் அதே பொது மக்கள் இன்று எதிராக ஆர்ப்பாட்ட பேரணிகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்கின்றனர். நாட்டின் எதிர்காலத்தை சரியான பாதையில் இட்டுச்செல்ல மக்கள் தற்போது மாற்றத்தை கோருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் அரசியல் கட்சிகள் மக்கள் போராட்டத்தை உரிமை கோர முயல்கின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



## எவோட்ஸ்-2022 கட்டுரைப்போட்டி

புதிய அலை கலை வட்டத்தின் எவோட்ஸ் 2022க்கான கலை, கலாசாரப் போட்டித்தொடரின் வரிசையில் கட்டுரைப்போட்டிக்கான ஆக்கங்கள் கோரப்படு கின்றன. போட்டிக்கான நிபந்தனைகள் வருமாறு,

1) “ஆக்க இலக்கியங்களும் இன்றைய நிலையும்” என்ற தலைப்பில் கட்டுரை எழுதப்படவேண்டும்.
2)கட்டுரைகள் 1500 சொற்களுக்கு குறையாமலும்,3500 சொற்களுக்கு மேம்படாமலும் இருத்தல் வேண்டும்.
3)கட்டுரை பாமினி பொன்டில் ரைப் செய்து அனுப்பப்படவேண்டும்.
4)பிரதியுடன் பெயர், முகவரி,தொடர்புக்கான தொலைபேசி இலக்கம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பனவற்றை தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.
5)ஒருவர் ஒரு ஆக்கத்தை மட்டுமே அனுப்பவேண்டும். ஆக்கம் முன்னர் ஏதேனும் ஊடகங்களிலோ பதிவாக்கங்களிலோ இடம்பெற்றிருக்க கூடாது. கட்டுரைகளை அனுப்பவேண்டிய இறுதித் திகதி 03.05.2022
6)அனுப்பவேண்டிய இணையவழிகள் puthiyaalaikalaivaddam1980@gmail.com மற்றும் 075 4880172 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
7)வயது எல்லை 45 வயதுக்கு கீழ்

மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள 076 2002701, 077 6274099 மற்றும் 077 7412604 என்ற அலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

## அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலய இரண்டாம் செயலாளருடன் சந்திப்பு

ருஸைக் பாரூக்

இளைஞர் பாராளுமன்றத்தின் வெளிவிவகாரம் மற்றும் இராஜதந்திர உறவுகளின் பிரதி அமைச்சர் அஹ்மத் ஸாதிக், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முப்தி ஆகியோர் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலய இரண்டாம் செயலாளர் திருமதி லாரா செவ்ன்சன் அவர்களை அண்மையில் சந்தித்தனர். இச்சந்திப்பில் , இலங்கையில் உயர் கல்வி ,வேலைவாய்ப்பு , வெளிவிவகாரம் மற்றும் சுற்றுலாத்துறை போன்றவற்றில் இளைஞர்களின் நிலைப்பாடு தொடர்பாகவும் மேலும் அதில் உள்ள குறைகள் குறித்தும் மேலும் இத்துறைகளில் அவுஸ்திரேலிய நாட்டின் இளைஞர்களின் நிலைப்பாடு குறித்தும் கலந்துரையாடப்பட்டது.



கலந்துரையாடலின் பின்னர், இலங்கையின் வேலைவாய்ப்பு , உயர்கற்கை வீதம், உயர் கற்கை சலுகைகள் (Higher educational scholarships) , வெளியுறவுத்துறை மற்றும் சுற்றுலாத்துறை மேலும் வளர்வதற்கான தேவைப்பாடுகள் குறித்தும் விசேடமாக இரு நாடுகளின் இளைஞர்களின் உறவுகளை வலுப்படுத்தும் செயற்திட்டங்களுக்கான ஆதரவினை எதிர்காலங்களில் வழங்குமாறும் இது தொடர்பில் தான் நடவடிக்கை எடுப்பதாகவும் இரண்டாம் செயலாளர் தெரிவித்தார்.

மர்ஹூம் கே.ஏ. பாயிஸ் முன்னெடுத்த...

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவை நிறுத்த ஒருபோதும் இடமளிக்க மாட்டேன்



பரிசளிப்பு நிகழ்வில் புத்தளம் நகர பிதா

(புத்தளம் தினகரன் நிருபர்)

மறைந்த புத்தளம் நகர சபைத் தலைவர் மர்ஹூம் கே.ஏ. பாயிஸினால் கொண்டுவரப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு திட்டத்தை தாமும் தொடர்ந்து வழங்கி வருவதோடு முன்பள்ளி கல்வி அபிவிருத்திக்கான நகர சபையின் பங்களிப்பு தடையின்றி தொடர்ந்து இடம்பெறும் எனவும் புத்தளம் நகர பிதா எம்.எஸ்.எம். ரபீக் தெரிவித்தார்.

புத்தளம் ஜீனியஸ் அவ்லாத் முன்பள்ளியின் வருடாந்த

போட்டி நிகழ்ச்சிகள் மற்றும் பரிசளிப்பு வைபவம் என்பன அண்மையில் முன்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே நகர பிதா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாணவ சிறார்களின் போட்டி மற்றும் கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களித்த நகர பிதா மாணவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் நகரசபை நிர்வாக அதிகாரி நௌஷாத், சமூக அபிவிருத்திப் பிரிவு மற்றும் முன்பள்ளி செயற்பாடு விடயங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஜலீல் ஜஸ்லீன் மற்றும் பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



முஸ்லிம் கலாசார திணைக்களத்தின் ஊடாக மஸ்ஜிதுகளுக்கு விநியோகிப்பதற்காக வழங்கப்பட்ட பேரீத்தம் பழங்கள் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் நெறிப்படுத்தலில் புத்தளம் மாவட்ட செயலாளர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் ஆகியோர் மூலம் பதிவு செய்யப்பட்ட பள்ளி நிர்வாகிகளிடம் புத்தளம் கலாசார மண்டபத்தில் வைத்து (13) கையளிக்கப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம். (படம்: புத்தளம் தினகரன் நிருபர்)

## சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் தேசிய பாடசாலையில் தலைமைத்துவ செயலமர்வு





(பேருவளை விசேட நிருபர்)

பேருவளை, சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி தேசிய பாடசாலையின் 2022 ஆம் அண்டிற்காக தெரிவு செய்யப்பட்ட மாணவ தலைவிகளுக்கான தலைமைத்துவ பயிற்சிப்பட்டறை கல்லூரி தேசமான்ய பாக்கிர் மாக்கார் மண்டபத்தில் அதிபர் பஹீமா பாயிஸ் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் எம்.ஏ. அஹமட் இப்றாஹீம் (பீ.எஸ்.ஸீ), அல்ஸான் மிஹ்லார், தாஹா ஹஸீன், வை.எல்.எம் ஹாபிஸ் ஆகியோர் பல்வேறு தலைப்புக்களில் இங்கு உரை நிகழ்த்தினர். செயலமர்வு முடிவில் பங்குபற்றிய மாணவத் தலைவிகளுக்கு சான்றிதழும் வழங்கப்பட்டது. அதிபர் தலைமையில் நடைபெற்ற இச்சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரபல எழுத்தாளரும் அரும்பு ஆசிரியருமான வை.எல்.எம் ஹாபிஸ், சீனன் கோட்டையைச் சேர்ந்த டாக்டர் மிஸ்ஹா மிஸ்வர் ஆகியோர் அதிதிகளாக கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## யானை தாக்கி குடும்பஸ்தர் பலி

அநுராதபுரம் தினகரன் நிருபர்

காட்டு யானையின் தாக்குதலில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக எலயாபத்துவ பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் 16 ஆம் திகதி மாலை பளுகஸ்வெவ உலுக்குளம பகுதியில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். சீப்புக்குளம் பகுதியை வசிப்பிடமாக கொண்ட 65 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, மேய்ச்சலுக்கு விடப்பட்டிருந்த கால்நடைகளை எடுத்து வருவதற்காக வேண்டி சென்றிருந்த வேளையில் இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளமை தெரிய வந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எலயாபத்துவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## துவிச்சக்கர வண்டியுடன் கார் மோதி விபத்து; இரு சிறுவர்கள் உயிரிழப்பு

அநுராதபுரம் தினகரன் நிருபர்

துவிச்சக்கர வண்டியொன்றுடன் கார் ஒன்று மோதி இடம்பெற்ற கோர விபத்தில் இரு சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாக தமுத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (16) மாலை 5.30 மணியளவில் குருநாகல் அநுராதபுரம் பிரதான வீதியின் தமுத்தேகம வெல்லங்கடவள பகுதியில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். ராஜபக்ஷகம மல்வானேகம பகுதியை வசிப்பிடமாக கொண்ட 13 மற்றும் 14 வயதுடைய சிறுவர்கள் இருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர். சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, கல்கமுவ பகுதியில் இருந்து அநுராதபுரம் பகுதி நோக்கி சென்று கொண்டிருந்த கார் ஒன்று சிறுவர்கள் பயணித்த துவிச்சக்கர வண்டியில் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளமை தெரிய வந்துள்ளது.

## இயேசு கிறிஸ்துநாதரின் உயிர்ப்பு தின நள்ளிரவு ஆராதனை

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

இயேசு கிறிஸ்து நாதரின் உயிர்ப்பு தின நள்ளிரவு ஆராதனைகளும், திருப்பலி பூஜைகளும் நேற்று முன்தினம் இரவு (16) புத்தளம் சென். மேரிஸ் கிறிஸ்தவ தேவாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது ஈஸ்டர் தாக்குதலில் உயிர்நீர்த்தவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை செய்யப்பட்டதுடன், அவர்களுக்காக மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

மேலும் நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றிலிருந்தும் , பொருளாதார நெருக்கடியிலிருந்தும் நாடும், நாட்டு மக்களும் பாதுகாப்பு பெற வேண்டும் எனவும் பிரார்த்தனைகளும் செய்யப்பட்டது.



புத்தளம் பங்குத் தந்தை அருட்திரு பயஸ் கெனடி பர்னாந்து திருப்பலி ஒப்புக் கொடுத்தார். இதன்போது, பரிசு மற்றும் உணவு பரிமாற்றம் என்பனவும் இடம் பெற்றன.

இந்த வழிபாட்டில் புத்தளம் பங்குத் தந்தை அருட்திரு பயஸ் கெனடி பர்னாந்து உட்பட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பக்தர்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

இதேநேரம் புத்தளம் மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து பங்குகளில் உள்ள ஆலயங்களிலும் விசேட ஆராதனைகள் இடம்பெற்றன.

மேற்படி ஆராதனைகளின் போது தேவாலயங்களில் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சோழர்கால சிவனாலயத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை!

சோழர்காலத்தில் நிருமாணிக்கப்பட்டு தூர்ந்து காடுமண்டிக்கிடந்த மடத்தடி மாட்டுப்பளையிலுள்ள மிகவும் பழைமை வாய்ந்த சிவன் ஆலயத்தில் அழகிய சிவலிங்கம் ஒன்று பிரதிஷ்டைசெய்துவைக்கப்பட்டுள்ளது. இது மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு மேற்காக வயல்சார்ந்த இயற்கை எழில்கொஞ்சும் மருதநிலத்தில் அமைந்துள்ளது.

இவ்வாலயத்திற்கு விஜயம் செய்த பேராசிரியர் பத்மநாதன் உள்ளிட்ட வரலாற்றாய்வாளர்கள் பலரும் ஆய்வொன்றை செய்துள்ளனர்.

காடுமண்டிக்கிடந்த அவ்வாலயத்தை துப்புரவுசெய்து பழைமை குன்றாது புனரமைத்து இன்று அதே இடத்தில் அழகான பக்திபூர்வமாக சிவலிங்கமொன்று பக்தர்கள் வழிபாட்டிற்காக பிரதிஷ்டை செய்துவைக்கப்பட்டுள்ளது.



சோழர்காலத்தில் நிருமாணிக்கப்பட்டு தற்போது தூர்ந்துசிதைந்துகிடக்கின்ற மடத்தடி சிவன் ஆலய முன்றலில் சிவலிங்கம் நிறுவுவதற்கான பீடமொன்றுக்கு அடிக்கல்நடும் வைபவம் கடந்த 2022 பெப்ருவரி மாதம்(16)புதன்கிழமை பௌர்ணமியன்று ஆதீன ஸ்தாபக இயக்குனர் மு.ஜெயபாலன்.சிவனருள் பவுண்டேஷன் மாவட்ட தலைவர் தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி அனுசியா சேனாதிராஜா மாவட்டச்செயலாளர் கே.வாமதேவன். பொருளாளர் ரி.ஜனார்த்தனன் காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதயசிறிதர் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மா. நடராஜா ஆலய பரிபாலன சபை ஆலோசகர்களான வி.ரி.சகாதேவராஜா வா.குணாளன். வ.ஜெயந்தன் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு அடிக்கல் நட்டனர்.

அடிக்கல் நடப்பட்ட பீடத்தில் சிவனருள் பவுண் நடைபெற்றது. சிவனருள் பவுண்டேசன் ஆதரவில் ஆலயத்தலைவர் கி.ஜெயசிறில் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி எம்.கோபாலரெத்தினம் மட்டக்களப்பு டேசன் அனுசரணையில் மட்டக்களப்பு ஆதீன ஸ்தாபகரும் இயக்குனருமான மு.ஜெயபாலனின் ஏற்பாட்டில் சிவலிங்கம் அம்மனின் கும்பாபிசேகமன்று (6.4.2022)அதிகாலையில் தமிழ்மந்திரங்கள் உச்சரிக்கப்பட்டு தமிழ்முறைப்படி குடமுழுக்கு செய்யப்பட்டு பிரதிஷ்டை செய்துவைக்கபட்டது. நிகழ்வில் ஆலயதலைவர் கி.ஜெயசிறில் ஆலய ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட நிருவாகசபையினர் கலந்து கொண்டனர்.

2021முற்பகுதியில் முன்னாள் தலைவர் கோ.கமலநாதன் இருந்த காலை அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் ஆலயஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா இந்துகலாசாரஅலுவலர் உள்ளிட்டோர் விஜயம்செய்து பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாலயத்தின் தோற்றம் சோழர்காலத்திற்குரியது என வரலாற்றாய்வாளர்கள் கூறியுள்ளனர். குறிப்பாக சோழர் இலங்கையில் பொலநறுவையை மையமாகக் கொண்டு 52ஆண்டுகள் ஆட்சிசெய்த காலத்தில் இவ்வாலயம் அமைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. எனவே முதலில் சோழர்களின் பொலநறுவை ஆட்சி பற்றி அறிந்திருப்பது நல்லது. சோழர்களின் பொலநறுவை ஆட்சி பொலன்னறுவை இராச்சியம் அல்லது பொலன்னறுவை இராசதானி என்பது அனுராதபுர இராச்சியம் சோழர்களால் கைப்பற்றப்பட்ட பின்னர் அவர்களால் இலங்கையில் உருவாக்கப்பட்ட இராச்சியம். கிபி 1017– கிபி 1236 காலகட்டத்திற்குரிய இக்காலத்தை முதலில் மும்முடிச் சோழ மண்டலம் என அழைக்கப்பட்டது. இலங்கை நீர்வள நாகரிகத்தின் பொற்காலமாக இதனைக் குறிப்பிடலாம்.

சைவ மஞ்சரி

## மானுடவியல்
(தொடர்)

### கலிய நாயனார்



69

**குலம்:** செக்கார்
**குருபூசை நாள் :**
ஆடி மாதம் கேட்டை நட்சத்திரம்
**அவதாரத் தலம்:** திருவொற்றியூர்
**முக்தித் தலம் :** திருவொற்றியூர்

**வரலாற்று சுருக்கம்:**

சிவந்தாள் சேர்தலே வாழ்விலட்சிய முடிநிலை யாதலாலும் அதற்கு நேர்வாயில் சிவதொண்டே யாதலாலும் அதன்பொருட்டு ஒருவரின் இடம்பொருள் ஏவலுக்கமைந்த எல்லாம் ஈடாக்கப்படலாம்; சுயகௌரவமும் அதற்குப் பலியாக்கப்படலாம் என்பதற்குக் கலிய நாயனார் வரலாறு கண்கண்ட சாட்சியாகும்.

தொண்டைமண்டலத்திலே, திருவொற்றியூரிலேயுள்ள சக்கரப்பாடியிலே, செக்கார் குலத்திலே, கலியநாயனாரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் பெருஞ்செல்வராகி செல்வநிலையாமையையும் யாக்கை



நிலைமையையும் உணர்ந்து, சிவபுண்ணியஞ் செய்தல்வேண்டும் எனத் தெளிந்து, அந்தத் திருப்பதியில் உள்ள சிவாலயத்தின் உள்ளும் புறம்பும் அல்லும் பகலும் எண்ணிறைந்த திருவிளக்கு ஏற்றுவாராயினார்.

பரமசிவன் நெடுங்காலம் இத்திருத்தொண்டைச் செய்துவரும் அவ்வடியாருடைய பத்திவலிமையைப் பிறர்க்குப் புலப்படுத்தும் பொருட்டு, அவரிடத்து உள்ள செல்வமெல்லாங் குன்றும்படி அருள் செய்தார்.

**(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

## அறநெறி அறிவுநொடி



### கே. ஈஸ்வரலிங்கம்
### தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**18980) விஷ்ணுவின் அவதாரங்களைப் பற்றி கூறும் புராணம் எது?**
பாகவதம்.

**18981) விநாயருக்கு உரிய கணேச பஞ்சரத்னத்தைப் பாடியவர் யார்?**
ஆதிசங்கரர்

**18982) சிவபெருமானுக்கு உகந்த நட்சத்திரம் எது?**
திருவாதிரை.

**18983) கலைமகளை ""ஆற்றங்கரை சொற்கிழத்தி'' என்று போற்றியவர் யார்?**
ஒட்டக்கூத்தர்.

**18984) நுண்கலைகளுக்கு அதிதேவதை யார்?**
சியாமளா தேவி.

**18985) கன்னி மூல கணபதி எங்குள்ளார்?**
சபரி மலை.

**18986) திருமோகூர் தலத்துப் பெருமாளின் பெயர் என்ன?**
**காலமேகப் பெருமாள்.**

**18987) உறங்காவில்லி தாசர் என்பவர் யார்?**
ராமானுஜரின் சீடர்.

**18988) வாஸ்து சாஸ்திரத்தை ஆன்மிகம் ஏற்றுக் கொள்கிறதா?**
சாஸ்திரம் என்று சொல்லிவிட்டாலே அது ஆன்மிகம் தானே. இறைவழிபாட்டிற்காக கூறப்பட்டுள்ள சாஸ்திரங்களில் ஒரு பிரிவு – சிற்பசாஸ்திரம். இதன் உட்பிரிவுகளில் ஒன்று வாஸ்து சாஸ்திரம்.

**18989) பூஜை அறையில் கடவுள் திருஉருவப்படங்களை எத்திசை நோக்கி வைப்பது சிறந்தது?**
கிழக்கு நோக்கி வைப்பது சிறந்தது. மேற்கு நோக்கியும் வைக்கலாம்.

**18990) இறந்த பெற்றோருக்கு பெண் குழந்தைகள் மட்டும் இருந்தால் அவர்கள் கொடுக்கும் சிரார்த்தம் ஏற்புடையதுதானா?**
பெண்கள் நேரடியாக இதை செய்யக்கூடாது. யாராவது ஒரு ஆணிடம் தர்ப்பையைக் கொடுத்து அவர் மூலமாக செய்ய வைக்கலாம். திருமணமான பெண்கள் கணவன் வீட்டைச் சார்ந்து விடுவதால், பெற்றோருக்காக தர்ப்பை கொடுக்கக் கூட அதிகாரம் கிடையாது. பெற்றோரின் பங்காளிகளைச் செய்யச் சொல்லி பொருளுதவி மட்டும் செய்யலாம்.

**18991) பஞ்சாட்சர மந்திரம் (நமசிவாய, சிவாயநம) சொல்லித் தான் திருநீறு பூச வேண்டும் என்பது உண்மையா?**
பஞ்சாட்சரம் (நமசிவாய) சொல்லி திருநீறும், அஷ்டாக்ஷரம் (ஓம் நமோ நாராயணாய) சொல்லி திருமண்ணும் இட்டுக் கொள்வதைப் போன்ற புண்ணியச் செயல் இவ்வுலகில் வேறு கிடையாது.

**18992) கிரகப்பிரவேசம் செய்யும்போது முதலில் பசுவையும், கன்றையும் அழைத்து வந்து கோபூஜை செய்வதன் நோக்கம் என்ன?**
பசுவின் உடம்பில் முப்பத்து முக்கோடி தேவர்கள் இருக்கிறார்கள். நான்கு வேதங்களும் நான்கு கால்களாக உள்ளன. கன்றுக்காக சுரக்கும் பாலை நமக்கும் கொடுக்கும் பசுவை "கோமாதா" என அழைக்கிறோம். இதன் காலடி பட்ட இடத்தில் மங்கலம் உண்டாகும். கன்றுடன் கூடிய பசுவை பூஜிப்பதால், லட்சுமியின் அருள்கடாட்சம் நிலைத்திருக்கும். கன்று இல்லாமல் பசுவை தனித்து அழைத்து செல்லவோ, பூஜை செய்யவோ கூடாது.





"சுப கிருது வருஷம்" சித்திரை வருடப்பிறப்பு மலர்ந்ததையிட்டு உடப்பு ஸ்ரீருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீபார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தில் விஷேட பூஜைகளும், பக்தர்களின் அர்ச்சனைத் தட்டு வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.அத்துடன் ஆலய பிரதம குரு பஞ்சாச்சரக் குருக்களினால் சித்திரை வருடப்பிறப்பு பஞ்சாங்கமும் வாசிக்கப்பட்டது. படங்கள்:உடப்பு குறூப் நிருபர்

## நாதப் பிரம்ம யோகம் - 15



ஸாம வேதம் ரிஷிகளின் அர்ப்பணிப்புடன் கூடிய இசை பற்றிய நுண்ணறிவிற்குரிய ஆதாரமாகும். ஸாம வேதம் என்பது இசையானது இயற்கையாக எப்படி உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றையும் வளர்க்கிறது என்பது பற்றிய ரிஷிகளின் அரிய ஞானமாகும். இதிலிருந்தே ஸ்வரங்கள், தாளங்கள், லயம், ராகம், சந்தங்கள், கதி, மந்திரங்கள், நிருத்யங்கள், முத்திரை, பாவங்கள் என்பவை உருவாகின. இவை அனைத்தும் ஸாம வேதத்திலிருந்து உருவாகியவை.

இந்திய யோகிகள் ஸ்வர சாதனையின் ஆற்றலை வேறு எவற்றுடனும் ஒப்பிட முடியாத ஒன்றாக நிருபித்திருக்கிறார்கள். இந்திய வரலாற்றில் இந்த சாதனையின் அதீத ஆற்றல்கள் பற்றி அனேக உதாரணங்கள் அறியப்பட்டுள்ளன. முகலாயர் ஆட்சிக்காலத்தில் தான் சென். பைஜு பவரா போன்ற பெரிய இசைக்கலஞர்களின் வரலாறு அறியப்பட்டுள்ளது.

ஒருமுறை முகலாயச் சக்கரவர்த்தி அக்பரினால் மிகப்பெரிய இசை நிகழ்ச்சி ஒன்று நடாத்தப்பட்டது அதில் தான்சென், பைஜு பவரா ஆகிய இருவருக்குமிடையிலான போட்டியே மிகப்பெரிய நட்சத்திர நிகழ்வாக அமைந்தது. இந்த நிகழ்ச்சி ஆக்ரா விற்கு அருகில் இருக்கும் ஒரு வனத்தில் நடைபெற்றது.

தான்சென் தோடி இராகத்தில் பாடும் போது வனத்திலிருந்து வெளிப்பட்ட மான் கூட்டம் அவரை நோக்கி ஓடி வந்தது. இந்த இசையில் உச்சத்தில் தனது கழுத்திலிருந்து மாலை ஒன்றை மானின் கழுத்தில் போட அது மெய்மறந்த நிலையில் நின்றது. இதன் மூலம் தான்சென் தோடி இராகத்தின் மூலம் மிருகங்களை வசப்படுத்தலாம் என்று நிருபித்தார்.

பைஜு பவரா தனது நேரம் வரும் போது ம்ருக ரஞ்சனி தோடி என்ற இராகத்தைப் பாடினார் .அப்போது தான்சென் இனால் கழுத்தில் மாலைபோடப்பட்ட மான் மாத்திரம் மேடையை நோக்கி ஓடி வந்து இசையை இரசித்தது.

இந்த இசைப் பரீட்சையின் முலம் பைஜு ம்ருக ரஞ்சனி தோடி இராகத்தின் மூலம் நாம் எண்ணும் மிருகத்தை எந்த திசையிலிருந்தாலும் தம்வசப்படுத்த முடியும் என்று நிரூபித்தார்.

பைஜு பாவராவின் குரு ஹரிதாசரிடமிருந்து இசையின் மூலம் அற்புதங்களை நிகழ்த்தியிருந்தார்.

சந்திரி தேசத்து அரசன் ராஜா சிங்கின் தூக்கமின்மை நோயினை பூரியா இராகத்தின் மூலம் குணப்படுத்தியிருந்தார். பண்டிட் பௌலஸ்கர், தாகர் பந்துஸ் ஆகிய இருவரும் குரலிசை மூலம் பல அற்புத சித்திகளைப் பெற்றிருந்தனர். தீபக இராகத்தின் மூலம் விளக்கினை நீண்ட நேரம் எரிய வைக்க முடியும். காச நோயினை ஸ்ரீ எனும் இராகத்தின் மூலம் குணப்படுத்த முடியும். பெரிய கூட்டத்தினை பைரவி இராகத்தின் மூலம் அமைதிப்படுத்த முடியும்.

**(தொடரும்)**

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்










புறக்கோட்டை ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மஹோற்சவ தேர்த்திருவிழா 14ஆம் திகதி சித்திரை வருட தினத்தன்று சிறப்பாக நடைபெற்றது. ஆலயத்தில் இருந்து முத்தேர் கடற்கரை வீதி வீதியாக புறப்பட்டுச் செல்வதையும், பக்தர்கள் தேங்காய் உடைத்து தமது நேர்த்திக்கடனை நிறைவேற்று வதையும் படங்களில் காணலாம். (படப்பிடிப்பு : வடகொழும்பு தினகரன், வத்தளை விசேட நிருபர்கள்)

# கிழக்கின் குரல்



# வீட்டுப் பொருளாதாரம், கல்வியை பாதுகாத்து இருப்பை பலப்படுத்துவோம்

பெரியபோரதீவு தினகரன் நிருபர்



கடந்தகால யுத்தத்தால் ஏற்பட்ட இழப்புக்கள் பல படிப்பினைகளை தந்துள்ளதாகவும்,இந்த இழப்புக்கள் பல அபிவிருத்திகளைச் செய்ய வேண்டிய தேவைகளை ஏற்படுத்தியுள்ளதென்றும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளருமான பூபாலபிள்ளை பிரசாந்தன் தெரிவித்தார்.

கல்வியாளர்களை கௌரவிக்கும் நிழ்வு மட்டக்களப்பு மாவட்டம் முனைத்தீவு சக்தி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. முனைத்தீவு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தெ.புவிதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் பல படிப்பினைகளை தந்துள்ளது. இதனால், சமூகத்தின் முதுகெலும்பாக இருந்த பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் உயிரிழந்தனர். பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் அதிகரித்தன. உடல் அவையங்கள், பொருளாதாரங்கள் மற்றும் வாழ்வாதாரங்களையும் நமக்கு இழக்க நேரிட்டது. இச்சூழ்நிலையில் பல்வேறுபட்ட அபிவிருத்திகள் மேற்கொள்ள வேண்டிய நிலைமைக்கு எமது கிராமங்கள் தள்ளப்பட்டுள்ளன. இதனை ஏற்றுக் கொள்கின்றோம்.

தமிழர்களின் இருப்பு, பொருளாதாரத்தை வலுவாக்க வேண்டுமானால், முதலில் நமது வீட்டுப் பொருளாதாரத்தையும், கல்வியையும் வலுவாக்க வேண்டும். யுத்தத்தால் தமிழர்களின் கல்வி மிகவும் நலிவடைந்துள்ளது.

எமது தலைவர் சி.சந்திரகாந்தன் நான்காம் ஆண்டுதான் படித்திருப்பதாகவும், அவருக்கு ஆங்கிலம், சிங்களம் பேசத் தெரியாது என்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார். அவர், அவ்வாறு படிக்காமல் போனதற்குரிய காரணம். அவரது வீட்டுச் சூழலோ அல்லது வேறு காரணங்களோ இல்லை. 1974 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில் இளைஞர்களின் கைகளில் ஆயுதம் திணிக்கப்பட்டதன் அடிப்படையிலே, மண்ணை மீட்பதற்கு கல்வியைத் துறந்து விட்டு, அவர்,போர்களம் சென்றார். மக்களுக்காக போராடச் சென்ற ஒருவருக்கு, மட்டக்களைப்பு மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு பிரதிநிதி கொடுக்கின்ற பட்டமா இது. சமூகத்திற்காக கஷ்டப்பட்டவர்களை சமூகம் போற்ற வேண்டுமே தவிர, தூற்றக்கூடாது.

மிக இளவயத்தில் எமது தலைவர் கிழக்கு மகாணத்தின் முதலமைச்சராக வந்த பின்னர்தான் மட்டக்களப்பு மாவட்டம் பல அபிவிருத்திகளைக் கண்டது. எதிர்காலத்தில், அனைவரும் ஒன்றிணைத்து இக்கிராமத்தையும், இப்பிரதேசத்தையும் வலுவானதாக மாற்றியமைக்க வேண்டும்.

மட்டக்களப்பு போதனா வைத்தியாலைக்கு 126 வைத்தியர்கள் தேவையாக உள்ளனர். மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் 75 அதிபருக்கு வெற்றிடங்கள் உள்ளன. ஆரம்பக் கல்வியைக் கற்பிப்பதற்கு 75 பாடசாலைகளில் ஆசிரியர் தட்டுப்பாடுகள் உள்ளன. இவ்வாறான தேவைகளை நிவர்த்தி செய்யக்கூடிய தலைமைக்கு மக்கள் விசுவாசமாக செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## புனித மரியாள் பேராலயத்தில் உயிர்ப்பு பெருவிழா திருப்பலி



கல்லடி குறூப் நிருபர்

கிறிஸ்துவின் உயிர்ப்பு பெருவிழா நள்ளிரவு திருப்பலி, மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்தில் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் இடம்பெற்றது.

மனிதர்களின் பாவத்தை நீக்கி புனிதராக்குவதற்காக இயேசுபிரான் சிலுவையில் பாடுபட்டு மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்ததை கொண்டாடும் வகையில்,

இந்த உயிர்ப்பு விழா இடம்பெறுகிறது. ஆலய முன்றலில் புதிய தீ மூட்டப்பட்டு தீ ஆசிர்வதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இருளில் மெழுகு திரியை ஏற்றி உயிர்ப்பின் பெருநாள் விஷேட ஆராதனைகள் இடம்பெற்றன.

இதன்போது இடம்பெற்ற விசேட பூசை வழிபாட்டின் போது திருமுழுக்கு வழங்கும் நிகழ்வும், புனிதநீர் ஆசீர்வதிக்கும் நிகழ்வும் இடம்பெற்றதுடன், உயிர்த ஆண்டவரிற்கு விசேட ஆராதனைகளும் இடம் பெற்றன. இத்திருப்பலி ஆராதனையில் ஆலய பங்குத்தந்தை ஜோர்ஜ் ஜீவராஜ் அடிகளாரும், அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள் உள்ளிட்ட பெருமளவான இறைமக்கள் பத்தியுடன் கலந்து கொண்டிருந்தனர்.

# இரசாயன உர மானியத்தை அவசரமாக நடைமுறைப்படுத்த மக்கள் கோரிக்கை

அட்டாளைச்சேனை மத்திய நிருபர்

இரசாயன உரமானியத் திட்டத்தை அவசரமாக நடைமுறைப் படுத்தி, விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டுமென அம்பாறை மாவட்ட விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு அண்மையில் ஆற்றிய உரையில்,சேதனப் பசளை வேலைத்திட்டத்தை கொண்டு செல்ல இது சரியான தருணமல்ல என்பதால், மீண்டும் உர மானியத்தை வழங்க தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்தார். இது, புதிய நம்பிக்கை மற்றும் உத்வேகத்தை ஏற்படுத்தி உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பாரிய சவால்கள் மற்றும் பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டு நெற் செய்கையில் ஈடுபடுகையில் பிரதமரின் இந்த அறிவிப்பு விவசாயிகளுக்கு நம்பிக்கை ஊட்டியுள்ளது.

இரசாயன உரம், களை மற்றும் கிருமி நாசினி இல்லாத நிலையில், நெற்செய்கைக்காக பெருந்தொகை பணத்தை செலவு செய்ய வேண்டிய நிலையில் விவசாயிகள் இருந்தனர்.

யூரியா உரத்திற்கு அனுமதி வழங்கப்பட்ட போதிலும், கறுப்புச் சந்தையில் அதன்விலை,ரூபா 45,000 வரை விற்கப்பட்டது.

இதேபோன்று, களைநாசினி மற்றும் கிருமி நாசினிகளின் விலைகளும் வெகுவாக அதிகரித்துள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் பரம்பரை, பரம்பரையாக விவசாயத்தை தங்களது ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டுவரும் விவசாயிகள், தற்போதைய நிலையில்,நெற் செய்கைக்கு பாரியளவு முதலீடு தேவையாக உள்ளதால் தொழிலை கைவிடும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, இரசாயன உரமானியத் திட்டத்தை அமுல்படுத்துமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## திருகோணமலையில் அன்னதான நிகழ்வு

ஹஸ்பர்

சித்திரா பௌர்ணமி தினத்தை முன்னிட்டு (16) மாபெரும் அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வு அறப்பணி மையத்தின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் ஆசிரியர் சக்தி திருச்செந்தூரன் தலைமையில் இடம் பெற்றது.

புலம்பெயர் வாழ் ஆதிபராசக்தி அம்மாவின் பக்தர்களின் நிதி அனுசரணையில், திருகோணமலை அன்புவழிபுரம் அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது.

பசிப்பிணி நீக்கும் அறப்பணி மையத்தின் நிறுவுநனர் சக்தி சுவிஸ் சுரேஷின் எண்ணக்கருவிற்கமைய இந்த அன்னதான நிகழ்வு இடம் பெற்றது.

## சிறுமியை வல்லுறவுக்குட்படுத்திய சந்தேக நபர் கைது

ரொட்டவெவ குறூப் நிருபர்

சிறுமியொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின்பேரில், இளைஞரொருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை கோமரங்கடவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கந்தமலாவ பகுதியிலுள்ள 15 வயதுடைய சிறுமியே பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.பாதிக்கப்பட்ட சிறுமி வைத்திய பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில், கோமரங்கடவல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள்

முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை வழங்கும் நிகழ்வு,அண்மையில் இடம்பெற்றது.

வாழ்வதற்கான இல்லறம் செயற்றிட்டத்தின் கீழ் வன்னி ஹோப் நிறுவனத்தின் அனுசரணையில், இந்நிகழ்வு நடந்தது.

மன்றத்தின் தலைவர் எம். ரீ. எம். பாரிஸ் மற்றும் வன்னி ஹோப் நிறுவனத்தின் பணிப்பாளர்களான கே.கந்தகுமார் மற்றும் வைத்தியர் மாலதி வரன் ஆகியோர்களின் பங்குபற்றுதலுடன் இது இடம்பெற்றது.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மிக நீண்டகாலம் மண் குடிசைகளில் அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வந்த, ஐந்து குடும்பங்களுக்கு இந்த நிரந்தர வீடுகள் நிர்மாணித்து வழங்கப்பட்டன.

திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச செயலகத்திற்குட்பட்ட விளாங்குளம் மீள்குடியேற்றக் கிராமத்திலுள்ள மூன்று குடும்பங்களுக்கும், ஆத்திமோட்டை கிராமத்திலுள்ள ஒரு குடும்பத்திற்கும், கிண்ணியா பாரதிபுரம் கிராமத்தில், ஒரு குடும்பத்திற்குமே மேற்படி நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டன.

வன்னி ஹோப் அவுஸ்ரேலியா நிறுவனத்தின் ஒருங்கிணைப்பில், திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால் வாழ்வதற்கான இல்லம் எனும் செயற்றிட்டத்தின் கீழ், இவ்வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன. இதுவரை,சுமார் 35 வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன.

## சுபிட்சத்தின் நோக்கின் கீழ் வாழ்வாதார உதவிகள்

சாய்ந்தமருது விஷேட நிருபர்

சுபிட்சத்தின் நோக்கு ஜனாதிபதியின் எண்ணக்கருவின் கீழ், தேசிய "கமசமக பிலிசந்தர" வேலைத் திட்டத்தில் முதற்தொகுதியாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

"கமசமக பிலிசந்தர" வேலைத் திட்டத்தின் கீழ், வரவு செலவுத் திட்டம் (2022) நிதி ஒதுக்கீடுகள் மூலம், அபிவிருத்தியின் பயன்கள் விரைவாக மக்களுக்கு சென்றடையும் வகையில், கிராம மட்ட பிராந்திய அபிவிருத்திகளுக்கு முன்னுரிமை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற "கிராமத்துடன் உரையாடல்" கிராமிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ், அபிவிருத்தி கருத்திட்ட முன்மொழிவுகளை செயற்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் என்பவை, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களினூடாக செயற்படுத்தப்படுகிறது.

மேற்படி, கமசமக பிலிசந்தர வேலைத்திட்டத்தின் வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வில், கணக்காளர் யூ.எல்.ஜவாஹிர், உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர்,பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம் ஹரீஸின் பிரத்தியோக செயலாளர் நௌபர் ஏ பாவா, அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் கே.எல் யாஸின் பாவா,சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எம்.எம் நியாஸ்,எம்.எஸ் ரியாஸ், மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## கல்முனை வலய தமிழ் பாடசாலைகளில் வெளிவாரி மதிப்பீடுகள் ஆரம்பம்

நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

கல்முனை வலய தமிழ் பாடசாலைகளில் இன்று (18) முதல் வெளிவாரி மதிப்பீடுகள் இடம் பெறவுள்ளன.

புனித ரமழானை முன்னிட்டு, கல்முனை வலய முஸ்லிம் பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் தமிழ் பாடசாலைகளில் இந்த மதிப்பீடுகள் இடம்பெற உள்ளன. முகாமைத்துவத்திற்கான பிரதிக் கல்விப்பணிப்பாளர் முகம்மட் பௌஸ் தலைமையில் செல்லும் இக்குழுவில், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், செயற்றிட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் வளவாளர்களும் இதில், இணைந்து கொள்கின்றனர்.

பாடசாலைகளிலுள்ள பிரச்சினைகள் இனங்காணப்பட்டு அதற்கான அபிவிருத்திப் பிரேரணைகளை முன்வைப்பதே, இந்த மதிப்பீட்டின் நோக்கமாகும்.

மதிப்பீட்டின் பிற்பாடு பாடசாலைகளுக்கான அடைவுப்புள்ளிகளும் (உயர்புள்ளிகளும்) வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மாளிகைக்காடு பிரதேச மக்களுக்கு பேரீச்சம் பழ பொதிகள் விநியோகம்



மாளிகைக்காடு நிருபர்

அம்பாறை மாவட்ட மக்களுக்கு புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு, பேரீச்சம்பழ பொதிகள் வழங்கும் செயற்றிட்டம்,ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக, மாளிகைக்காடு பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட குடும்பங்களுக்கு பேரீச்சம்பழ பொதிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வு அல் மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்கா அமைப்பினரின் ஏற்பாட்டில்,நேற்று (17) நடைபெற்றது.

இந்நிகழ்வில், மாளிகைக்காடு கிழக்கு கிராம சேவகர் ஏ.எம். நஜீம், அல் மீஸான் பௌண்டஷன் ஸ்ரீ லங்கா அமைப்பின் பிரதித் தலைவர் பீ.எம். நாஸிக், பிரதம உதவி செயலாளர் மௌலவி என். சப்னி அஹமட், கலா சார விவகார தேசிய இணைப்பாளர் கலைஞர் என்.எம். அலிக்கான் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# மோட்டார்சைக்கிள் உதிரிப்பாக கடையை உடைத்து திருட்டு, கைதானோருக்கு விளக்கமறியல்

ஒலுவில் விசேட நிருபர்



மருதமுனை பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் கடையை உடைத்து, அங்கிருந்த உதிரிப்பாகங்களை திருடிய மூவரை இம்மாதம் (27) விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.கல்முனை நீதிவான் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இந்த விற்பனை நிலையம் கடந்த புதன்கிழமை (13) அதிகாலை உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பில், பெரியநீலாவணை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

மோட்டார் சைக்கிள் உதிரிபாகங்கள் விற்பனை செய்யும் கடையில் 13 வருட காலமாக வேலை செய்து வந்தவர், தனது சக நண்பர்களுடன் இணைந்தே, இந்தக்கடையை உடைத்துள்ளார். களவாடப்பட்ட உதிரிப்பாகங்களை உர மூடைகளில் கட்டிக்கொண்டு செல்ல தயாரான நிலையில் ஒருவர் பொது மக்களால் பிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. பொது மக்களால் பிடிக்கப்பட்ட சந்தேக நபரின் வாக்கு மூலத்தின் அடிப்படையில், பெரிய நீலாவணை மயானத்துக்கு அருகில் மறைந்து இருந்த வேளை ஏனையோர் கைது செய்யப்பட்டனர்.

இதில், மேலும் ஒரு சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளதாகவும், இவரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

திருட்டுச் சம்பவத்துக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள்கள் இரண்டும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதான மூன்று சந்தேக நபர்களையும் புதன்கிழமை (13) கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது, இம்மாதம் 27ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.




# சர்வதேச நாணய நிதியத்தின் சில நிபந்தனைகள் ஏற்க முடியாதளவு கடுமையானதாக உள்ளன

அக்குறணை குறூப் நிருபர்



விற்பனை செய்வது வேறு, கூட்டு முதலீடு வேறு எனத் தெரிவித்த, முன்னாள் அமைச்சர் எஸ்.பீ. திசாநாயக்கா, அபிவிருத்தி அடைந்த பல சர்வதேச நாடுகள் கூட்டு முதலீட்டால் முன்னேறி உள்ளதாகவும் தெரிவித்தார்.

பேராதனை கெட்டம்பே, ராஜோபவனராம விகாரைக்கு விஜயம் செய்து (16) வழிபாட்டில் ஈடுபட்டபின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர், இதனைத்தெரிவித்தார்.இதுபற்றி மேலும்

அவர் தெரிவித்தாவது.

வருடந்தோறும் புத்தாண்டு தினத்தில், கண்டி மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களுக்கும் இன்னும் கெட்டம்பே ரஜமகா விகாரைக்கும் வருகை தருவது வழக்கம். அதனடிப்படையில் இம்முறையும் இங்கு வந்தேன். நாட்டில் எரிபொருள் தட்டப்பாடு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்காக நீண்ட வரிசையில் மக்கள் காத்து நிற்கின்றனர்.இவற்றை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒரு நாளைக்கு வழக்கமாகத் தேவைப்படும் எரிபொருளின் அளவை விட தற்போது எரிபொருள் இரண்டு மடங்கு தேவைப்படுகிறது.

முன்னர் ஒருநாளைன்கு 5 மெற்றிக் தொன் எரிபொருள் தேவைப்பட்டது. ஆனால் தற்போது 10 மெற்றிக் தொன் தினந்தோறும் விநியோகித்தாலும் பற்றாக்குறையாக உள்ளது. காரணம் சிலர், கொள்கலன்களிலும் சேகரித்து வைப்பதே. தினமும் கொன்கலன்களில் மேலதிகமாக எடுத்துச் செல்வதைக்காண முடிகிறது.

கடன் பெறுவது தொடர்பாக சர்வதேச நிதி நிறுவனம் ஒரு சில யோசனைகளை முன் வைத்துள்ளது. அவற்றை ஏற்பதில் பிரச்சினைகள் உள்ளன.

அரசின் வருமானத்தை அதிகரித்தல், அதே நேரம் அரசின் செலவினத்தை குறைக்கும் படியும் ஐ.எம்.எப் கூறுகிறது.

வரவு செலவுத்திட்ட இடைவெளியை பூச்சியத்தில் வைக்கும் படியும் கூறுகிறது. கறுப்புச் சந்தையின் நிதிப் பயன்பாடு, இயல்பான நிதிப்பயன் பாட்டுக்கிடையே காணப்படும் இடைவெளியை குறைக்கும் படியும் கூறியுள்ளது. அதாவது, உண்டியல் முறை போன்ற கொடுக்கல் வாங்கள்களை குறைத்தல், நஷ்டமடையும் அரச நிறுவனங்களை மீளமைக்கும் படியும் கூறியுள்ளது.

எரிபொருள் இறக்குமதிக்கும் புதிய நிறுவனங்களை பயன்படுத்துமாறும் சர்வதேச நாணய நிதியம் கூறுகிறது. இதில் மேற்கொள்ள கூடியதும் உள்ளன. மேற்கொள்ள முடியாதவையும் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## சித்ரா பௌர்ணமி திருவிழா

நுவரெலியா தினகரன் நிருபர்

நுவரெலியா ஆவேலியா ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய வருடாந்த சித்ரா பௌர்ணமி திருவிழா,(14) திகதி வியாழக்கிழமை வருடப்பிறப்புடனும் சிறப்பு பூஜைகளுடனும் ஆரம்பமானது.

இரண்டாம் நாள் நிகழ்வாக கடந்த (15) வெள்ளிக்கிழமை காலை ஏழு மணிக்கு பால்குட பவனி நுவரெலியா லேடிமெக்லம்ஸ் வீதி நீர்வீழ்ச்சியிலிருந்து ஆரம்பமாகி, ஊர்வலம் உடபுசல்லாவ வீதி, வைத்தியசாலை வீதி, நவம்கொட கிராமம் வழியாக ஆலயம் வந்தடைந்தது. அதனைத் தொடர்ந்து நவோத்திர சகஸ்கர சத (1008) சங்காபிஷேகம் நடைபெற்று, பகல் மகேஸ்வர பூஜையை தொடர்ந்து பத்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. சுவாமி



உள்வீதி உற்சவம் அன்று மாலை நடைபெற்றது. சனிக்கிழமை (16) அதிகாலை 4 மணிக்கு திருவிளக்கு பூஜையுடன் சுவாமி உள் வீதி ஊர்வலம் நடைபெற்று, ஆலய முற்றத்தில் விநாயக பெருமான், அன்னை ஸ்ரீ முத்துமாரியம்மன் மற்றும் வள்ளி தெய்வானை சமேத முருக பெருமான் ஆகிய மும் மூர்த்திக்கும் பக்தர்களின் அர்ச்சனை, பூஜைகள் நடைபெற்றன. இதைத் தொடர்ந்து மாலை 5 மணிக்கு தீ மிதிப்புடன், நாட்டு மக்களுக்கும் நாட்டிற்கும் ஆசி வேண்டி விசேட பூஜைவழிபாடுகளும் இடம்பெற்றன. நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் நுவரெலியா ஆவேலியா ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயத்தின் நிர்வாக சபை தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையில் திருவிழா நடைபெற்றது.

## பலாங்கொடையில் எலிக் காய்ச்சல் பரவும் ஆபத்துக்கள் அதிகரிப்பு

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

பலாங்கொடை நகரம், பலாங்கொடைபிரதேசசபை,இம்புல்பே பிரதேச சபை பிரதேசங்களில் எலிக்காய்ச்சல் பரவும் வீதம் அதிகரித்து வருவதாக பிரதேச சுகாதார வைத்திய காரியாலய அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அத்துடன் இந்நோயே் பரவும் ஆபத்துக்கள் குறித்து துண்டுப் பிரசுரங்கள் மற்றும் தகவல் குறிப்புக்கள் மூலமும் சுகாதார தரப்பு அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றன.

வயல்வெளிகள், தோட்டங்கள் இரத்தினக்கல் அகழ்வு கூலித் தொழிலாளிகள், சுத்திகரிப்பு ஊழியர்கள், கழி வறை தொழிலாளிகள் ஆகியோர், சுகாதார தரப்புக்களின் அறிவுரைகளை பின்பற்றுமாறு சுகாதார வைத்திய காரியாலய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பிரதேச அரச வைத்தியசாலைகள், பொது சுகாதார காரியாலயங்கள், வைத்திய அதிகாரிகள்

காரியாலயங்கள், குடும்ப சுகாதார உ த்தியோகத்தர் காரியாலயங்கள் ஆகியவற்றில் எலிக் காய்ச்சலுக்கான மருந்துகளைப் பெற்று கொள்ளலாம் எனவும், இதுதவிர தனியார் மருந்தகங்களில் மிக குறைந்த விலையில் மருந்துகளை பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரஜமகா விகாரையில் எண்ணெய் வைக்கும் நிகழ்வு

காவத்தை தினகரன் விஷேட நிருபர்

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு (17) எண்ணெய் வைக்கும் நிகழ்வு, பெல்மதுளை ரஜ மகா விகாரையில் இடம்பெற்றது. சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவின் ஆலோசனைக்கமைய இந் நிகழ்வு இடம்பெற்றது.

விகாரையில், இடம்பெற்ற எண்ணெய் வைக்கும் இந்நிகழ்வுக்கு சிவனொளிபாதமலை ஸ்தல தலைவரும் பெல்மதுளை ரஜ மகா விகாரையின் விகாராதிபதியுமான வணக்கத்துக்குரிய பெங்கமுவே தம்மதின்ன நாஹிமி தலைமை தாங்கினார்.

இதன்போது, சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் சுனில் ஜயலத், இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலணி லொக்குபோத்தாகம, மாகாண ஆளுநரின் இணைப்பு செயலாளர் மஞ்சுளா இதிகாவெல உட்பட அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.



# காலிடமுகத்திடலுக்கு ஆதரவாக மல்லியப்பு சந்தியிலும் ஆர்ப்பாட்டம்

கினிகத்தேனை தினகரன் நிருபர்

காலி முகத்திடலில் இடம்பெற்று வரும் ஆர்பாட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் ஹற்றன் மல்லியப்பு சந்தியில் நேற்று (17) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப் பட்டது.

மலையகத்தை சேர்ந்த சமூக செயற்பாட்டாளர்கள், இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். எழுவோம் மலையாய், எழுவோம் இணைவோம் ஒன்றாய் இணைவோம், வேண்டாம் வேண்டாம் போன்ற கோசங்களை எழுப்பியவாறு இவர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். அத்துடன் மக்களை ஏமாற்றி சொகுசு வாழ்க்கை வாழ இனியும் விடமாட்டோம்என்றவாறானபதாதைகளையும் சிலர் ஏந்தியிருந்ததை அவதானிக்க முடிந்தது.

மேலும், இது தொடர்பாக ஏற்பாட்டாளர்கள் கருத்து தெரிவித்த போது, நாட்டிலுள்ள சகல சமூகத்தவரும் தொடர்ச்சியாக எட்டாவது நாளாக இன, மத பேதமின்றி போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். ஹற்றன் பிரதேசத்தில் மூவின மக்களும் இணைந்து காலிமுகத்திடலில் போராடும் இளைஞர்களுக்காக ஒன்றுசேர்ந்துள்ளோம்.

அந்தவகையில், இப்பிரதேசத்திலுள்ள அனைத்து மக்களும் இதற்கு ஒத்துழைப்பு தந்துள்ளனர்.

எனவே மலையகத்திலுள்ள இளைஞர், யுவதிகள் கட்சி பேதமின்றி ஆதரவு தர வேண்டும் எனத் தெரிவித்தனர்.

## எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் முறைகேடான விநியோகம்

மஸ்கெலியா தினகரன் விஷேட நிருபர்

மஸ்கெலியா பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் கீழ் இயங்கும் மஸ்கெலியா எரிபொருள் நிரப்பும் நிலையத்தின், கூட்டுறவு சங்கத்தின் நிர்வாக இயக்குநர் சிலர் தான்தோன்றித்தனமாக நடந்து கொள்வதாக வாகன சாரதிகள் தெரிவித்துள்ளனர்.

அதிகாலை வேளையில்,இவர்கள் தங்களுக்கு தேவையோனோருக்கென எரிபொருளை நிரப்பி மறைத்து வைப்பதாகவே,இவர்கள் மீது புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்க தலைவரிடம் கேட்டபோது அவர் அதற்கு மறுப்பு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், அதிகாலை வேளையில் இவற்றை கவனிக்க முடியாத நிலையுள்ளது. இது குறித்து எரிபொருள் நிரப்பும் நிலைய முகாமையாளரிடம் கேட்டு விபரம் தருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த கூட்டுறவு சங்கத்தின் நிர்வாக பகுதியில் உள்ள ஒரு சிலர், இவ்வாறு செயல்படுவதால் முழு கூட்டுறவு சங்கம் அவப் பெயரை பெறும் நிலை தோன்றியுள்தைாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

## இரத்தினக்கல் நூதனசாலை புதிய இடத்துக்கு மாற்றப்பட்டதால் நிதி வீண்விரயம்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

இரத்தினபுரி நகரில், மினி நூதனசாலையை அமைப்பதற்கு செலவிட்ட 36 இலட்சம் ரூபா நிதி வீண்விரயம் செய்யப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வுத் திணைக்கள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி நகரில் 266 சதுர அடி நிலப்பரப்பில் இந்த நூதனசாலையை அமைக்க, இரத்தினக்கல் அதிகார சபை நடவடிக்கை எடுத்திருந்தது.

இதற்கான நிதிகள் 2016 முதல் 2019 காலப்ப குதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

எனினும், இந்த நூதனசாலை அவ்விடத்தில் அமைக்கப்படுவது கைவிடப்பட்டு, 2020 ஆம் ஆண்டில் வேறு ஒரு இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இதனால், முந்திய இடத்தில் இதனை அமைக்க செலவிட்ட நிதி வீண்விரயமாக்கப்பட்டுள்ளதாக இரத்தினக்கல் தங்க ஆபரண அதிகார சபையின் வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முந்திய மினி நூதனசாலை மண்டபத்தின் கொள்வனவுக்காக 21 இலட்சம் ரூபாவும் இதன் புனரமைப்பு பணிகளுக்காக15 இலட்சம் ரூபாவும் 2016 முதல் 2019 ஆண்டு கால பகுதியில் செலவிடப்பட்டுள்ளதாக கணக்காய்வு மற்றும் அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பழுதடைந்த மீன் வகைகள் விற்பனை அவதானமாக இருக்க அறிவுறுத்தல்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

இரத்தினபுரி மாவட்டத்தின் சில வீதியோரங்கள் மற்றும் சுற்றுப்புறச் சந்தைகளில் விற்கப்படும் மீன்களை வாங்குவதில் பொது மக்கள் மற்றும் நுகர்வோர் அவதானம் செலுத்துமாறு சுகாதார மற்றும் சமூக நல ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். இவ்விடங்கள் சிலவற்றில் விற்கப்படும் மீன்கள் பழுதடைந்தும் சிதைவடைந்தும் காணப்படுதுடன், பழைய மீன்கள் இவ்விடங்களில் விற்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதையடுத்தே, இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மீன்களை பரீட்சித்து உறு திப்படுத்திய பின் கொள்வனவு செய்ய வேண்டுமெனவும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## நால்வர் பயணித்த மோட்டார் சைக்கிள் விபத்து, இருவர் பலி, ஏனையோர் படுகாயம்

தம்புள்ள தினகரன் நிருபர்



தம்புள்ள பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வேமெடில்ல உஸ்ஸாவ பிரதேசத்தில், நான்கு இளைஞர்கள் ஒன்றாகப் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள், வேகக் கட்டுப்பாட்டை இழந்து நாற்பது அடி பள்ளத்தில் வீழ்ந்தது.இதில், இருவர் ஸ்தலத்தில் உயிரிழந்ததுடன்,ஏனைய இருவரும் காயமடைந்து

தம்புள்ள வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டதாக தம்புள்ள பொலிஸார் தெரிவித்தனர்.

கலேவெல பொலிஸ் பிரிவிலுள்ள இலக்கம் 291, நமடகஹவத்த என்ற முகவரியைச் சேர்ந்த பிஸ்றுள் ஹாபி ஹம்தான் (15 வயது), மற்றும் அதே கிராமத்தைச் சேர்ந்த இலக்கம் 63/3 முகவரியில் வசிக்கும் நௌஸாத் அலி முஸ்பிக் (15 வயது) ஆகிய இருவரே இவ்வாறு உயிரிழந்தனர். இச்சம்பவம் சனிக்கிழமை (16) இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றது. இக்கோர விபத்தில் பலத்த காயமடைந்த முஹம்மத் (14 வயது) மற்றும் முகம்மத் பைஸால் இஜாஸ் (17 வயது) ஆகிய இருவரும் தம்புள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றதாகக் கூறப்படும் நௌஸாத் அலி முஸ்பிக், அவருக்குப் பின்னால் அமர்ந்து பயணித்த பிஸ்ருள் ஹாபி ஹம்தான் ஆகியோரே ஸ்தலத்தில் உயிரிழந்தனர். இவர்கள் நால்வரும் தலைக் கவசம் அணியாது சென்றுள்ளனர்.மரண விசாரணைகள் மற்றும் பிரேத பரிசோதனைகளின் பொருட்டு, சடலங்கள் தம்புள்ள வைத்திய சாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளை தம்புள்ள பொலிஸார் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.






சித்திரைப் புத்தாண்டை வரவேற்கும் முகமாகவும் தொழிலாளர்களை உற்சாக படுத்தும் நோக்கோடும் கலஹா நவயுக நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் தேயிலை கொழுந்து பறிக்கும் போட்டி இடம் பெற்றது. நவயுக நற்பணி மன்றத்தின் தலைவர் பீ. விமலன் தலைமையில் (16.04.2022) சனிக்கிழமை கலஹா தெல்தோட்ட குரூப் (பிரிவில்) இடம் பெற்ற மேற்படி போட்டியின் போது பெண்கள் பிரிவில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற திருமதி லோகேஸ்ரரி, சிறியாணி, இந்திராகாந்தி ஆகியோருக்கு அதிதிகள் பரிசுகள் வழங்குவதனையும் இங்கு காணலாம்.

# சர்வதேச செய்திகள்

## உக்ரைனின் மரியுபோலில் ரஷ்ய படை முன்னேற்றம்



உக்ரைனின் மரியுபோல் நகரின் பிரதான பகுதியை கைப்பற்றி இருப்பதாகவும் அங்கு சிறு பகுதியின் உருக்குத் தொழிற்சாலை ஒன்றில் உக்ரைன் படை சிக்கி இருப்பதாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

கடந்த பல வாரங்களாக முற்றுகையில் இருக்கும் தெற்கு துறைமுக நகரான மரியுபோலில் உக்கிர மோதல்கள் மற்றும் மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் ரஷ்யா தற்போது வெளியிட்டிருக்கும் அறிவிப்பை சுதந்திரமாக உறுதி செய்ய முடியவில்லை என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் இந்த நகர் ரஷ்யாவிடம் வீழ்ந்தால் கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி உக்ரைன் மீது படையெடுத்த ரஷ்யா அங்கு கைப்பற்றும் முதல் நகராக இது இருக்கும்.

"மரியுபோலின் ஒட்டுமொத்த நகர்புற பகுதியும் முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய உக்ரைனிய குழு தற்போது அசொவ்ஸ்டோல் உலோக ஆலை இருக்கும் பகுதியில் முடக்கப்பட்டுள்ளது" என்று ரஷ்ய பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் இகோர் கனசென்கோவ் தெரிவித்துள்ளார்.

"தமது ஆயுதங்களை கீழே வைத்து சரணடைவது மாத்திரமே அவர்கள் உயிரை காப்பதற்கு ஒரே வழியாக உள்ளது" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதில் 1,464 உக்ரைனிய படையினர் ஏற்கனவே சரணடைந்திருப்பதாக அவர் கூறினார்.

மரியுபோலின் வீழ்ச்சி இந்தப் போரில் ரஷ்யாவின் மிகப்பெரிய வெற்றியாக இருக்கும். இது டொன்பாஸ் பிராந்தியத்தின் பிரதான துறைமுகமாக உள்ளது. இந்தப் பிராந்தியத்திலேயே ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகளின் இரு மாகாணங்கள் அமைந்துள்ளன.

மரியுபோல் நகரைத் தற்காக்கும் கடைசிப் படையினரை நீக்கினால், இருநாட்டு அமைதிப் பேச்சுவார்த்தைகள் துண்டிக்கப்படும் என்று உக்ரைனிய ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி கூறினார்.

## 'ட்விட்டர்' மஸ்க்கிடம் செல்வதை தடுக்க நிர்வாக சபை போராட்டம்

ட்விட்டர் சமூகதளத்தை 43 பில்லியன் டொலர் கொடுத்து வாங்குவதற்கு உலகின் பெரும் செல்வந்தரான எலோன் மஸ்க் திட்டமிட்டு வரும் நிலையில், ட்விட்டர் நிர்வாக சபை அதற்கு எதிராக செயற்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மஸ்கின் திட்டத்தை சமாளிக்க "பொய்சன் பில்" என்று அழைக்கப்படும் "வரையறுக்கப்பட்ட கால பங்குதாரர் உரிமைகள் திட்டம்" என்ற முறை கையாளப்பட்டுள்ளது.

இதன்மூலம் நிறுவனத்தில் எவரேனும் 15 வீதத்திற்கு மேல் பங்குகள் பெறுவது தடுக்கப்படுகிறது. இது ஏனையோர் தள்ளுபடியில் மேலதிக பங்குகளை வாங்குவதற்கு அனுமதிக்கிறது.

மஸ்க் ட்விட்டரை கைப்பற்றுவதற்கு கோரப்படாத, பிணைப்பற்ற திட்டத்தை முன்வைத்திருப்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக ட்விட்டர் நிர்வாக சபை குறிப்பிட்டுள்ளது.



எலோன் மஸ்க், ட்விட்டரில் தற்போது 9.2 வீத பங்குகளை வாங்கியுள்ளார். மஸ்க் அதிகப்படியான டெஸ்லா பங்குகளை விற்பனை செய்து ட்விட்டர் நிறுவனத்தை வாங்கும் அளவுக்கு அவர் துணிந்துள்ளார்.

மஸ்க் பங்கு முதலீடு அறிவித்த உடனே ட்விட்டர் நிறுவனத்தின் முக்கியமான முதலீட்டாளராக இருந்த வேன்கார்ட் கூடுதலாக முதலீட்டை பெற்று நிர்வாகக் குழுவில் மஸ்க்கை காட்டிலும் கூடுதலான ஆதிக்கத்தைப் பெற்றது. இதேபோன்று ஐக்கிய அரபு இராச்சியத்தின் கிங்டம் நிறுவனமும் கூடுதலான ட்விட்டர் பங்குகளைப் பெற்றுள்ளது.

ட்விட்டர் தனது சமூகதளத்தில் பேச்சு சுதந்திரத்தை கட்டுப்படுத்துகிறது என்று தான் நம்புவதாக மஸ்க் குறிப்பிட்டுள்ளார். ட்விட்டரில் அமெரிக்க அரசியலமைப்பு உரிமை ஒன்றான பேச்சு சுதந்திரத்தை விரிவுபடுத்துவதே தனது பிரதான நோக்கம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஆப்கானில் மனித உரிமையில் சரிவு



ஆப்கானிஸ்தனை தலிபான்கள் கைப்பற்றியது அந்த நாட்டில் மனித உரிமைகளின் மோசமான சரிவை ஏற்படுத்தி இருப்பதாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான மனித உரிமைகள் அறிக்கை வெளியிடப்பட்ட நிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"ஆப்கானிஸ்தனை தலிபான்கள் கைப்பற்றியது மனிதாபிமான நெருக்கடி ஒன்றை தூண்டியதோடு, பெண்கள் கற்பதற்கான கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டு, அதன் விளைவாக முன்னாள் அரசின் பாதுகாப்பு படைகளுக்கு எதிரான பழிவாங்கல்கள், பெண்கள், ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை தன்னிச்சையாக தடுத்து வைப்பது என மனித உரிமைகளில் மோசமான சரிவு ஏற்பட்டுள்ளது" என்று ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றின் பிளிங்கன் தெரிவித்தார்.

## தென்னாபிரிக்காவில் வெள்ள மீட்பு தீவிரம்



தென்னாபிரிக்காவில் ஏற்பட்ட பயங்கர வெள்ளத்தை அடுத்து மீட்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த வாரம் பெய்த அடை மழையால் பெருகிய வெள்ளத்தில் சுமார் 400 பேர் உயிரிழந்தனர். கடந்த சனியன்று மீண்டும் மழை கொட்டியது.

மண்ணில் தண்ணீர் மிதமிஞ்சித் தேங்கிநிற்பதால் கூடுதல் வெள்ளம் ஏற்படலாம் என்று தென்னாபிரிக்காவின் வானிலை ஆய்வகம் கூறியது.

கடும் மழையால் வீதிகள் சேதமடைந்ததுடன் மின்சாரமும் துண்டிக்கப்பட்டது. சுமார் 40,000 பேர் வீடுகளை இழந்தனர்.

நாட்டின் மிகப்பெரிய நகரங்களில் ஒன்றான அம்லாஸியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோர் ஒரு சமூக மண்டபத்தில் தஞ்சம் புகுந்தனர்.

அண்மை நாட்களில் வானிலையைக் கணிப்பது சிரமமாக இருப்பதால் நகரங்களைத் தயார்ப்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

## பலுகிஸ்தான் ஆளுநர் அஹமது இராஜினாமா



பாகிஸ்தானில் இம்ரான் கான் அரசு பதவி கவிழ்க்கப்பட்ட நிலையில் அவரது கட்சியைக் சேர்ந்த செயித் சரூர் அஹமது அகா பலுகிஸ்தான் அளுநர் பதவியில் இருந்து விலகியுள்ளார்.

அவர் தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி ஆரிப் அல்வியிடம் கையளித்துள்ளார்.

"நாட்டினதும் தேசத்தினதும் அபிவிருத்திக்கான எனது பங்களிப்பை தொடர்ந்து செய்வேன்" என்று அவர் வெளியிட்ட அறிவிப்பில் கூறியுள்ளார்.

ஓய்வுபெற்ற நீதிபதி பான் யாசீன்சாய் பதவி விலகியதை அடுத்தே கடந்த ஜூலை 7 ஆம் திகதி அகமது பலுகிஸ்தான் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மூலம் இம்ரான் கான் பாக். பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட நிலையில், அந்நாட்டின் புதிய பிரதமராக செஹ்பாஸ் ஷரீப் தேர்வாகியுள்ளார்.


# VALIKAMAM NORTH PRADESHIYA SABHA, KANKESANTHURAI

## INVITATION FOR BIDS (IFB-III)

### Local Development Support Project - CREDIT NUMBER P 163305

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received credit from the World Bank towards the cost of Local Development Support Project and intends to apply part of the proceeds of this credit to payments under the contract.
2. The Chairman, Local Authority Procurement Committee on behalf of **Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai, Northern Province** invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.
3. Bidding will be conducted through National Competitive Bidding procedure.
4. Interested eligible bidders may obtain further information from **Chairman, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (T.No.: 021-224 1130, FAX: 021-224 3688)** and inspect the Bidding documents at the address given below on any working days from 09:00 hrs. to 15:00 hrs till 15th May 2022.
5. Qualification requirements are indicated in Section 4 of the Bidding document. Additional details are provided in the Section 5 of the bidding document.
6. To be eligible for contract award the successful bidders shall not have been blacklisted by Ministry of Finance or World Bank or any other acceptable Institutions, and Domestic Contractors shall have been registered in the field of Construction for grade mentioned in the table below with the Construction Industry Development Authority (CIDA).
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the address below from 18th April 2022 until 15th May 2022 from 09:00 hrs. to 15:00 hrs. on working days upon payment of a non-refundable fee of Rs. 1000.00. The method of payment will be by cash.
8. Bids (Original & Copy) shall be delivered directly or sent by registered post to the Chairman, Local Authority Procurement Committee, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai **on or before 10.30 hrs on 17th May 2022.** Bid number must be written on the left-hand corner of envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidders' representatives who choose to attend. Bids must be accompanied by a Bid Security as per the information given in the table.
9. Pre-bid meeting will be held on **02nd May 2022** at 11:30 hrs in the Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai. Interested bidders may attend the pre-bid meeting at their own expense.

| Contract No. | Description of Work | Estimated Cost Rs. (Million) | Contract Period | Required Grade Specialty | Validity Period of Bid from the last date of Bid Submission | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Validity Period | Security Amount | Validity Period |
| LDSP/NP/JAF/VNPS/PT1/02 | Construction of Toilet at Kankesanthurai Market | 2.38 | 60 Days | C8 or above Buildings | 63 Days | 24,000/= | 16.08.2022 |
| LDSP/NP/JAF/VNPS/PT1/03 | Improvement of Stalls at Keerimalai Market | 2.07 | 60 Days | C8 or above Buildings | 63 Days | 21,000/= | 16.08.2022 |
| LDSP/NP/JAF/VNPS/PT- (II) | Reconstruction of Thaiyiddipulam Road | 6.66 | 60 Days | C7 or above Highway | 77 Days | 67,000/= | 30.08.2022 |

**Chairman,**
**Local Authority Procurement Committee,**
**Valikamam North Pradeshiya Sabha,**
**Northern Province.**
**Tel.: 021-2241130**

18.04.2022


## லிபியாவில் அகதிப் படகு மூழ்கி 35 பேர் உயிரிழப்பு



லிபியா அருகே அகதிகள் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 35 பேர் உயிரிழந்ததாக ஐ.நா. அகதிகள் நல அமைப்பு தெரிவித்துள்ளது.

லிபியாவின் கடலோர நகரான சப்ரதா அருகே கடலில் சென்றுகொண்டிருந்த அகதிகள் படகு கடந்த வெள்ளிக்கிழமை கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் 35 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்தனர். அவர்களில் 6 பேரது உடல்கள் மட்டும் மீட்கப்பபட்டன.

சப்ரதா நகரிலிருந்துதான் ஐரோப்பிய நாடுகளில் அடைக்கலம் பெறுவதற்காக அதிகமான அகதிகள் மத்தியதரைக் கடல் வழியாக ஆபத்தான பயணத்தை மேற்கொள்வதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் மட்டும் லிபியா வழியாக ஐரோப்பிய நாடுகளை நோக்கிச் சென்ற 53 அகதிகள் கடலில் மூழ்கி உயிரிழந்தனர். இந்த மாத ஆரம்பத்தில், அளவுக்கு அதிகமான அகதிகளை ஏற்றிச் சென்ற படகு விபத்துக்குள்ளானதில் 90க்கும் மேற்பட்டவர்கள் பலியாகினர்.

## பிலிப்பைன்ஸ் மெகி புயலில் பலியானோர் 167 ஆக உச்சம்



பிலிப்பைன்ஸில் கடந்த வாரம் தாக்கிய மெகி புயலை அடுத்து ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தினால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை குறைந்தது 167 ஆக அதிகரித்துள்ளது. இதில் மேலும் 110 பேர் காணாமல்போயிருப்பதோடு 1.9 மில்லியன் பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக அந்நாட்டு தேசிய அனர்த்த நிறுவனம் தெரிவித்துள்ளது. மத்திய லைட்டே மாகாணத்தின் பைபை நகரைச் சூழவிருக்கும் கிராமங்களில் நிலச்சரிவு மற்றும் ஆறுகள் பெருக்கெடுத்ததால் மோசமான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பிலார் என்ற கிராமத்தின் 80 வீதத்திற்கும் அதிகமான வீடுகள் கடல் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

மணிக்கு 65 கிலோமீற்றர் வேகத்தில் வீசிய புயல் காரணமாக பலர் தமது வீடுகளை வீட்டு தற்காலிக முகாம்கள் மற்றும் உயர்ந்த இடங்களை நோக்கி வெளியேறினர்.

## அல் அக்ஸா வளாகத்தில் இஸ்ரேலிய பொலிஸார் நுழைவு: பதற்றம் உச்சம்

அல் அக்ஸா பள்ளிவாசல் வளாகத்தில் நேற்று அதிகாலை தொழுகைக்காக முஸ்லிம் வழிபாட்டாளர்கள் ஒன்றுகூடி இருந்த நேரம் இஸ்ரேலிய பொலிஸார் நுழைந்ததால் பதற்றம் நிலவியது. இரண்டு நாட்களுக்கு முன் இந்த வளாகத்தில் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்த இது இடம் பெற்றுள்ளது.

புனித தலத்திற்கு யூதர்கள் வருவதற்கான வசதியை ஏற்படுத்துவதற்காகவே வளாகத்திற்குள் பொலிஸார் நுழைந்ததாக இஸ்ரேல் நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது. இதனையொட்டி பலஸ்தீனர்கள் கற்களை சேகரித்து வைத்திருந்ததோடு தடுப்புகளையும் அமைத்தனர்.

எனினும் பள்ளிவாசலுக்கு வெளியில் உள்ள பகுதியில் இருந்து பலஸ்தீனர்களை பொலிஸார் வெளியேற்றினர். சிலர் பள்ளிவாசலுக்குள் சிக்கிக்கொண்டனர்.

இதன்போது இரு பலஸ்தீனர்கள் கைது செய்யப்பட்டதோடு மேலும் இருவர் காயமடைந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றனர்.



அல் அக்ஸா பள்ளிவாசலுக்குள் ஆடு ஒன்றை பலியிடுபவருக்கு பணப்பரிசு வழங்குவதாக தீவிர வலதுசாரி குழு ஒன்று அறிவித்ததை அடுத்தே அங்கு பதற்றம் அதிகரித்தது. பள்ளிவாசலுக்குள் இந்த யூத வழிபாடு தடுக்கப்பட்டிருப்பதோடு இது மேலும் ஆத்திரமூட்டலை ஏற்படுத்துவதாக உள்ளது.

இவ்வாறான நிகழ்வு ஒன்று இடம்பெறாதபோதும் சமூக ஊடகத்தில் இந்த செய்தி வேகமாக பரவியதால் பதற்றம் அதிகரித்தது.

இந்நிலையில் இஸ்ரேலிய படையினர் அல் அக்ஸா பள்ளிவாசல் வளாகத்திற்குள் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய சுற்றிவளைப்பில் 300க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கைது செய்யப்பட்டனர்.

அல் அக்ஸா பள்ளிவாசலை கைப்பற்றி அதனை பிரிப்பதற்கு இஸ்ரேல் திட்டமிடுவதாக பஸ்தீனர்கள் நீண்ட காலமாக அஞ்சி வருகின்றனர். இந்த வளாகத்தின் தற்போதைய ஏற்பாட்டை மதிப்பதாக இஸ்ரேல் கூறியபோதும், இங்கு இஸ்ரேலிய பொலிஸாரின் பாதுகாப்புடன் தேசியவாதிகள் மற்றும் மதம் சார்ந்த யூதக் குழுக்களின் வருகை அண்மைய ஆண்டுகளில் அதிகரித்துள்ளது.



புலம்பெயர் எழுத்தாளர் பூங்கோதை எழுதிய நிறமில்லா மனிதர்கள் நூல் வெளியீட்டு விழா கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்ற போது அதன் முதல் பிரதியை முன்னாள் அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனிடமிருந்து ஞானம் சஞ்சிகையின் ஆசிரியர் டாக்டர் தி ஞானசேகரன் பெற்றுக் கொண்டபோது எடுத்த படம். நூல் ஆசிரியை பூங்கோதையும் படத்தில் காணப்படுகிறார்.



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆன்மிக இதழ்" இந்து ஒளி" சிறப்புமலரின் வெளியீட்டு விழா சித்திரை புது வருடப்பிறப்பன்று அகில இலங்கை இந்துமாமன்ற தலைமையகத்தின் ஆலய கேட்போர் கூடத்தில் மன்றத்தலைவர் தவயோகராஜா தலைமையில் நடைபெற்றது. நடராஜப் பெருமானுக்கு பூஜை நடைபெறுவதையும், யோகர் சுவாமிகளின் 150 ஆவது ஜனன ஆண்டிற்கான சிறப்பிதழாக வெளியிடப்பட்டுள்ள இவ் இதழைப் பெற்றுக்கொண்ட தலைவரையும் எம். தவயோகராஜா, பொதுச்செயலாளர் வே. கந்தசாமி, பொருளாளர் அபிராமி கைலாசபிள்ளை, உப தலைவர் சி. தனபாலா, கணக்காளர் ஆர். எஸ். சிவகாந்தன் ஆகியோரையும் படத்தில் காணலாம். படம்: கொழும்பு வடக்கு நிருபர்

# அறிவித்தல்

## போர்னா இன்வெஸ்ட்மன்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டெட் கூறப்பட்ட மூலதனத்தின் பிரேரிக்கப்பட்ட குறைப்பு

போர்னா இன்வெஸ்ட்மன்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டெட்டின் (The 'Company') பணிப்பாளர்கள் சபை கம்பனியின் முற்றாகச் செலுத்தப்பட்ட சாதாரண பங்குகளாகிய ரூபா நாற்பது மில்லியன் ஓராயிரத்து அறுநூறைக் (40,001.600/=) குறிக்கும் ரூபா நாநூறு மில்லியன் பதினாறாயிரம் (400,016,000/=) இல் கூறப்பட்ட மூலதனத்தை ரூபா நூற்றுத்தொண்ணுற்றேழு மில்லியன் முந்நூற்று நாற்பத்து நாளாயிரத்து அறுநூற்று நாற்பத்திமூன்று (197,344,643.00) குறைப்பதற்கும் முற்றாகச் செலுத்தப்பட்ட சாதாரண பங்குகளை நாற்பது மில்லியன் ஓராயிரத்து அறுநூறு (40,001,600/=) சாதாரண பங்குகளாகக் குறைப்பதற்கு அதன் பங்குதாரர்களுக்குப் பரிந்துரை செய்வதற்கு 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்கமுடைய கம்பனிகள் சட்டத்தின் 59ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப தீர்மானித்துள்ளது பற்றிய அறிவித்தல் இத்தால் தரப்படுகின்றது.

மேலே கூறப்பட்ட தொகைக்குறைப்பு, 2022 மார்ச் 31இல் முடிவடைந்த காலப்பகுதியில் கூறப்பட்ட (2020 மார்ச் 31இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான கம்பனியின் முகாமைத்துவ கணக்குகளில் காட்டப்பட்ட) மொத்தம் இருநூற்று இரண்டு மில்லியன் அறுநூற்று எழுபத்தொராயிரத்து முந்நூற்று ஐம்பத்தேழு ரூபாவை (202,671,357/=) உள்ளடக்கிய இழப்புக்கான வழங்கப்பட்ட மற்றும் முற்றாகச் செலுத்தப்பட்ட சாதாரண பங்குகளின் எண்ணிக்கையில் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்தாதவாறு அதன் பின்னர் கம்பனியின் ஐந்தொகையில் இழப்புகள் கழித்தெழுதப்படுவதற்காக கம்பனி அதன் கூறப்பட்ட மூலதனத்தை ரூபா இருநூற்று இரண்டு மில்லியன் அறுநூற்று எழுபத்தொராயிரத்து முந்நூற்று ஐம்பத்தேழாக (202,671,357/=) குறைப்பதன் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.

பங்குதாரர் அனுமதி 2022 ஜூலை 10ஆம் திகதி அல்லது பின்னர் சுற்றறிக்கை மூலமும் விசேட தீர்மானம் நிறைவேற்றுதல் மூலமும் பெறப்படும்.

**சபையின் கட்டளைப்படி**
**போர்னா இன்வெஸ்ட்மன்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டெட்**
**கே.ஜி.டி.எஸ்.சி. குணசேகர**
**கம்பனி செயலாளர்.**

The Housewives' companion
Classifieds on
Daily News

# இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2022 ஏப்ரல் 20ஆம் திகதி ஏல விற்பனையினூடாக ரூ. 97,500 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09122G222 | LKA18222J215 | LKA36423D210 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 47,500 | 27,500 | 22,500 | 97,500 |

ஏல விற்பனைத் திகதி : 2022 ஏப்ரல் 20
தீர்ப்பனவுத் திகதி : 2022 ஏப்ரல் 22
வழங்கப்படும் திகதி : 2022 ஏப்ரல் 22
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2022 ஏப்ரல் 20, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து.

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**


| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

✷ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம். இசட். எம். ஆசிம்**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

# சிறு விளம்பரம்




## மோட்டார் வாகனங்கள்

108
**நிஸான் கார்** விற்பனைக்கு

WP HD-4075 நிசான் சனி 1998 கார் அதியுயர் விலைக்கு. வெலிபல பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8 . 026120

111
**ஹொண்டா கார்கள்** விற்பனைக்கு

WP CBI-0914 ஹொண்டா 2017 கார் அதியுயர் விலைக்கு. வெலிபல பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8 . 026122

122

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்** விற்பனைக்கு

WP ABJ-1112 பஜாஜ் 2015, WP ABH-6818 பஜாஜ் 2015, SG YN- 4 574 பஜாஜ் 2011, முச்சக்க ர வண்டி அதியுயர் விலைக்கு . வெலிபல பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீ தி , கொழும்பு 03 . தொலைபேசி. 07 11 2 1 081 0 . 026121

# மக்களின் பொருளாதார சுமைகள் நீங்கட்டும்



மலர்ந்துள்ள புத்தாண்டு, எதிர்காலத்தைப் புதிய உத்வேகத்துடனும் நம்பிக்கை மற்றும் உறுதியுடனும் வெற்றிகொள்ள வழிகாட்ட வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள தமிழ் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

அவரது வாழ்த்து செய்தியில் மேலும் கூறியுள்ளதாவது,

நாட்டின் மீதும் எமது சமூகத்தின் மீதும் ஆளும் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கடுமையான பொருளாதார சுமைக்கு மத்தியிலேயே இந்த புத்தாண்டை வரவேற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

சவால்களைத் வெற்றிகொள்வதற்கும், மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு புதிய ஆண்டு வாய்ப்பளிக்கும் என்று நான் நம்புகிறேன்.

முடங்கியுள்ள பொருளாதாரம், மக்களின் இயல்பு வாழ்க்கை என்பன மீள இயல்பு நிலைக்கு திரும்ப வேண்டும். குறிப்பாக பாரிய பொருளாதார நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ள மலையக மக்களின் வாழ்க்கைத்தரம் புத்தாண்டின் பின் சுபிட்சமாக வேண்டும்.

தன்னம்பிக்கை, அர்ப்பணிப்பு மற்றும் ஒற்றுமை ஆகியவற்றின் மூலமே அவ்வாறான எழுச்சியை நோக்கிப் பயணிக்க முடியும். மலர்ந்துள்ள புத்தாண்டை மாற்றத்துடன் கூடிய புத்தாண்டாக மாற்ற மக்களை அணிதிரளுமாறு அழைப்பு விடுக்கின்றேன்.

மலர்ந்துள்ள புத்தாண்டு, உங்கள் அனைவருக்கும் ஆரோக்கியமானதும் தைரியமிக்கதுமான புத்தாண்டாக அமைய வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# அவசியமற்ற செயலணிகளை கலைத்துவிட வேண்டும்



நாடு எதிர் நோக்கும் பாரிய பொருளாதார நெருக்கடியில் ஒரே நாடு ஒரே செயலணி, தொல்பொருள் செயலணி போன்ற அவசியமற்ற செயலணிகளை கலைத்துவிட வேண்டும் என ஐக்கிய காங்கிரஸ் கட்சி (உலமா கட்சி) தலைவர் முபாறக் அப்துல் மஜீத் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது, அச்செயலணியை வைத்துக்கொண்டு அவரும் அதன் உறுப்பினர்களும் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்ததன் மூலம் அரச நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டது மட்டுமின்றி இனங்களுக்கிடையில் சந்தேகங்களையும் உருவாக்கியது.

நாட்டின் குற்றவியல் சட்டம், சிவில் சட்டம் என பெரும்பாலான சட்டங்கள் அனைவருக்கும் பொதுவாகவே உள்ளன. திருமண சட்டம் மட்டுமே ஒவ்வொரு இனத்துக்கும் ஏற்ற வகையில் உள்ளன. இச்சட்டத்தால் இன்னொரு இனம் பாதிக்கப்படுவதில்லை. இச்செயலணி அநாவசிய செலவுகளை ஏற்படுத்தியிருப்பதாலும் அச்செயலணியை கலைப்பதே நாட்டுக்கு நல்லது என்ற ஆலோசனையை எமது கட்சி முன் வைக்கிறது.

அதே போல் தொல் பொருள் செயலணியும் பிரயோசனமற்றது என்பதுடன் வீண் செலவுகளை ஏற்படுத்துவதுடன் இனங்களுக்கிடையில் மோதலை உண்டாக்குவதுமாகவும் உள்ளதால் இதுவும் கலைக்கப்படுவதே நாட்டின் எதிர்காலத்துக்கு சிறந்ததாகும்.

# கணக்கு அதிகாரி பதவி மற்றும் நிர்வாக அதிகாரி பதவிக்காக சேர்த்துக் கொள்ளல்.

## காலி மரபுரிமை மன்றம்

**தேசிய மரபுரிமை, அரங்கேற்றக்கலை மற்றும் கிராமிய கலைஞர் மேம்பாட்டு விடயங்கள் இராஜாங்க அமைச்சு**

### நிர்வாக அதிகாரி பதவி (ஒரு பதவி)
### கணக்கு அதிகாரி பதவி (ஒரு பதவி)

காலி மரபுரிமை மன்றத்தின் மேற்படி பதவிக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள், கோரப்படுகின்றன. இதற்காக விண்ணப்பங்கள், அங்கு குறிப்பிடப்படும் தகைமைகளுடன் சம்பந்தப்பட்ட சான்றிதழ் பத்திரங்களின் புகைப்படப் பிரதியுடன் இணைத்து, 2022 மே 06ம் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்கிடைக்குமாறு தலைவர், காலி மரபுரிமை மன்றம், இல. 12, ரெம்பொட் வீதி, கோட்டை, காலி என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். குறித்த தினத்திற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் உள்ளிடும் உடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**கணக்கு அதிகாரி பதவிக்காக இருக்க வேண்டிய குறைந்தபட்ச தகைமைகள் மற்றும் கடமையின் தன்மை**

**குறைந்தபட்ச தகைமைகள்:-**

(1) (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் (வனிக மானி/ முகாமைத்துவம்/கணக்கியல்) பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது நான்கு வருட தேசிய கணக்காளர் டிப்ளோமாவைப் பெற்றிருத்தல்.

மற்றும்

(ஆ) இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தில் இடைநிலை சித்தியடைந்திருத்தல் (ICASL) அல்லது பட்டய முகாமைத்துவ கணக்கியல் நிறுவனத்தில் இடைநிலை சித்தியடைந்திருத்தல் (CIMA) அல்லது கணக்கியல் சான்றிதழ் வழங்கும் நிறுவனதில் ACCA சித்தியடைந்திருத்தல்.

(மேற்படி இடைநிலை பரீட்சையுடன் சம்பந்தப்பட்ட தொழில்சார் கணக்கியல் நிறுவனத்தினால் பிற்காலத்தில் குறித்த பாடநெறி திருத்தப்படும் போது இடைநிலை தகைமைகளுக்கு பொருந்தும் தகைமையுள்ள நபர்களுக்கு இதற்காக விண்ணப்பிக்கலாம்)

(2) கணனி பெக்கேஜ் மூலம் கணக்கு விடயங்களை மேற்கொள்ளல் மற்றும் அறிக்கைகளை தயாரிக்கும் ஆற்றல்

அரச துறையில் கணக்கியல் துறையில் அனுபவம் மேலதிக தகைமையாக கவனத்தில் கொள்ளப்படும்.

**கடமையின் தன்மை:-**
காலி மரபுரிமையின் சகல நிதிவிடயங்களை நிருவகிக்கும் மற்றும் கணக்கு விடயங்களில் முகாமைத்துவம் வருடாந்த பட்ஜெட் மதிப்பீட்டை தயாரித்தல், வருமான உற்பத்தி வழிகளின் முதலீட்டு விடயங்களை மேற்கொள்ளல். நிதிவிடயங்கள் பற்றிய நிதி அறிக்கைகளை சமர்ப்பித்தல் மற்றும் அது பற்றிய கூட்டங்களில் பங்குபற்றுதல். அமைச்சுடன் நிதி கொடுக்கல் வாங்கல் பற்றிய விடயங்களை நிறைவேற்றுதல் மற்றும் தொடர்பை ஏற்படுத்துதல், வருடாந்த கணக்கியல் விடயங்களை நிறைவேற்றுவதற்கு தேவையான தகவல்களை சமர்ப்பித்தல், நிறுவன தலைமையினால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் வேறு வேலைகளை நிறைவேற்றுதல்.

**நிர்வாக அதிகாரி பதவிக்காக இருக்க வேண்டிய குறைந்தபட்ச தகைமை மற்றும் கடமையின் தன்மை**

**குறைந்தபட்ச தகைமை**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டத்தைப் பெற்றிருத்தல் மற்றும் பட்டத்தை பெற்றுக்கொண்ட பின்பு அரச அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் மனித வள முகாமைத்துவ துறையில் 03 வருட குறைந்தபட்ச அனுபவத்தை பெற்றிருத்தல்.

**கடமையின் தன்மை**
அலுவலக விடயங்களில் நிர்வாகம், மதிப்பீடு செய்தல் மற்றும் நிர்வகித்தல் நிறுவன நிலைமையினால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் வேறு வேலைகளை நிறைவேற்றுதல்.

**இரு பதவிகளுக்கும் பொருந்தும் பொது நிபந்தனைகள்**

1. இப்பதவி நிரந்தரமானது தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி ஊழியர் சேமலாப நிதிக்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
2. நியமனத் திகதியில் இருந்து 03 வருட நன்னடத்தை காலத்திற்கு உட்பட்டு பதவிக்கு நியமிக்கப்படுவர்.
3. வயதெல்லை (விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு) 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
4. சம்பள அளவு:- முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 2(2016) இன் பிரகாரம் மாதாந்தம் 42600- 10x755 - 18x1135 - 70580 மற்றும் அரசினால் அனுமதிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு (மேற்படி சம்பள அளவுடன் சம்பந்தப்பட்ட ஆரம்ப சம்பள கட்டத்தில் நிலைநிறுத்தப்படுவர்)
5. கணனி பாவனை பற்றிய சிறந்த அறிவு இருத்தல் வேண்டும். ஆங்கில மொழி பற்றிய சிறந்த அறிவு இருத்தல் வேண்டும்.
6. சேர்த்துக்கொள்ளும் முறை: காலி மரபுரிமை மன்றத்தின் முகாமைத்துவ சபையின் அனுமதி மற்றும் தேசிய உரிமை, அரங்கேற்றகலை மற்றும் கிராமியகலைஞர் மேம்பாட்டு விடயங்கள் இராஜாங்க அமைச்சின் அனுமதியின் பிரகாரம் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வு சபையினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் தகைமையானவர் தேர்ந்தெடுக்கப்படுவர்.
7. விண்ணப்பதாரிகள் பற்றி விசாரிப்பதற்காக உறவினர் அல்லாத இரு நபர்களின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கத்தை விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.
8. அமைச்சு/ திணைக்களம்/ மாகாண அரச சபை சேவை/ அரச கூட்டுத்தாபனம்/ நியதிகள் சபை மற்றும் நியதிகள் நிறுவனங்களில் தற்போது சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தை நிறுவன தலைமையின் ஊடாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை www.galleheritage.gov.lk காலி மரபுரிமை மன்றத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யலாம்.

**பராக்கிரம தஹநாயக்க,**
**தலைவர்,**
**காலி மரபுரிமை மன்றம்,**
**இல. 12, ரெம்பொட் வீதி, கோட்டை,**
**காலி.**
**தொ.பே. இலக்கம் 091-2246784**

# கமத்தொழில் அமைச்சு

## பெறுகைக்கான அறிவித்தல்

### துப்புரவு மற்றும் சுகாதார சேவை வழங்கல் 2022/2023

கமத்தொழில் அமைச்சு, கொவிஜன மந்திரய கட்டிடத்தில் துப்புரவு மற்றும் சுகாதார சேவையை மேற்கொள்வதற்கு தகுதியான நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பதற்காக **2022.04.18** ஆம் திகதி முதல் **2022.05.09** ஆம் திகதி பி.ப.2.00 மணி வரை விலைமனுக்கள் கோரப்படும்.

தேவையான சகல விபரங்களையும் பெற்றுக்கொள்ள **www.agrimin.gov.lk** எனும் இணையதளத்தைப் பார்வையிடவும்.

மேலதிக தகவல்களை **தொ.பே : 011-2887406** இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**செயலாளர்,**
**விவசாய அமைச்சு**
**"கொவிஜன மந்திரய",**
**80/5, இராஜமல்வத்த ஒழுங்கை, பத்தரமுல்லை.**

# விலைமனு கோருவதற்கான அழைப்பு

## கம்பஹா வலய அலுவலகம் – 2022

கம்பஹா வலயக் கல்வி அலுவலகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் உருப்படிகளை 2022ஆம் வருடம் முழுவதும் வழங்கும் பொருட்டு 2022-05-09ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொகுதி | மீளளிக்கப்படாத தொகை | மீளளிக்கப்படும் தொகை |
|---|---|---|
| கணனி மற்றும் கணனி துணைப்பாகங்கள் (Monitor, UPS, Key Board, Speaker) கணனி அச்சுப்பொறி, Laptop, Fax, விரல் ரேகை பதிவு இயந்திரம், Eye contact, Multimedia projector with screen, Dot matrix printer) | ரூ. 500.00 | ரூ. 4,000.00 |
| புகைப்படப் பிரதி இயந்திரம் | | |
| டுப்ளோ இயந்திரம் | | |
| தொலைக்காட்சிப் பெட்டி / Smart Board | | |
| பாடசாலைக்கான சகல விளையாட்டு உபகரணங்கள் | | |
| பாடசாலைக்கான சகல இசைக் கருவிகள் மற்றும் வாத்தியக் கருவிகள் | | |
| பாடசாலை ஊடகப் பிரிவிற்கான உபகரணங்கள் | | |

கொள்வனவு செய்ய உத்தேசிக்கும் எண்ணிக்கையானது 2022ஆம் வருடத்தின் எதிர்கால தேவையின் அடிப்படையில் மாற்றமடையலாம்

01 விலைக் கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையின் கீழ் இடம்பெறும். மேற்படி விலைக் கோரலுக்கான படிவங்களை 2022-04-18ஆம் திகதி முதல் 2022-05-09ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விநியோகிக்கப்படும். விலைமனு பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஒவ்வொரு தொகுதிக்குமான மீளளிக்கப்படாத கட்டணத்தை கம்பஹா வலயக் கல்வி அலுவலகத்தின் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் நிறுவனக் கடிதத் தலைப்பில் எழுத்துமூல வேண்டுகோள் ஒன்றைக் கணக்கியல் பிரிவுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்ததன் பின் 2022-05-09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கம்பஹா வலயக் கல்வி அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

03. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2022-05-09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் கம்பஹா வலயக் கல்வி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது ''வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி பணிப்பாளர் அலுவலகம், கம்பஹா'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமர்ப்பிக்கப்படும் அனைத்து விலைமனுக்களும் 2022-05-31ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

05. 033-2222077 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக நிர்வாகப் பிரிவைத் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. இந்த விலைக்கோரலை இரத்துச் செய்தல் அல்லது வேறு ஏதாவது மாற்றங்களைச் செய்வது தொடர்பான அதிகாரத்தை பெறுகைக் குழுவின் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வலயக் கல்வி அலுவலகம்,**
**கம்பஹா.**

# பெறுகை அறிவித்தல்

## வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் சக்திவலு, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு

## மத்திய மாகாணம்

மத்திய மாகாண சபையின் வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் சக்திவலு, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் பெறுகைக் குழுத் தவிசாளரினால் நிர்மாணக் கைத்தொழில் மற்றும் அதிகார சபையில் (CIDA) வீதிகள் துறையில் செல்லுபடியாகும் பதிவைக் கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கைத்தொழில் நிர்மாணம் மற்றும் பொருட்களை வழங்குதல், அஸ்பால்ட் கொங்கிறீட்டை வழங்கப் பெற்றுக்கொள்வதற்காக அரசாங்கத்தின் செல்லுபடியாகும் பதிவைக் கொண்டுள்ள அஸ்போல்ட் உற்பத்தியாளர்கள் மற்றும் திரவ தார்களுக்கு பதிவைப் பெற்றுள்ள தார் உற்பத்தியாளர்கள் மற்றும் விநியோஸ்தர்களிடமிருந்து பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்காக கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்வித் தொகை 5 அல்லது 5 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட வேலைகளுக்கு 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்திற்கமைய பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும்.

இதன் பிரகாரம் உங்கள் நிறுவனத்தினால் கேள்விகளைப் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானித்திருந்தால் இயைபுடைய கைத்தொழில் மற்றும் உங்களின் மின்னஞ்சல் முகவரியை சரியாகக் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதமொன்றை 2022-05-11ஆம் திகதிக்கு முன் prdatender@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு அறிவிக்கப்படுகின்றது. “CIDA” பதிவு அல்லது பொருட்களை வழங்குவதற்கான வியாபாரப் பதிவை உறுதி செய்வதற்கு அவசியமான ஆவணங்களின் இயைபுடைய பிரதிகளை வேண்டுகோள் கடிதத்துடன் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

கேள்விப் படிவங்கள் வழங்கும் இறுதி நாள் 2022-05-11ஆம் திகதியாகும் என்பதுடன் ஏனைய முக்கிய தகவல்கள் பின்வருமாறாகும்.

1. உங்களால் விண்ணப்பிக்கப்படும் வேலைக்கு இயைபான தகவல்களை வேண்டுகோள் கடிதத்தில் சரியாகவும் தெளிவாகவும் குறிப்பிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். தகவல்கள் சரியாக இல்லாவிட்டால் அறிவிக்கப்படாமலேயே உங்களது வேண்டுகோள் கடிதம் நிராகரிக்கப்படும்.
2. மின்னஞ்சல் மூலமான வேண்டுகோள் கடிதங்கள் ஏற்றுக்கொள்ளல் 2022-05-11ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு நிறைவுறும் என்பதுடன் வேண்டுகோள் கடிதங்களைச் சமர்ப்பித்துள்ள நிறுவனங்களுக்கு மட்டும் 2022-04-20ஆம் திகதி முதல் 2022-05-11ஆம் திகதி வரையில் அலுவலக நேரங்களில் மட்டும் கேள்விப் படிவங்கள், கேள்விதாரரினால் வேண்டுகோள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
3. 2022-05-04ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். Covid 19 இடர் காரணத்தினால் Zoom ஊடாக நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் கலந்துகொள்வதற்குத் தேவையான தகவல்கள் பின்வருமாறாகும்.

   - **கூட்ட இலக்கம் (Meeting ID)** - 710 432 4355
   - **கடவுச்சொல் (Passcode)** - 2022/1st
   - **குறிப்பீடிலக்கம் (Join Zoom Meeting)** - https://us05web.zoom.us/j/7104324355?pwd=cXh5T0dkcFYrWGI1eE4yQmdLS0tvZz09

4. இயைபுடைய கேள்விப் படிவங்களின் மென் பிரதியை உங்களின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் உங்களால் கேள்விப் படிவங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென இரு வன் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கையை மேற்கொள்ளுதல் வேண்டும். உங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள கேள்விப் படிவத்தின் மென் பிரதியில் உள்ளடக்கப்பட்டுள்ள சகல பக்கங்களும் உங்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்படிவத்தின் மூலப் பிரதியின் மற்றும் நகல் பிரதி உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இணைப்பில் குறிப்பிட்டுள்ள வகையில் வேலைக்கு இயைபான தொடரிலக்கம் மற்றும் வேலையின் பெயரையும் மூலப் பிரதியா அல்லது நகல் பிரதியா என்பதை தெளிவாகவும் மற்றும் சரியாகவும் குறிப்பிடவும். முறையாகப் பூர்த்தி செய்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறு உறைகளிலிட்டு **தலைவர், பெறுகைக் குழு, வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, சக்திவலு மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு, 109, யடிநுவர வீதி, கண்டி** எனும் முகவரிக்கு 2022-05-13ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பியோ அல்லது இக்காரியாலயத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதற்கோ நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.
5. கேள்விகள் ஏற்கப்பட்டு முடிவடைந்த உடனடுத்து கண்டி, போகம்பரை, இல. 09, எஹல்லேபொல குமாரிஹாமி மாவத்தை, வீதி அபிவிருத்தி அதிகார சபையில் கேள்விகள் திறக்கப்படுமென்பதுடன் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் இதில் கலந்துகொள்ளலாம்.
6. கேள்விப் படிவங்கள் வழங்கப்படுவதற்காக மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் எவ்விதக் கட்டணமும் அறவிடப்படமாட்டாது. தேவையான மேலதிக விபரங்களை கண்டி, போகம்பரை, இல. 09, எஹல்லேபொல குமாரிஹாமி மாவத்தை, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளரிடமிருந்து 081-2052279, 081-2204378, 081-2066382 எனும் தொலைபேசி இலக்கங்களில் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் prdatender@gmail.com எனும் மின்னஞ்சலின் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

   மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் ஒப்பந்த நிறுவனத்தினால் 2021ஆம் வருடத்தில் நிறைவேற்றப்பட்ட வேலைகள் மற்றும் 2021ஆம் வருடத்தில் தற்போது செயற்படுத்தப்படும் வேலைகளுக்கான வினைத்திறன் ஒப்பந்தங்களை வழங்கும் போது கவனத்திற் கொள்ளப்படும். நிதி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள ஒப்பந்தங்களைக் கையளிப்பதற்கு இயைபான சுற்றுநிருபங்களின் விதிமுறைகள் பெறுகை நடவடிக்கைகளுக்கு பிரயோகிக்கப்படும். அதேபோல் ஒரு ஒப்பந்த நிறுவனத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தத்தை வழங்கமுடியுமா என்பது பற்றி பெறுகைக் குழு தீர்மானிக்கும்.

   கேள்வி ஆவணங்களுடன் உங்களால் வழங்கப்படும் ஆவணங்களை சரியாகவும் மற்றும் கேள்விப் படிவத்தில் தரப்பட்டுள்ள அறிவுரைகளுக்கு அமைவாகவும் சமர்ப்பித்தல் உங்கள் பொறுப்பாகும் என்பதுடன் இயைபான தகவல்கள் சரியாகச் சமர்ப்பிக்கப்படாமை கேள்விகள் நிராகரிக்கப்படுவதற்கு ஏதுவாகலாம். மேலும் ஏதாவது ஒரு கேள்வியை அல்லது எல்லாக் கேள்விகளையும் காரணம் காட்டாமல் நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவின் தவிசாளருக்கு உண்டென்பதுடன், ஆகக் குறைந்த விலைமனுவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கடப்பாடும் இல்லை.

**தவிசாளர்,**
**பெறுகைக் குழு.**
**வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, சக்திவலு மற்றும்**
**வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு,**
**109, யடிநுவர வீதி, கண்டி.**

### மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை

#### கேள்விப் பட்டியல் - 2022 1ஆம் படிநிலை

| தொ. இல | ஒப்பந்த இலக்கம் | விபரங்கள் | CIDA பதிவு | அளவுப் பத்திரத்தின் பெறுமதி (ரூ. மில்.) | கேள்விப் பிணை முறி (செல்லுபடியாகும் கால எல்லை 120 நாட்கள்) - கேள்விப் பிணை ரொக்கப் பணமாக (ரூபா) | கேள்விப் பிணை வங்கிப் பிணையாக (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| **PSDG** | | | | | | |
| **கண்டி மாவட்டம்** | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு - கண்டி** | | | | | | |
| 1 | CPC/PRDA/ PSDG/K/ KAN/2022/01 | கிரிபத்கும்புர தியபலாகொம வீதிக்கு அஸ்போல்ட் இட்டு அபிவிருத்தி செய்தல் (0+000-0+640km) | C6-C5 | 20.80 | 104,000.00 | 208,000.00 |
| 2 | CPC/PRDA/ PSDG/K/ KAN/2022/02 | நித்தவெல வீதியில் கடினமான வரம்புகள் மற்றும் "U" வடிவான வடிகால்களை நிர்மாணித்தல் மற்றும் அஸ்போல்ட் இடுதல் (0+080-0+750km) | C5-C4 | 29.49 | 147,500.00 | 295,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு - ஹாரிஸ்பத்துவ** | | | | | | |
| 3 | CPC/PRD/ PSDG/K/ HAR/2022/01 | அங்கஸ்தலாவ ஹமங்கொட உடுமுல்ல வீதியில் கொங்கிறீட் தடுப்புச் சுவர், தளபாடம் மற்றும் கொங்கிறீட் கட்டமைப்பை நிர்மாணித்தல் மற்றும் அஸ்போல்ட் இடுதல் (0+000-1+600) | C5-C4 | 32.50 | 162,500.00 | 325,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு - கம்பொல** | | | | | | |
| 4 | CPC/PRDA/ PSDG/K/ GAM/2022/01 | உடஹந்தான வெடகேதெனிய வீதியில் "U" வடிவான வடிகால் மற்றும் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் மற்றும் அஸ்போல்ட் இடுதல் (3+000-4+200km) | C5-C4 | 29.30 | 146,500.00 | 293,000.00 |
| **மாத்தளை மாவட்டம்** | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு - மாத்தளை** | | | | | | |
| 5 | CPC/PRDA/ PSDG/M/ MAT/2022/01 | ஓவிலிகந்த அங்கும்புர வீதியில் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் மற்றும் அஸ்போல்ட் பரப்புதல் (2+480-3+330km) | C6-C5 | 15.5 | 77,500.00 | 155,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு - நாஉல** | | | | | | |
| 6 | CPC/PRDA/ PSDG/M/ NAU/2022/01 | அம்பான மொரகொல்ல கலபட வீதிக்கு அஸ்போல்ட் "U" வடிவான வடிகால்களை நிர்மாணித்தல் மற்றும் அஸ்போல்ட் இடுதல் (1+840-3+440km) | C5-C4 | 25.44 | 127,500.00 | 255,000.00 |
| **நுவரெலியா மாவட்டம்** | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு - ரிகில்லகஸ்கட** | | | | | | |
| 7 | CPC/PRDA/ PSDG/N/ RIK/2022/01 | இடம்பிட்டிய வெள்ளகிரிய வீதியில் "U" வடிவான வடிகால்களை நிர்மாணித்தல் மற்றும் அஸ்போல்ட் இடுதல் (0+000-1+170km) | C6-C5 | 24.52 | 123,000.00 | 246,000.00 |
| **பராமரிப்பு** | | | | | | |
| **கண்டி மாவட்டம்** | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு - கண்டி** | | | | | | |
| 1 | CPC/PRDA/ MAIN/K/ KAN/2022/02 | கொலபிஸ்ஸ பெட்டியகம வீதியில் கடினமான வரம்புகள் மற்றும் "U" வடிவான வடிகால்களை நிர்மாணித்தல் மற்றும் அஸ்போல்ட் இடுதல் (6+600-7+629km) | C5-C4 | 25.30 | 126,500.00 | 253,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு - ஹாரிஸ்பத்துவ** | | | | | | |
| 2 | CPC/PRDA/ MAIN/K/ HAR/2022/01 | அக்குரணை புலுகொஹொதென்ன வீதியில் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் (1+000km/ RHS) | C7-C6 | 8.93 | 45,000.00 | 90,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு - குண்டசாலை** | | | | | | |
| 3 | CPC/PRDA/ MAIN/K/ KUN/2022/01 | லுனுகெட்டிமடித்த கெந்தகும்புர வீதிக்கு அஸ்போல்ட் இடுதல் (1+000-2+390km) | C5-C4 | 33.16 | 166,000.00 | 332,000.00 |
| 4 | CPC/PRDA/ MAIN/K/ KUN/2022/02 | நத்தரம்பொத்த சிறிமல்வத்த வீதிக்கு கொங்கிறீட் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் (0+700-0+750km) | C8-C7 | 4.32 | 22,000.00 | 44,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு - கம்பொல** | | | | | | |
| 5 | CPC/PRDA/ MAIN/K/ GAM/2022/02 | ஒலிகொட பிட்டவலவத்த வீதியில் "U" வடிவான வடிகால் மற்றும் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் மற்றும் அஸ்போல்ட் பரப்புதல் களை நிர்மாணித்தல் மற்றும் அஸ்போல்ட் இடுதல் (0+000-1+890km) | C5-C4 | 40.70 | 203,500.00 | 407,000.00 |
| 6 | CPC/PRDA/ MAIN/K/ GAM/2022/03 | தொலொஸ்பாகே கந்தகடே வீதிக்கு அஸ்போல்ட் இடுதல் (0+000-0+850km) | C6-C5 | 17.77 | 89,000.00 | 178,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு - கம்பொல** | | | | | | |
| 7 | CPC/PRDA/ MAIN/K/ GAM/2022/04 | வட்டப்பொல கங்ஹத்த வீதியிலுள்ள கற்பாறையை அப்புறப்படுத்துதல் (Ch 4+120kmLHS) | C8-C7 | 4.73 | 24,000.00 | 48,000.00 |
| **நுவரெலியா மாவட்டம்** | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு - திம்புல்ல** | | | | | | |
| 8 | CPC/PRDA/ MAIN/N/ DIM/2022/01 | திபர்டிடன் முருதென்ன வீதியில் வீதித் தளபாடங்கள் நிர்மாணித்தல் மற்றும் அஸ்போல்ட் பரப்புதல் (9+563-11+260km) | C5-C4 | 32.00 | 160,000.00 | 320,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு - ராகல** | | | | | | |
| 9 | CPC/PRDA/ MAIN/N/ RAG/2022/01 | உடபுஸ்ஸல்லாவ மடுல்ல வீதியை நிர்மாணித்தல் (0+000-1+610km) | C5-C4 | 38.52 | 193,000.00 | 386,000.00 |
| **பொருட்கள் வழங்குதல்** | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு - கண்டி** | | | | | | |
| 10 | CPC/PRDA/ MAIN/K/ KAN/2022/03 | கண்டி நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்திற்கு பொருட்கள் வழங்குதல் - பிரீமிக்ஸ் தயாரித்தல் மற்றும் வீதிப் பராமரிப்பு வேலைகள் | C8-C7 | 3.55 | 18,000.00 | 36,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு - கம்பொல** | | | | | | |
| 11 | CPC/PRDA/ MAIN/K/ GAM/2022/05 | ஹித்தவுல முற்றவெளிக்கு பொருட்கள் வழங்குதல் | C8-C7 | 3.47 | 17,500.00 | 35,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு - மாத்தளை** | | | | | | |
| 12 | CPC/PRDA/ MAIN/M/ MAT/2022/01 | கிவுல முற்றவெளிக்கு பொருட்கள் வழங்குதல் | C8-C7 | 2.17 | 11,000.00 | 22,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு - திம்புல்ல** | | | | | | |
| 13 | CPC/PRDA/ MAIN/N/ DIM/2022/02 | பராமரிப்பு வேலைகளுக்குத் தேவையான பொருட்களை வழங்குதல் (அம்பகமுவ முற்றவெளி) | C8-C7 | 2.71 | 14,000.00 | 28,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு - ராகல** | | | | | | |
| 14 | CPC/PRDA/ MAIN/N/ RAG/2022/02 | ராகல அலுவலக முற்றவெளிக்கு பொருட்கள் வழங்குதல் | C9-C8 | 1.74 | 9,000.00 | 18,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு - ரிகில்லகஸ்கட** | | | | | | |
| 15 | CPC/PRDA/ MAIN/N/ RIK/2022/01 | ரிகில்லகஸ்கட அலுவலக முற்றவெளி மற்றும் பதியபெதெல்ல முற்றவெளிக்கு பொருட்கள் வழங்குதல் | C8-C7 | 2.90 | 14,500.00 | 29,000.00 |
| **ஏனையவை** | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு - குண்டசாலை** | | | | | | |
| 1 | CPC/PRDA/ MAIN/K/ KUN/2022/01 | ஹதபிம அதிகார சபை வீதிக்கு அஸ்போல்ட் பரப்புதல் | C9-C8 | 0.72 | 4,000.00 | 8,000.00 |



Best way to fulfil your Future Dreams
SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service
E-mail your advertisements to,
classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342

### விஷேட அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வெயன்கொட, பிராங்லாண்ட் எஸ்டேட், 240–ஏ என்ற முகவரியில் வசிக்கும் நானாகிய கிரி ஆராய்ச்சிகே தோன சத்துரிக்கா ஸ்ரீபாலி (தே.அ.அ. இல. 705750700V) கொழும்பு-10, ஆனந்த மாவத்தையிலுள்ள கொழும்பு பிரசித்த நொத்தாரிஸ் திருமதி புஷ்பா கங்கொடயாராச்சியினால் 2022.02.22 ஆம் திகதியன்று எழுதப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டு 8282 என்ற இலக்கத்தைக் கொண்ட அற்றோணித்தத்துவமானது பத்தரமுல்ல, பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் கொழும்பு மாவட்ட அலுவலகத்தில் 2442 ஆம் இலக்க நாட்புத்தக இலக்கத்தில் 92 ஆம் பக்கத்தில் 21 ஆம் பாகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இந்த அற்றோணித்தத்துவமானது கொழும்பு-05, ஜாவத்த பாதை, ஜாவத்த கார்டன்ஸ் இல. 85/21 ஆம் இலக்கத்தில் வசிக்கும் இரத்நாயக்க முதலிகே லலித்த வாருந்திய இரத்நாயக்க (தே.அ.அ. இல. 198214201713) என்பவருக்கு வழங்கப்பட்டுள்ள விஷேட அற்றோணித்தத்துவமானது 2022 ஏப்ரல் 12 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கும் வகையில் இரத்துச் செய்யப்பட்டுள்ளதென இலங்கையின் அனைவருக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

**கிரி ஆராய்ச்சிகே தோன சத்துரிக்கா ஸ்ரீபாலி.**
**2022.04.11**

## For classified advertisements and for replies

received in response to advertisements published under Lake House box numbers

Manager front office
**+94 112429341**
**Hotline 1949**

## விலைமனுக்கள் சமர்ப்பிக்கும் திகதியை நீடித்தல்

### விவசாயத் திணைக்களம் - பேராதனை

01. பேராதனை விவசாயத் திணைக்களத்தின், விரிவாக்கம் மற்றும் பயிற்சி நிலையத்திற்காக பிராந்திய பெறுகைக்குழு தலைவரினால் பயிர் மேம்பாடு மற்றும் களை ஒழிப்புக்காக பொருத்தமான இயந்திரங்களை அறிமுகப்படுத்தும் திட்டத்திற்காக 2022-03-29 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட விலைமனுக்கோரல் திகதிகள் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளன.

02. விலைமனு ஆவணம் மற்றும் விலைமனு படிவத்தை பெற்றுக்கொள்ள முடியுமான காலம் 2022.04.26 ஆம் திகதி பி.ப. 2.00 வரை நீடிக்கப்படும். அனைத்து விலைமனுக்களிலும் செல்லுபடியான கால எல்லை மற்றும் விலைமனுப் பிணை செல்லுபடிக்காலம் 07 நாட்கள் நீடிக்கப்படல் வேண்டும்.

03. விலைமனுக்களை ஏற்பது 2022.04.27 ஆம் திகதி மு.ப. 10.30க்கு நிறைவு செய்யப்படும். விலைமனுக்களை ஏற்பது முடிவுற்ற உடன் விவசாய திணைக்களத்தின் விரிவாக்கம் மற்றும் பயிற்சி நிலையத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

04. ஏனைய அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் 2022.03.29 ஆம் திகதிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு மாற்றமின்றி நீடிக்கும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**விரிவாக்கம் மற்றும் பயிற்சி நிலையம்,**
**விவசாயத் திணைக்களம், பேராதனை**
**தொலைபேசி இலக்கம் - 075-9251219, 081-2389127**

## பெறுகை அறிவித்தல்

### சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை – வெலிசர

வெலிசர, சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலையின் பிராந்திய கேள்விக் குழுவினால் கீழ் குறிப்பிடப்பட்ட வழங்கல்களை பெற்றுக்கொள்வதற்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | வழங்கல் | மீளளிக் கப்படும் விலைமனு பிணை | தகைமை | கேள்விமனு இலக்கம் |
|---|---|---|---|---|
| 01 | சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை அறைக்கான மத்திய வளிச் சீராக்கி அமைப்பு ஒன்றை பொருத்துவதற்காக உட்கூரையை அமைத்தல் | 30,400.00 | C9 அல்லது அதற்கு மேல் மற்றும் EM 5 அல்லது அதற்கு மேல் | WL/07/2022 |

01. மீளளிக்கப்படாத வைப்பான ரூபா 2500.00 தொகையை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை வைத்தியசாலை சிறாப்பர் பிரிவில் செலுத்திய பின் 2022.04.18 ஆம் திகதி தொடக்கம் 2022.05.08 ஆம் திகதி வரை தேவையான விலைமனு ஆவணத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

02. பூர்த்தி செய்யப்பட்டு முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் கேள்விமனு இலக்கம் மற்றும் மூலப்பிரதி என குறிப்பிட்டு 2022.05.08 ஆம் திகதி மு.ப. 10.00க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலைக்கு பதிவுத் தபாலில் அல்லது கைகளால் கொண்டுவந்து பணிப்பாளர் அலுவலகத்திற்கு ஒப்படைக்க முடியும். 2022.05.08 ஆம் திகதி மு.ப. 10.00க்கு விலைமனுக்கள் திறக்கப்படுவதோடு, அந்த சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர் நியமித்த அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும். தாமதித்து கிடைக்கின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதோடு, விலைமனு தொடர்பில் இறுதி முடிவை எடுக்கும் உரிமை சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலையின் பெறுகைக் குழு வசமானது என்று மேலும் கூறிக்கொள்கிறோம்.

**தலைவர்**
**பிராந்திய பெறுகைக்குழு**
**சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை - வெலிசர**
**தொலைபேசி இலக்கம் - 0112958271 (112)**
**தொலைநகல் இலக்கம் - 0112958272**

NSB

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### பாடசாலை பைகள் மற்றும் அப்பியாசப் புத்தகங்களின் பெறுகை

### தேசிய சேமிப்பு வங்கி

கீழே விபரிக்கப்பட்டவாறான பாடசாலை பைகள் மற்றும் அப்பியாசப் புத்தகங்களை வழங்குவதற்காக புகழ்வாய்ந்த தயாரிப்பாளர்கள்/ வழங்குநர்கள் அல்லது அவர்களின் தர அங்கீகாரம் பெற்ற இலங்கையிலுள்ள உள்ளூர் முகவர்கள் ஆகியோரிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

| கேள்வி இலக்கம் | உருப்படி | அளவு | மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் ரூபாவில் | விலைமனு உத்தரவாதப் பெறுமதி - ரூபாவில் | செல்லுபடியாகும் காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| NSB/PT/2022/10 | பாடசாலை பைகள் | 50,000 | 8,500 | 375,000 | 119 நாட்கள் |
| NSB/PT/2022/09 | அப்பியாசப் புத்தகங்கள் | 250,000 | 3,500 | 100,000 | 105 நாட்கள் |

1. முகவரொருவராக அல்லது உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது எந்தவொரு கேள்விதாரருக்கு அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவருக்காக அல்லது அவரின் சார்பாக செயற்படுபவர் கேள்விக்கு விண்ணப்பிப்பதற்கு முன்னராகவும் கேள்வியை வழங்கிய பின்னரும் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்வது கட்டாயமானதொன்றாகும்.
2. கொழும்பு-03, காலி வீதி, 255 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல் பிரிவின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். படிவங்கள் 2022.04.18 ஆம் திகதியிலிருந்து 2022.05.10 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றின் மூலமாக படிவங்கள் வழங்கப்படும்.
3. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் தேசிய சேமிப்பு வங்கியினால் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் மேலே சுட்டிக் காட்டியவாறு கேள்விக்கு உரித்தான பெறுமதிக்கான வங்கி உத்தரவாதம்/ விலைமனு பிணையத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமெனவும் இந்த உத்தரவாதமானது வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதாகவும் இந்த உத்தரவாதமானது முறையே பாடசாலை பைகள் மற்றும் அப்பியாசப் புத்தகங்கள் குறைந்தது 119 மற்றும் 115 நாட்களுக்கு கேள்வியை திறக்கும் திகதியிலிருந்து செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் 2022.05.11 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன் மு.ப. 10 மணிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
5. தேசிய சேமிப்பு வங்கியானது எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்குமான உரிமையையும் விலைமனுவொன்றின் பகுதியொன்றையும் எந்தவொரு காரணங்களையும் முன்வைக்காமல் ஏற்றுக் கொள்வதற்குமான உரிமையை கொண்டுள்ளது.

மேலதிக விபரங்களை வழங்கலுக்கான உயர்மட்ட சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர் - கூட்டுறவு பெறுகைக் குழு - உயர்மட்டம்,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**இல.: 255, காலி வீதி, கொழும்பு-03.**

## கல்வி அமைச்சு

## தேசிய கல்வியியல் கல்லூரியை தாபித்தல்

## பதவி வெற்றிடங்கள் (ஒப்பந்த அடிப்படையில்)

நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 1/2019 ஆம் இலக்க 2019.03.15ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம், பின்வரும் பதவிகளுக்கான தகைமையும் சுறுசுறுப்புமுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01. கணிய அளவையியலாளர்
### (Q.S.) (PS 4 - வகுதி A) - 01 பதவி வெற்றிடம்

**தகைமைகள்: (கீழேயுள்ள i அல்லது ii அல்லது iii இற்கானது)**

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணிய அளவையியலில் பெற்ற பட்டமொன்று.

**அல்லது**

கணிய அளவையியல் பட்டத்திற்கு நிகரான தகைமையென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று

**அல்லது**

கணிய அளவையியலில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட இணைந்த அங்கத்துவமொன்று/ நிகரான தொழில்சார் தகைமையொன்று.

**அல்லது**

கணிய அளவையிடலுக்கு இசைவான துறைக்கு உரித்தான பதவிக்காக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய திறன் தரநிலை 7 (NVQ-7) இற்குக் குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

கணிய அளவையியலில் ஆகக் குறைந்தது 5 வருட கால பட்டத்திற்கு பின்னான சேவை அனுபவம்.

ii. தொழில்நுட்ப துறைக்கு இசைவான துறைக்கு உரித்தான பதவிக்காக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய திறன் தரநிலை 6 (NVQ-6) இற்குக் குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

கணிய அளவையியலில் ஆகக் குறைந்தது 11 வருட கால பட்டத்திற்குப் பின்னான சேவை அனுபவம்.

iii. தொழில்நுட்ப துறைக்கு இசைவான துறைக்கு உரித்தான பதவிக்காக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய திறன் தரநிலை 5 (NVQ-5) இற்குக் குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

கணிய அளவையியலில் ஆகக் குறைந்தது 16 வருட கால பட்டத்திற்குப் பின்னான சேவை அனுபவம்.

**சம்பளம் :** மட்டம் PS 4 - ரூபா. 90,000/=

### 02. தொழில்நுட்ப அலுவலர் - சிவில்
### (PS 6 - வகுதி A) 01 பதவி வெற்றிடம்)

**தகைமைகள்: ( கீழேயுள்ள i அல்லது ii அல்லது iii இற்கானது)**

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியலில் பெற்ற பட்டமொன்று.

**அல்லது**

சிவில் பொறியியல் பட்டத்திற்கு நிகரான தகைமையென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று

**அல்லது**

சிவில் பொறியியலிற்கான அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட இணைந்த அங்கத்துவமொன்று/ நிகரான தொழில்சார் தகைமையொன்று.

**அல்லது**

சிவில் பொறியியல் இசைவான துறைக்கு உரித்தான பதவிக்காக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய திறன் தரநிலை 7 (NVQ-7) இற்குக் குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

ii. சிவில் பொறியியலிற்கு இசைவான துறைக்கு உரித்தான பதவிக்காக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய திறன் தரநிலை 6 (NVQ-6) இற்குக் குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

சிவில் பொறியியலில் ஆகக் குறைந்தது 5 வருட கால சேவை அனுபவம்.

iii. சிவில் பொறியியலிற்கு இசைவான துறைக்கு உரித்தான பதவிக்காக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய திறன் தரநிலை 5 (NVQ-5) இற்குக் குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

சிவில் பொறியியலில் ஆகக் குறைந்தது 10 வருட கால சேவை அனுபவம்.

**சம்பளம்:** மட்டம் PS 6 ரூபா. 55,000/=

**வயது:** விண்ணப்ப முடிவுத் திகதியன்று 64 வயதிற்கு குறைவாகவிருத்தல் வேண்டும்.

**மேலேயுள்ள பதவிகளுக்காக தேவைப்படும் திறன்கள்:**

i. அதிசிறந்த சமூகரீதியான தொடர்பாடல் (வாய்மூலம் மற்றும் எழுத்து மூலமானது) மற்றும் அறிக்கைகளை ஆங்கிலத்தில் எழுதும் ஆற்றல்.
ii. AutoCAD மற்றும் MS செயற்றிட்டம் அல்லது நிகரானவற்றிலுள்ள திறன்.
iii. MS Office package இல் முழுமையான அறிவுடன் கூடிய கணினி புலமை.
iv. சுதந்திரமாகவும் குழுவாகவும் பணியாற்றும் ஆற்றல் மற்றும் பல்வேறுபட்ட கடமைகளை முகாமைத்துவம் செய்யும் திறன்.

வெளிநாட்டு நிதி உதவியினாலான செயற்றிட்டங்களில் சேவையாற்றிய அனுபவம், கட்டட நிர்மாண ஒப்பந்தங்களை ஆள்வதற்கான நியதிகள், நிபந்தனைகள் மற்றும் சட்டங்களை உரிய வகையில் விளங்கிக்கொள்ளும் திறன்கள் மற்றும் ஆங்கிலத்தில் அறிக்கைகளை தயாரிக்கும் ஆற்றல் என்பன விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.

**வேலைவாய்ப்பு நியதிகள் மற்றும் நிபந்தனைகள்:**

ஆட்சேர்ப்பு முறைமையானது முழு நேர ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு அமைவதுடன் திருப்திகரமான செயற்பாட்டிற்கு உட்பட்டதாக வருடந்தோறும் புதுப்பிக்கப்படக்கூடியது. சேவை நிலையமானது ''இசுருபாய'' அல்லது நாரங்களவிலுள்ள வேலைத்தளமாக அமையும்.

**விண்ணப்பங்கள்:**

விண்ணப்பதாரர் தொடர்பான சுயவிபரப் படிவம் (CV), கல்விசார், தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் என்பவற்றோடு உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் தொடர்பு விபரங்கள் (கையடக்கத்தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி) ஆகியன அடங்கிய வகையிலான விண்ணப்பப்படிவம் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு 2022 மே மாதம் 06 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரியை வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பத்துடன் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

அரசாங்க/ அரச சார் துறையைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் அவர்களது விண்ணப்பங்களை திணைக்களங்களின் தலைவர்களுடாகவே அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

**மேலதிக செயலாளர் (பொறியியல்)/ செயற்றிட்ட பணிப்பாளர்,**
**கல்வி அமைச்சு,**
**தரை மாடி, ''இசுருபாய'',**
**பத்தரமுல்ல.**

# கரப்பந்தாட்ட மைதானம் அமைக்க அடிக்கல் நடல்

**(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)**

விளையாட்டுத்துறை அமைச்சின் 2 மில்லியன் ரூபா செலவில் அட்டாளைச்சேனை அஷ்ரப் ஞாபகார்த்த பொது விளையாட்டு மைதானத்தில் கரப்பந்தாட்டத் திடல் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெற்றது. இதன்போது, அட்டாளைச்சேனைப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ.அஹமட் சாபிர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கரப்பந்தாட்டத் திடல் அமைப்பதற்கான அடிக் கல்லினை உத்தியோகபூர்வமாக நட்டி வைத்தார்.



இந்நிகழ்வில், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உறுப்பினர் ஏ.எஸ்.எம்.உவைஸ், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஐ.எம். பாயிஸ், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஹுசைனுடீன், அட்டாளைச்சேனை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எம்.எச்.எம்.அஜ்வத், பாராளுமன்ற உறுப்பினர் வீரசிங்கவின் பிரதேச இணைப்பாளர் ஆசிரியர் எஸ்.எம். ஜெசீல்,பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மௌலவி எம்.பாயிஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வீரசிங்கவின் சிபாரிசுக்கமைவாக விளையாட்டுத்துறை அமைச்சினால் 2 மில்லியன் ரூபா அட்டாளைச்சேனை அஷ்ரப் ஞாபகார்த்த பொது விளையாட்டு மைதானத்தில் கரப்பந்தாட்டத்திடல் அமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை டெஸ்ட் அணியில் மீண்டும் மொஹமட் சிராஸ்



இலங்கை கிரிக்கெட் அணி அடுத்த மாதம் பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இந்த டெஸ்ட் தொடருக்காக 23 வீரர்கள் அடங்கிய உத்தேச இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை டெஸ்ட் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான லஹிரு திரிமான்னே மற்றும் இளம் வீரர் சரித் அசலங்க ஆகியோர் பங்களாதேஷ் டெஸ்ட் தொடருக்கான உத்தேச அணியில் இடம்பெறவில்லை.

அண்மையில் நிறைவுக்கு வந்த தேசிய சுபர் லீக் நான்கு நாள் கிரிக்கெட் தொடரில் நான்கு போட்டிகளில் விளையாடி 304 ஓட்டங்ளைக் குவித்து மீண்டும் போர்முக்கு திரும்பிய மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர் ரொஷேன் சில்வா மீண்டும் தேர்வாளர்களின் கவனத்தைப் பெற்று இலங்கை டெஸ்ட் குழாத்தில் உள்வாங்கப்பட்டுள்ளார்.

இறுதியாக நடைபெற்ற இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இலங்கை அணியில் இடம்பெறாத ஓஷத பெர்னாண்டோவும் மீண்டும் பங்களாதேஷ் டெஸ்ட் தொடருக்கான உத்தேச குழாத்தில் உள்வாங்கப்பட்டுள்ளார். அண்மையில் நிறைவுக்கு வந்த தேசிய சுபர் லீக் நான்கு நாள் கிரிக்கெட் தொடரில் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருதை அவர் தட்டிச்சென்றார்.

கண்டி அணிக்காக 3ஆம் இலக்க வீரராகக் களமிறங்கிய ஓஷத பெர்னாண்டோ, ஆறு போட்டிகளில் 721 ஓட்டங்களைக் குவித்தார். இதில் 4 சதங்களும், 3 அரைச்சதங்களும் அடங்கும்.

அண்மையில் நிறைவுக்கு வந்த தேசிய சுபர் லீக் நான்கு நாள் கிரிக்கெட் கொழும்பு அணிக்காக விளையாடிய 22 வயதான சகலதுறை வீரர் லக்ஷித மனசிங்க முதன் முறையாக இலங்கை டெஸ்ட் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார். கொழும்பு அணிக்காக நான்கு போட்டிகளில் 26.40 சராசரியில் 15 விக்கெட்டுகளை வீழ்த்தியதுடன், துடுப்பாட்டத்தில் அரைச்சதம் ஒன்றையும் பெற்றுக்கொண்டார்.

கொழும்பு அணிக்காக 4 போட்டிகளில் 12 விக்கெட்டுகளை வீழ்த்திய வேகப்பந்து வீச்சாளர் கசுன் ராஜிதவும் மீண்டும் டெஸ்ட் அணியில் இடம்பிடித்துள்ளார்.

27 வயதான வலதுகை மித வேகப்பந்து வீச்சாளரான மொஹமட் சிராஸ் மீண்டும் இலங்கை டெஸ்ட் அணியில் இடம்பிடித்துள்ளார். அண்மையில் நிறைவுக்கு வந்த தேசிய சுபர் லீக் நான்கு நாள் கிரிக்கெட் காலி அணிக்காக ஒரேயொரு போட்டியில் சிராஸ் விளையாடியிருந்தார். யாழ்ப்பாண அணிக்கெதிரான போட்டியில் களமிறங்கிய அவர் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

கோல்ட்ஸ் கழகத்துக்காக விளையாடி வருகின்ற அவர், கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற வளர்ந்துவரும் கழக அணிகளுக்கு இடையிலான மூன்று நாட்கள் கொண்ட கிரிக்கெட் தொடரில் களமிறங்கியதுடன், ஏசிஇ கேபிடல்ஸ் அணிக்கெதிரான போட்டியில் 9 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார். தொடர்ச்சியாக உள்ளூர் கழக மட்டப் போட்டிகளில் விளையாடி திறமைகளை வெளிப்படுத்தி வருகின்ற மொஹமட் சிராஸுக்கு பங்களாதேஷ் டெஸ்ட் தொடருக்கான உத்தேச அணியில் வாய்ப்பு வழங்க தேர்வாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். ஐசிசி இன் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் ஓர் அங்கமாக இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணி மே 8ஆம் திகதி பங்களாதேஷ் நோக்கி புறப்பட்டுச் செல்லவுள்ளது.




## 44th OBSERVER SLT- MOBITEL

**மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022**

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் **OBSERVER SLT- MOBITEL** மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022**

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022**

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது :..................

வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐

தேசிய மட்ட வீராங்கனை :..................

(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)

பாடசாலை :..................

வாக்களித்தவர் பெயர் :..................

முகவரி :..................

மொபைல் இல. :..................

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : ரூ. 2,500 2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்:**

**SLT- MOBITEL** நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 23-04-2022 இல. 04




# மே மாதத்தில் பிக் மேட்ச் ஆரம்பம் குருசிங்ஹவின் கனவு நனவாகும்

44வது ObserverSLT மொபிடெல் ஆண்டின் சிறந்த பாடசாலை துடுப்பாட்ட வீரர்களின் மிகவும் பிரபலமான போட்டியானது சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு விடுமுறையின் பின்னர் சில பிரபலமான பாடசாலைகளுக்கிடையிலான பெரிய போட்டிகள் ஆரம்பமாகவுள்ள நிலையில் அதன் முதல் மாதத்தை நிறைவு செய்துள்ளது.





2022 ஆம் ஆண்டின் மிகவும் பிரபலமான பார்வையாளர் SLT மொபிடெல் பாடசாலை கிரிக்கெட் வீரர்கள் போட்டி இன்னும் இரண்டு வாரங்களில் மே மாதத்தில் நுழைய விருக்கும் நிலையில், சீசனின் பெரிய போட்டிகள் ரோயல் இடையேயான ப்ளூஸ் சண்டையில் மிகப் பெரிய போட்டியுடன் தொடங்க உள்ளது.

அடுத்த மாதம் நடக்கும் Battle of the Blues பெரிய போட்டியை அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிலையில், இந்த வாரம் மிகவும் பிரபலமான பாடசாலை மாணவர் துடுப்பாட்ட வீரர் 2022 போட்டியில் Royal இன் Ahan Wickramasinghe பரபரப்பான முன்னிலை பெற்றார். புத்தாண்டு மற்றும் புனித வெள்ளி விடுமுறைகள் காரணமாக அனைத்து வேட்பாளர்களாலும் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவாக இருந்தபோதிலும், விக்கிரமசிங்க தனது வாக்கு எண்ணிக்கையை 3,598 ஆக நீடித்து ஒரு நெருக்கமான முன்னிலை பெற்றார்.

இதன் மூலம், முதல் இரண்டு வாரத் தலைவர் துனித் வெல்லாலகே 3,446 வாக்குகளைப் பெற்று இரண்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டார். அண்மைய வாக்கு எண்ணிக்கையில் மூன்றாவது இடத்தில் புனித பீற்றரின் ருசண்டா கமகே 2,503 வாக்குகளுடன் , விஷார பெர்னாண்டோ (ரிச்மண்ட் 2,312), பசன் சுவாஹாஸ் (புனித பெனடிக்ட் 1,967) மற்றும் கனிஸ்டன் கருணாரத்ன (எஸ். தோமஸ்' 1,80) ஆகியோர் உள்ளனர்.

சுவாரஸ்யமாக, 2022 ஆம் ஆண்டின் மிகவும் பிரபலமான பள்ளி மாணவி கிரிக்கெட் வீரர் போட்டியிலும் அதன் ஆரம்ப அட்டவணை தலைவர் இடம்பெயர்ந்தார். கடந்த வாரம் நுகேகொட அனுலா வித்தியாலயத்தின் தலைவி கௌசினி நுத்யங்கவிற்கு பதிலாக பன்னிபிட்டிய தர்மபால கல்லூரியின் சுஷாதி கௌசல்யா நியமிக்கப்பட்டார்.

கௌசல்யா 2,108 வாக்குகள் பெற்று முன்னிலையும், நூத்யங்கா 1,901 வாக்குகள் பெற்று இரண்டாவது இடத்தையும் பிடித்தனர். மூன்றாவது இடத்தில் வாதுவ மத்திய கல்லூரியின் நவோத்யா நேத்மினி 1,799 வாக்குகளைப் பெற்றும், மொரட்டுவை இளவரசி வேல்ஸ் கல்லூரியின் மனுடி துலான்சா நாணயக்கார (1,238) மற்றும் ரத்கம தேவபதி ராஜா கல்லூரியைச் சேர்ந்த இமேஷா துலானி (1,078) ஆகியோர் உள்ளனர்.

இளம் பாடசாலை மாணவர்களும், பழைய சிறுவர்களும் உற்சாகத்துடன் செயல்படுவதுடன், தங்கள் பள்ளிகளுக்கான உண்மையான உணர்வுகளுடன் விசுவாசத்தைப் புதுப்பித்துக்கொள்வதால், பெரிய போட்டிகள் எப்போதும் ஒரு புதிய தாளத்தைக் கொடுக்கும்.

இந்த பிக் மேட்ச் அரங்குகள் இறுதியில் அந்தந்தப் பள்ளிகளின் பழைய மாணவர்களைச் சந்திக்கவும், வாழ்த்தவும், நூல்களை மாற்றிக் கொள்ளவும், குறிப்பாக முக்கியமான சந்தர்ப்பத்திற்காக வெளிநாட்டில் உள்ளவர்களை ஆண்டுதோறும் சந்திக்கும் இடங்களாக மாறிவிடும்.

வெளிநாடுகளில் வசிக்கும் பெரும்பாலான பழைய சிறுவர்கள், தங்கள் பள்ளி நண்பர்களைச் சந்திக்கவும், நினைவுப் பாதையில் செல்லவும் மார்ச் மாதம் இலங்கைக்கு வருடாந்திர கிரிக்கெட் யாத்திரையைத் திட்டமிடுவது வழக்கம். ஜனவரி தொடக்கம் வரை கோவிட்19 ஆல் பாடசாலை கால அட்டவணைகள் தொடர்ந்து பாதிக்கப்பட்டதால், அந்த வழக்கமான பெரிய போட்டி சாளரம் இரண்டாவது முறையாக இல்லாமல் போய்விட்டது. ஆனால் தொற்றுநோயின் தாக்கம் குறைவதால், மே மாதத்தில் பெரிய போட்டி உணர்வை அனுபவிக்க முடியும்.

1983 மற்றும் 1984 ஆம் ஆண்டுகளில் ஒப்சர்வர் பாடசாலை துடுப்பாட்ட வீரரை வென்ற முதல் நளந்தியன் மஹாநாம ஆவார். மஹாநாமவின் ஆதிக்கத்திற்குப் பிறகு, மற்றொரு நாலந்தியானான குருசின்ஹ அடுத்த ஆண்டு 1985 இல் விரும்பத்தக்க பட்டத்தை வென்றார்.

55 வயதான இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரரும், இலங்கை தேசிய அணியின் முன்னாள் கிரிக்கெட் முகாமையாளருமான குருசின்ஹ, 1985 ஆம் ஆண்டு தான் வென்ற ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட்டர் பட்டம் தனது கிரிக்கெட் வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்தது என்றார்.

"ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட்டர் ஆஃப் தி இயர் ஷோ சிறந்த கிரிக்கெட் வீரர்களை உருவாக்கியது மட்டுமல்லாமல், ஐசிசி எலைட் பெனலில் இன்னும் பணியாற்றும் குமார் தர்மசேன போன்ற சர்வதேச அளவிலான நடுவரையும் உருவாக்கியுள்ளது. சிறந்த சேவையை வழங்கும் பயிற்சியாளர்கள் மற்றும் பொறுப்பாளர்களின் அயராத பாத்திரங்களைப் பாராட்ட நாம் மறந்துவிடக் கூடாது," என இலங்கை அணியின் முகாமையாளர் மற்றும் தேர்வாளராக முக்கியப் பங்காற்றிய குருசின்ஹ மேலும் கூறினார்.

# காரைதீவில் சித்திரை புத்தாண்டு கலாசார விளையாட்டு விழா

**(காரைதீவு குறூப் நிருபர் சகா)**

சுபகிருது சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டும் காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 39வது ஆன்டு நிறைவை முன்னிட்டும் காரைதீவு விளையாட்டுக் கழகமும் விபுலாநந்தா சனசமூக நிலையமும் காரைதீவு பிரதேச செயலகமும் இணைந்து நடாத்திய 24வது மாபெரும் கலாசார விளையாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

காலை நிகழ்வான மரதன் ஓட்டமானது கண்ணகி அம்மன் ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்டு காரைதீவு விளையாட்டு கழக காரியாலயத்தில் நிறைவுபெற்றது. மாலையில் விபுலானந்த மைதானத்தில் தலைவர் வி.அருள்குமரன் தலைமையில் கலாசார விளையாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து சிறப்பித்தார். காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன், தவிசாளர் கி.ஜெயசிறில் ஆலோசகர்களான செ.இராமகிருஸ்ணன்,வே. இராஜேந்திரன் உள்ளிட்ட அதிதிகளும் கலந்து சிறப்பித்தனர்.

கல்வி சாதனையாளர்கள் தங்கப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஏப்ரல் மாதம் 18ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.